போணி ஈ. சுவீனி (SBN 176174)
ஸ்ரீபனீ வை. சோ (SBN 291903)
கோஸ்பெல்ட LLP
600 Montgomery Street, Suite 3200
சான் பிரான்சிஸ்கோ , CA 94111
(415) 633-1908
(415) 633-4980 fax
bsweeney@hausfeld.com
scho@hausfeld.com

மிச்சேல் டீ . கோஸ்பெல்ட (pro hac vice pending)
ஸ்கொட் ஏ. கில்மோர் (SBN 284961)
கோஸ்பெல்ட் LLP
1700 K Street NW, Suite 650
வோசிங்டன் டிசி 20006
(202) 540-7200
(202) 540-7201 fax
mhausfeld@hausfeld.com
sgilmore@hausfeld.com

வழக்குத்தொடுநர்களுக்கான வழக்கறிஞர்கள்

# அமெரிக்காவின் மாவட்ட நீதி மன்றம் மத்திய மாவட்டம் கலிபோர்ணியா

| | |
|---|---|
| றோய் மனோச்குமார் சமதானம், றமேஸ் தவராஜன் , வித்தியா ஜெயக்குமார் , றமணன் சிவலிங்கம்இ சாந்தி பத்மநாதன், சமன் பெராரா, நிமல் ஜெயசூரியா, வசந்தி ரட்ணசிங்கம், சுரேஸ் ஜெயபாலன் , செந்தில் புவனேஸ்வரன் , மயூரன் ராஸ்குமார்,<br><br>வழக்குத்தொடுநர்கள்,<br><br>v.<br><br>நந்தனசேன கோத்தபாய ராஜபக்ச,<br><br>*பிரதிவாதி.* | இல : 2:19-cv-02626-JFW-PLA<br><br>மதிப்பிற்குரிய. ஜோன் எப் வோல்டர்<br><br>**முதலாவது திருத்தப்பட்ட முறைப்பாடு**<br><br>நீதிபதி வழக்கு கோரப்பட்டது |

# உள்ளடக்கம்

அறிமுகம் ........................................................................................................
நீதி வரம்பும் இடமும் ..........................................................................................
வழக்குத்தொடுநர்கள் ..........................................................................................
பிரதிவாதி..............................................................................................................
தகவல்கள்...............................................................................................................
I. பின்னணி ..........................................................................................................
ராஜபக்ச ஆட்சி : இலங்கையில் அரசியல் இன ஒடுக்குமுறை ..........................
கோத்தபாயவின் கட்டுப்பாட்டில் இருந்த இராணுவம் மற்றும் பொலிஸ். ................
கோத்தபாயாவின் கட்டுப்பாட்டில் இருந்த சித்திரவதை இடங்கள் . .......................
கோத்தபாயவின் வெள்ளை வான்கள்:மனித உரிமைமீறல் வடிவங்கள் .................
II.றோய் சமதானத்தின் சித்திரவதை ......................................................................
றோயினுடைய கைது ...........................................................................................
சர்வதேச அவதானிப்பாளர்கள் — ஆனால் சுதந்திரமில்லை.................................
''எவரும் உனக்கு இங்கு உதவமுடியாது'': சாத்தியா வீதி தடுப்பு முகாமில் சித்திரவதை ...........................................................................................
பூசா தடுப்புமுகாமிற்கு மாற்றம் ...........................................................................
பலவந்த ஒப்புதல் வாக்குமூலம்.............................................................................
III. ரமேஸ் தேவராஜனின் சித்திரவதை ....................................................................
கிளியின் ஆசனமுறை : சிஐடி இன்ஸ்பெக்டர் நிசாந்த டி சில்வா இன் சித்திரவதை ...........................................................................................
அரச புலனாய்வுச் சேவையினரால் சித்திரவதை .....................................................
IV. சாந்தி பத்பநாதனின் சித்திரவதை .....................................................................
குடும்பத்தை பார்க்கச் செல்லுதல் .........................................................................
மவுண்ட் லெவனியா பொலிஸ் நிலையத்தில் நடந்த பயங்கரம் ............................
பொலிசாரின் பழிவாங்கல்கள் ''அவளது நாயைக் கொன்றது போல் அவனையும் கொல்லுவோம்'' ...........................................................................
V. சுரேஸ் ஜெயபாலனின் சித்திரவதை ....................................................................
போர்க்குற்ற சாட்சியங்களை பாதுகாத்தல்.............................................................
நான்காம் மாடியில் சித்திரவதை''.........................................................................
பாலியல் சித்திரவதை ...........................................................................................
ஜோசப் முகாமிற்கு மாற்றம்..................................................................................

VI. வித்தியா ஜெயக்குமாரின் சித்திரவதை ..........................................................
போர் வலயத்தில் இருந்து இடப்பெயர்வு மற்றும்
கணவன் மனைவி போல் நீ யாருடனாவது படுக்க வேண்டும் - இராணுவ முகாமில் பாலியல் அடிமைத்தனம்
நான்காம் மாடியில் சித்திரவதை
இராணுவ சமையல் முகாமில் பாலியல் அடிமைத்தனம். ....................................
பொலிஸ் நிலையத்தில் பாலியல் வன்முறை .....................................................
VII. நிமல் ஜெயசூரியாவின் சித்திரவதை .............................................................
VIII. சமன் பெரேராவின் சித்திரவதை ...................................................................
நான்காம் மாடியில் சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை" ................................
பாதுகாப்பு செயலாளரிடம் இருந்து வந்த ஒரு தொலைபேசி அழைப்பு...................
IX. செந்தில் புவனேஸ்வரனின் சித்திரவதை ........................................................
கடத்தல் ............................................................................................................
ஜோசப் முகாமில் சூடுவைத்தல் ..........................................................................
X. ரமணன் சிவலிங்கத்தின் சித்திரவதை ...............................................................
கைதும் தெமட்டக்கொட பொலிஸ் நிலையத்தில் சித்திவதையும்............................
கடத்தலும் தொடர்புகள் அற்ற நிலையில் தடுத்து வைத்தலும் ............................
சித்திரவதை , பாலியல் வன்முறையின் கீழ் விசாரணை ........................................
XI. வசந்தி ரட்ணசிங்கத்தின் விசாரணை ...............................................................
புல்மோட்டைப் பொலிஸ் நிலையத்தில் பாலியல் வன்முறை ..................................
XII. மயூரன் ராஜ்குமாரின் சித்திரவதை ...............................................................
ஜோசப் முகாமில் சூடு வைத்தல் .........................................................................
XIII. தொடர்ந்து இடம்பெறும் தண்டனையில் இருந்து பாதுகாப்பு ..........................
மோசமாகப் பேணப்பட்ட இலங்கையின் இரகசியம் : சித்திரவதை பற்றிய அறிக்கைகள் அடிக்கடி கோத்தபாயாவின் கவனத்திற்கு வந்தது ..........................
நீதியை தடுத்த கோத்தபாய தண்டணையிலிருந்து பாதுகாக்கும் கலாச்சாரம்........
நடவடிக்கை I: சித்திரவதை ......................................................................................
நடவடிக்கை II: தாக்குதல் .......................................................................................
நடவடிக்கை III: தீண்டுதல் .......................................................................................
நடவடிக்கை IV: திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட மன உழைச்சல் .............................

## அறிமுகம்

1. 2005 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை இலங்கைத் தீவில் ஒரு அமெரிக்க பிரஜை கொடிய இன ஒடுக்குமுறை மற்றும் அரசியல் அடக்குமுறை நடவடிக்கையை தலைமை தாங்கினார். அந்த அமெரிக்கன் கோத்தபாய ராஜபக்சவாக இருந்தார் ( கோத்தபாய அல்லது பிரதிவாதி). 2005 ஆம் ஆண்டு அவரது சகோதரரான மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியான பின்னர் கோத்தபாய இலங்கையின் பாதுகாப்பு செயலாளர் ஆக்கப்பட்டார். லோயாலா சட்டக் கல்லூரியின் தகவல் தொழிநுட்ப திணைக்களத்தில் தன்னுடைய வேலையைக் கைவிட்டு விட்டு இலங்கைப் பாதுகாப்பு படைகளின் கட்டளைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார் அத்துடன் பாதுகாப்பு படைகளை அரசியல் எதிரிகள் மீது கட்டவிழ்த்து விட்டார்.

2. ராஜபக்ச அரசானது நாட்டின் பெரும்பான்மையினரான சிங்களவர்களை நீண்ட காலமாக தமது உரிமைகள் நசுக்கப்பட்டு வந்த சிறுபான்மை தமிழ் மக்களுக்கு எதிராக கடுமையான சிங்கள தேசியவாதத்தை தூண்டி வந்தது. கோத்தபாய பதவிக்கு வந்த போது இலங்கையானது தீவின் வடக்கு மற்றும் கிழக்கில் சுதந்திர தமிழ் அரசிற்காக போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையிலான தமிழ்ப் பிரிவினைவாதிகளுக்கும் சிங்கள அரசிற்கும் இடையில் சிவில் யுத்தம் ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக இடம்பெற்று வந்திருந்தது.

3. கோத்தபாய ஏற்கனவே கொடுமையான போரினை ஒரு புதிய மிருகத்தனமான கட்டத்திற்கு கொண்டு வந்தார். அவருடைய சுயசரிதையை கூறுகையில் இது கோட்டாவினுடைய போர் இராணுவ வலிந்து தாக்குதல்களை் என்ற வடிவில் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான மற்றும் சிலவேளைகளில் வேண்டுமென்று நடாத்தப்பட்ட தாக்குதல்களை எந்தப் பிடிகளும் தடுக்கவில்லை

4. மே 2009 இல் , இலங்கை அரசாங்கம் LTTE யினை தோற்கடித்து அழித்தார்கள். அது டுவுவுநு யின் தலைவர்களின் பெரும்பாலானவர்களை கொன்றதுடன் ஆயிரக்கணக்கான தமிழ்ப் பொதுமக்களை கொன்றொழித்ததுடன் போரில் தப்பிப் பிழைத்த கிட்டத்தட்ட 300 000 பேரை இடைத்தங்கல் முகாம்களில் அடைத்தது. போர் வலயத்தில் இருந்து வந்த ஒவ்வொருவரும் விசாரிக்கப்பட்டார்கள் அத்துடன் தடுப்பு முகாம்களிலும் சித்திரவதை முகாம்களிலும் ஆயிரக்கணக்கானவர்கள் காாணமற்போனார்கள்.

5. போர் முடிவுக்கு வந்து பல ஆண்டுகள் கடந்தும் கொடுமையான இந்த முறை தொடர்ந்தும் அமுலில் இருந்தது. இன்றுவரை குற்றம்புரிந்தவர்கள் தண்டனைகளிலிருந்து பூரண பாதுகாப்பை அனுபவித்து வருகின்றார்கள். தற்போதைய அரசாங்கத்தின் கீழ் கூட ராஜபக்சவில் இருந்து வந்த குற்றஞ்சாட்டப்பட்ட சித்திரவதையாளர்கள் மற்றும் யுத்தக்குற்றவாளிகள் பதவியுயர்வு வழங்கப்படுகின்றனர் அத்துடன் இழிவானமுறையில் மனித உரிமைகள் துஸ்பிரயோகங்கள் பற்றிய விசாரணைகளை தலைமைதாங்க அத்துடன் சித்திரவதை பற்றிய ஐ.நாவின் கூட்டத்தில் அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்யக் கூட ஒதுக்கப்பட்டார்கள்.

6. இந்த வழக்கின் வழக்குத்தொடுநர்கள் தமிழ்ப் பொதுமக்களின் ஒரு சிறிய பகுதியினரை பிரதிநிதித்துவம் செய்கிறார்கள். இவர்கள் கோத்தபாயவின் கட்டளையின் கீழ் பாதுகாப்பு படையினரால் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு பாலியல்வன்புணர்வு செய்யப்பட்ட LTTE போர்க் கைதிகள், மற்றும் ராஜபக்ச ஆட்சியின் விமர்சகர்கள் ஆவர். வழக்குத் தொடுநர்களாக:

- **றோய் சமதானம்** - ஒரு கனேடியத் தமிழர் இலங்கைக்கு விஜயம் செய்த போது கைது செய்யப்பட்டார். சமதானம் பைப்புகள் , துப்பாக்கியின் பின்புறம் போன்றவற்றால் அடிக்ககப்பட்டதுடன் அவரது மனைவி பிள்ளைகள்

பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு கொல்லப்படுவார்கள் என்ற அச்சுறுத்தலின் கீழ் பலவந்தமாக ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது.

- **றமேஸ் தேவராஜன்** – ஒரு தமிழ் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் , தேவராஜன் பெற்றோலில் நனைக்கப்பட்ட ஒரு பொலித்தீன் பையினால் மூச்சுத்திணறச் செய்யட்டதுடன் ,சீலிங்கில் இருந்து தலைகீழாக கட்டித் தொங்கவிடப்பட்டதுடன் பொலிசாரால் அவரது குதிக்கால்களில் இரும்புக் கம்பியால் அடிக்கப்பட்டார்.

- **சாந்தி பத்மநாதன்** – அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்த ஒரு இளம் தமிழ்ப் பெண், பத்மநாதன் கடத்தப்பட்டு பொலிசாரால் விசாரிக்கப்பட்டதுடன் மீண்டும் மீண்டும் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு அடிக்கப்பட்டு சிகரெட்டால் சுடப்பட்டதுடன் மிகவும் சூடான உலோக கம்பியினாலும் சுடப்பட்டார்.

- **நிமல் ஜெயசூரியா** – ஒரு சிங்கள மனித உரிமைகள் செயற்பாட்டாளர், ஜெயசூரியா பொலிசாரால் அடிக்கப்பட்டதுடன் தமிழ்க் கைதிகள் சித்திரவதைக்குள்ளாவதைப் பார்ப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார், அவருடைய சகபணியாளர்களை கண்டிக்குமாறு அவருக்கு அழுத்தங்கொடுக்கவே இவையாவும் இடம்பெற்றது.

- **வித்தியா ஜெயக்குமார்** – சிவில் சேவையாளராக LTTE இன் அரசாங்கத்தில் இருந்த ஒரு இளம் தமிழர். இவர் இராணுவத்திடம் சரணடைந்தார், ஜெயக்குமார் ஒரு இராணுவமுகாமிலும் பொலிஸ் நிலையங்களிலும் வெளித் தொடர்புகள் எதுவும் இல்லாமல் வைக்கப்பட்டிருந்தார் அத்துடன் பிடிக்கப்பட்ட மற்றைய தமிழ்ப் பெண்களுடன் மூன்று வருடத்திற்க மேலாக பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் சித்திரவதை போன்றவற்றை அனுபவிக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்.

- **சமன் பெரேரா** – பாதுகாப்பு படைகளில் உறுப்பினராக இருந்த ஒரு சிங்களவர் , அவர் LTTE யினருக்கு உதவியதாக குற்றஞ்சாட்டப்பட்டார், பெரேராவிக்கு மேற்கொள்ளப்பட்ட சித்திரவதை முள்ளுக் கம்பியைக் கொண்ட ஒரு ஊலோகப் பைப்பை அவரது மலவாசலுக்குள் புகுத்தலை உள்ளடக்கியிருந்தது.

- **றமணன் சிவலிங்கம்** – LTTE இனை ஆதரித்தமைக்காக கைது செய்யப்பட்ட ஒரு தமிழ் மாணவன். சிவலிங்கம் திரும்ப திரும்ப சூடான உலோகத்தால் சுடப்பட்டடன் பொற்றோலால் மூச்சுத்திணறச் செய்யப்பட்டார் அத்துடன் மிகவும் குளிரான கம்பியால் மலவாசல் வழியாக வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார்.

- **சுரேஸ் ஜெயபாலன்** – ஒரு தமிழ் LTTE உறுப்பினர், மனித உரிமைகள் மீறல்களை ஆவணப்படுத்தும் ஒரு தொண்டு நிறுவனத்தில் பணியாற்றினார். ஜெயபாலன் பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார். அவர்கள் அவரை சிகரெட்டினால் சுட்டதுடன் பெற்றோலில் நனைக்கப்பட்ட பையால் மூச்சுத்திணறச் செயதார்கள் அத்துடன் அவர் மல வாசல் வழியாக பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார்.

- **மயூரன் ராஜ்குமார்** – ஒரு தமிழ் அரசாங்கப் பாடசாலை ஆசிரியர், LTTE இனருக்கு உதவி செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டார், தடுப்பு முகாம் ஒன்றில் வைக்கப்பட்டதுடன் , அடிக்கப்பட்டதுடன், சிகரெட்டுக்களால் சுடப்பட்டு, சூடாக்கிய கம்பியினாலும் சூடு வைக்கப்பட்டார்.

- **செந்தில் புவனேஸ்வரன்** – யுகேயில் இருந்த ஒரு தமிழ்ப் பட்டதாரி மாணவன் , புவனேஸ்வரன் வீட்டுக்குச் சென்றபோது பொலிசாரால் கடத்திச் செல்லப்பட்டு தடுப்பு முகாமிற்கு அனுப்பப்பட்டு அங்கு வைத்து அடிக்கப்பட்டு , அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுப்பதற்கு சம்மதிக்கும் வரைக்கும் அவருடைய தோல் உரியும் வரையும் சூடாக்கிய எலோகத்தால் திரும்ப திரும்ப சுடப்பட்டார்.

- **வசந்தி ரட்ணசிங்கம்** – LTTE அரசாங்கத்தின் நிதிப் பிரிவில் பணியாற்றிய ஒரு இளம் தமிழ்ப் பெண், ரட்ணசிங்கம் போர் வலயத்தை விட்டுத் தப்பியோடும் போது பிடிக்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டு அவரை விசாரணை செய்தவர்களால் மரத்தடியால் பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டார்.

7. உலகப் போர் II இன் நுரெம்பேர்க் மற்றும் ரோக்கியோ நீதிமன்றங்கள் இடம்பெற்ற காலத்தில் அமெரிக்க மற்றும் சர்வதேச சட்டத்தின் கீழ் இந்த அக்கிரமங்களுக்கு கோத்தபாய ராஜபக்சவே கட்டளையிடும் பொறுப்பினைக் கொண்டுள்ளார். அவரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பாதுகாப்பு படைகள் பாரியளவில் சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டுவருகிறார்கள் என அவருக்கு தெரியும் அல்லது தெரிந்திருக்க வேண்டும். இந்த துஸ்பிரயோகங்களை தடுப்பதற்குப் பதிலாக அவர் அவற்றை தூண்டியுள்ளார் அல்லது சகித்துக் கொண்டிருந்துள்ளார். குற்றவாளிகளை தண்டிப்பதற்குப் பதிலாக அவர் நீதியை தடுத்து சாட்சிகளை கொல்லப்போவதாக அச்சுறுத்தல் விடுத்துள்ளார். அவர் சர்வதேச தொலைக்காட்சியில் தனது சித்திரவதையாளர்களுக்கு தண்டனையில் இருந்த பாதுகாப்பு வழங்குவதாக உறுதியளித்துள்ளார்: “இந்த நாட்டிற்குள் நான் எந்த விசாரணையையும் அனுமதிக்கப்போவதில்லை.... இது என்னுடைய இறுதி வார்த்தை”.

8. சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கும் சட்டம் மற்றும் கலிபோர்ணியா சட்டத்தின் கீழ் இழப்பீடு மற்றும் அபராத தொகைக்கான ஒரு சிவில் நடவடிக்கை இதுவாகும். அமெரிக்க பிரஜை என்ற அனுகூலத்தைக் கொண்டுள்ள கோத்தபாய அமெரிக்கச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படச் செய்வதையே வழக்குத்தொடுநர்கள் நாடிநிற்கின்றனர்.

## சட்ட அதிகார எல்லையும் இடமும்

9. 28 U.S.C. § 1331 இன் கீழ் வழக்குத்தொடுநர்களின் சித்திரவதை வழக்குகள் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவரை பாதுகாக்கும் சட்டத்தின் Pub. L. No. 102-256, 106 Stat. 73 (1992) (codified at note following 28 U.S.C. § 1350) (“TVPA”). கீழ் வருகின்றமையால் அவற்றின் மீது இந்த நீதிமன்னறம் சட்ட அதிகாரத்தை கொண்டுள்ளது.

10. ஒரே வழக்கின் பகுதியாக அல்லது முரண்பட்டதாக 28 U.S.C. § 1367 இன் கீழ் இந்த நீதிமன்றமானது வழக்குத்தொடுநர்களின் கலிபோனியா சட்ட இழப்பீட்டு கோரிக்கைகள் மீதான சட்ட அதிகார எல்லையைக் கொண்டுள்ளன.

11. 28 U.S.C. § 1391(b)(3) இன் கீழ் இடமானது சரியானது ஏனெனில் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் இந்த மாவட்டத்தின் நடைமுறை பற்றி தகவல் பரிமாறப்பட்டது அத்துடன் அது நீதிமன்றத்தின் தனிப்பட்ட சட்டவரம்பிற்கு உட்பட்டது.

## வழக்குதொடுநர்கள்

12. வழக்குத்தொடுநர் றோய் மனோச்குமார் சமதானம் தமிழினத்தைச் சேர்ந்த கனேடியப் பிரஜை. அவர் தற்போது கனடாவில் வசித்து வருகின்றார்.

13. வழக்குத் தொடுநர் பழிதீர்க்கும் நடவடிக்கைக்கு எதிரான பாதுகாப்பிற்காக றமேஸ் தேவராஜன் என்ற புனைபெயரில் வழக்கினை முன்னெடுக்கிறார். இவர் ஒரு இலங்கைத் தமிழர் தற்போது ஐரோப்பாவில் வசித்து வருகின்றார்.

14. வழக்குத்தொடுநர் பழிதீர்க்கும் நடவடிக்கைக்கு எதிரான பாதுகாப்பிற்காக சாந்தி பத்மநாதன் என்ற புனைபெயரில் வழக்கினை முன்னெடுக்கிறார். இவர் ஒரு இலங்கைத் தமிழர் தற்போது ஐரோப்பாவில் வசித்து வருகின்றார்.

15. வழக்குத் தொடுநர் பழிதீர்க்கும் நடவடிக்கைக்கு எதிரான பாதுகாப்பிற்காக நிமல் ஜெயசூரியா என்ற புனைபெயரில் வழக்கினை முன்னெடுக்கிறார். இவர் ஒரு இலங்கைச் சிங்களவர் அத்துடன் தற்போது ஐரோப்பாவில் வசித்து வருகின்றார்.

16. வழக்குத்தொடுநர் பழிதீர்க்கும் நடவடிக்கைக்கு எதிரான பாதுகாப்பிற்காக வித்தியா ஜெயக்குமார் என்ற புனைபெயரில் வழக்கினை முன்னெடுக்கிறார். இவர் ஒரு இலங்கைத் தமிழர் தற்போது ஐரோப்பாவில் வசித்து வருகின்றார்.

17. வழக்குத்தொடுநர் பழிதீர்க்கும் நடவடிக்கைக்கு எதிரான பாதுகாப்பிற்காக சமன் பெரேரா என்ற புனைபெயரில் வழக்கினை முன்னெடுக்கிறார். இவர் ஒரு இலங்கை சிங்களவர் தற்போது ஐரோப்பாவில் வசித்து வருகின்றார்.

18. வழக்குத்தொடுநர் பழிதீர்க்கும் நடவடிக்கைக்கு எதிரான பாதுகாப்பிற்காக வசந்தி றட்ணசிங்கம் என்ற புனைபெயரில் வழக்கினை முன்னெடுக்கிறார். இவர் ஒரு இலங்கைத் தமிழர் தற்போது ஐரோப்பாவில் வசித்து வருகின்றார்.

19. வழக்குத்தொடுநர் பழிதீர்க்கும் நடவடிக்கைக்கு எதிரான பாதுகாப்பிற்காக சுரேஸ் ஜெயபாலன் என்ற புனைபெயரில் வழக்கினை முன்னெடுக்கிறார். இவர் ஒரு இலங்கைத் தமிழர் தற்போது ஐரோப்பாவில் வசித்து வருகின்றார்.

20. வழக்குத்தொடுநர் பழிதீர்க்கும் நடவடிக்கைக்கு எதிரான பாதுகாப்பிற்காக றமணன் சிவலிங்கம் என்ற புனைபெயரில் வழக்கினை முன்னெடுக்கிறார். இவர் ஒரு இலங்கைத் தமிழர் தற்போது ஐரோப்பாவில் வசித்து வருகின்றார்.

21. வழக்குத்தொடுநர் பழிதீர்க்கும் நடவடிக்கைக்கு எதிரான பாதுகாப்பிற்காக மயூரன் ராஜ்குமார் என்ற புனைபெயரில் வழக்கினை முன்னெடுக்கிறார். இவர் ஒரு இலங்கைத் தமிழர் தற்போது ஐரோப்பாவில் வசித்து வருகின்றார்.

22. வழக்குத்தொடுநர் பழிதீர்க்கும் நடவடிக்கைக்கு எதிரான பாதுகாப்பிற்காக செந்தில் புவனேஸ்வரன் என்ற புனைபெயரில் வழக்கினை முன்னெடுக்கிறார். இவர் ஒரு இலங்கைத் தமிழர் தற்போது ஐரோப்பாவில் வசித்து வருகின்றார்.

## பிரதிவாதி

23. பிரதிவாதியான கோத்தபாய ராஜபக்ச ஒரு அமெரிக்க மற்றும் இலங்கைப் பிரஜை அத்துடன் அவர் தற்போது இலங்கையின் தலைநகர் கொழும்பில் வசித்துவருகின்றார்.

24. இலங்கையில் பிறந்த கோத்தபாய இலங்கையின் இராணுவத்தில் ஒரு சகாப்தத்திற்கு மேலாக இருந்த வேலையைத் தொடர்ந்து அமெரிக்காவிற்கு 1990 ஆம் ஆண்டளவில் சென்று வாழ்ந்து வந்தார். தகவல்கள் மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் கலிபோரிணியா லொஸ்ஆஞ்சிலில் உள்ள லோயல என்ற சட்டக் கல்லூரியில் யுனிக்ஸ் சிஸ்டம் நிர்வகிப்பவராக பணியாற்றினார்.2005 ஆம் ஆண்டு நவம்பர் அளவில் கோத்தபாயவின் சகோதரர் மகிந்த ராஜபக்ச இலங்கையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே காலப் பகுதியில் கோத்தபாய அவரது சகோதரால் பாதுகாப்புச் செயலாளராக பணியாற்றுவதற்கு நியமிக்கப்பட்டார். கோத்தபாய பாதுகாப்பமைச்சின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்ததோடு 2005 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியில் இலங்கை இராணுவத்திற்கும் 2005 தொடக்கம் ஆகஸ்ட் 2013 வரையான காலப் பகுதியில் பொலிஸ்படைக்கும் கட்டளைகளை வழங்கினார். 2015 இல் ஜனாதிபதித் தேர்தலில் அவரது சகோதரர் தோற்கடிக்கப்பட்ட பின்னர்

அவர் அந்தப் பதவியில் இருந்து சென்றார். அவருக்கு தற்போது உத்தியோகபூர்வமான பதவிகள் எதுவும் இல்லை.

25. இலங்கையில் பதவியில் இருந்தாலும் அத்துடன் நீண்டகாலத்தை வெளிநாட்டில் செலவிட்டிருந்தாலும் கோத்தபாய ஒரு போதும் கலிபோனியாவுடன் எந்த உறவுகளையும் துண்டித்துக் கொண்டதில்லை. அவரும் அவருடைய மனைவியும் தெற்கு கலிபோனியாவில் வதிவிடச் சொத்துக்களை சொந்தமாக வைத்திருந்துள்ளார்கள். கோத்தபாய கலிபோனியாவில் வியாபாரத்தை மேற்கொண்டு நிதிசேகரிப்பிலும் ஈடுபடுகின்றார் அத்துடன் லொஸ் ஆஞ்சலில் உள்ள தர்ம விஜய பௌத்த விகாரைக் கோவிலின் பணிப்பாளர்களில் ஒருவராக இருக்கின்றார். பதிலாக கோயி பதிலாக கலிபோனியாவிலுள்ள கோயிலும் அதனுடைய குருவும் ராஜபக்சாக்களின் நடவடிக்கைகளுக்கு ஆதரவுகேட்டு பொது தொடர்புகளை நடத்துவதுடன், அவர்களது தீவிர தேசியவாதசித்தாந்தத்தை தரமுயர்த்துவதற்கும் இந்தச் சட்ட நடவடிக்கையை கேலிசெய்வதற்கும் கூட அரசியல் பங்களிப்புகளை மேற்கொண்டுள்ளார்கள்.

## தகவல்கள்

## I. பின்னணி

### A. ராஜபக்ச ஆட்சி:<br>இலங்கையில் இன ஒடுக்கல் அரசியல் அடக்குமுறை

26. இந்தியாவின் தென்துருவத்திற்கு அப்பாலுள்ள ஒரு தீவான இலங்கை நான்கு நூற்றாண்டுகளுக்கு மேலாக காலனித்துவ ஆட்சிக்கும், பிரித்தல் மற்றும் வெல்லுதல் கொள்கைகளுக்கும் உட்பட்டு வந்தது. 1948 ஆம் ஆண்டு இலங்கை பிரிட்டனில் இருந்து சுதந்திரம்

பெற்ற பின்னர் பெரும்பான்மைச் சிங்கள இனத்தவர்கள் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார்கள் அத்துடன் தமிழர்களினதும் ஏனைய சிறுபான்மையினத்தவர்களின் உரிமைகளும் ஓரங்கட்டப்பட்டன.

27. பல வருட அரசியல் ஏமாற்றத்திற்குப் பின்னர் , இனங்களுக்கிடையேயான பதற்றம் வன்முறையாக வெடித்தது. 1983 யூலையில் பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமை திருப்புமுனையாக இருந்தது. 1983 ஆம் ஆண்டிலிருந்து 2009ஆம் ஆண்டு வரை தமிழீழ விடுதலைப் புலிகள் ( எல் ரீ ரீ ஈ அல்லது தமிழ்ப் புலிகள்) தழிழர்களுக்கான ஒரு சுதந்திர நாட்டிற்கான ஒரு சிவில் யுத்தத்தைப் முன்னெடுத்தார்கள்.

28. பல வருடங்களாக, LTTE நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் நேர்த்தியாக நிழல் அரசாங்கத்தைக் கொண்டிருந்தது. அதனுடைய ஆயுதப்படைகளை விட LTTE நீதிமன்றங்கள், பாடசாலைகள், பொது சுகாதாரம், நிதி மற்றும் உட்கட்டுமான ஒரு பொறுப்புவாய்ந்த நிர்வாகத்தை கொண்டிருந்தார்கள்.

29. பின்னர் 2005 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். சிங்கள பௌத்த தேசியவாதத்திற்கின் தீவிர ஆதரவாளர்கள் , மகிந்த மற்றும் கோத்த ராஜபக்ச ஆகியோர் இறுதி இராணுவத்தீர்வின் ஊடாக தமிழ்ப்புலிகள் உடனான போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு ஒரு பலமான ஆயுத போர் நடவடிக்கையை மேற்கொண்டார்கள். பாதுகாப்புச் செயலாளராக கோத்தபாய பொதுமக்களுக்கும் ஆயுததாரிகளுக்கும் இடையில் ஒரு சிறிய வேறுபாட்டையை கொண்டதாக தமிழர் எதிர்ப்பு நடவடிக்கைக்கு பிரதான சூத்திரதாரியாக இருந்தார்.

30. ராஜபக்ச அரசாங்கம் இராணுவம், பொலிஸ் படைகள் மற்றும் தமிழ் ஆயுதம் குழுக்களைப் பாவித்து அழிப்பு தாக்குதலை மேற்கொண்டார்கள். 2009 ஆம் ஆண்டு கால வசந்த காலத்தில் , LTTE யினர் தீவின் வடகிழக்கு கரையில் ஒதுக்கப்பட்டார்கள்.

ஆயிரக்கணக்கான திமிழ்ப் பொதுமக்கள் இலங்கை அரசாங்கத்தினால் ஒரு தலைப்பட்சமாக பாதுகாப்பு வலயம் என்று பிரகடனம் செய்யப்பட்ட ஒடுங்கிய பகுதிகளில் சிறை வைக்கப்பட்டார்கள். பொதுமக்கள் பாதிப்படைவதை தவிர்ப்பதற்காக பொதுமக்கள் ஒன்று கூடுவதற்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளாக இருந்தன. ஆயினும், பாதுகாப்பு வலயங்களில் தஞ்சம் புகுந்திருந்த பொதுமக்கள் சுப்பர் சொனிக் விமானங்கள், பலத்த ஆட்டிலறி எறிகணைத் தாக்குதல்களால் திரும்ப பிரும்ப தாக்கப்பட்டார்கள்.

31. போரின் இறுதி நாட்களின் போது, களைப்படைந்து போரில் உயிர் தப்பியவர்கள் வரிசைவரிசையான நீரேரிக்கு மேலாக ஒடுங்கிய ஒரு நடைப்பாதையான வட்டுவாகல் பாலத்தில் குவிந்ததுடன் இலங்கை இராணுவத்தின் கைக்குள் சென்றார்கள். ஆயிரக்கணக்கான தமிழர்கள் அரசாங்க முகாம்களுக்குள் தடுத்து வைக்கப்பட்டதுடன் அங்கு போர் முடிவடைந்த பின்னர் பல காலம் இருந்தார்கள்.

32. மே 18 2009 இல், LTTE இன் உயிர் தப்பிய தலைவர்கள் இராணுவத்திடம் சரணடைந்ததுடன் அவர்களில் பலர் ஒட்டுமொத்தமாக படுகொலை செய்யப்பட்டார்கள் அல்லது காணாமற்போனார்கள் ஏனையவர்கள் தடுத்து வைக்கப்பட்டார்கள். போரின் இறுதி மாதங்களில் 40000 தொடக்கம் 70000 வரையான பொதுமக்கள் இறந்ததாக ஐக்கிய நாடுகள் மதிப்பிடுகின்றது.

33. போர் முடிவடைந்து டுவுவுநு யினர் அழிக்கப்பட்டாலும், ராஜபக்ச அரசாங்கம் எண்ணிலடங்காத தமிழர்கள் மற்றும் சிங்கள அதிருப்தியாளர்கள் எனக்கருதப்படுவோர் திட்டமிட்ட வகையில் சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படும் பொருட்டு நாடு முழுவதும் தடுப்பு நிலையங்கள் தொடர்ந்தும் இயங்கி வந்தன. கொழும்பில் உள்ள புலனாய்வு அலுவலகங்ளில் இருந்து உள்ளூர் காவல் நிலையங்கள் மற்றும் காட்டுப் பகுதியில் இருந்த இராணு முகாம்கள் வரை நாடு முழுவதும் சித்திரவதை முறைகள்

வடிவங்கள் பொதுவானதாக இருந்தது. பொதுமக்கள் மீதான பரவலான திட்டமிட்ட தாக்குதல் கோட்டபாய ராஜபக்சவின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த இராணுவம் மற்றும் பாதுகாப்பு படைகளால் மேற்கொள்ளப்பட்டன.

## B. ஆயுதப்படை மற்றும் பொலிசாரை கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த கோத்தபாய

34. 25 நவம்பர் 2005 அளவில் கோத்தபாய ராஜபக்ச இலங்கைப் பாதுகாப்பமைச்சின் செயலாளர் ஆனார். இந்த நடவடிக்கைக்கு பொருத்தமாக எல்லா நேரமும் அவர் இந்தப் பதவியைக் கொண்டிருந்தார்.

35. பாதுகாப்பு செயலாளரான கோத்தபாய 2005 தொடக்கம் 2015 வரை இலங்கையின் அனைத்து இராணுவ அமைப்புக்கள் மற்றும் புலனாய்வு அமைப்புக்களுக்கு கட்டளைகளை வழங்கினார். அவர் 2005 ஆம் ஆண்டிலிருந்து ஆகஸ்ட் 2013 ஆம் ஆண்டு பொலிசை புதிதாக உருவாக்கப்பட்ட சட்டம் ஒழுங்கு அமைச்சின் கீழ் வரும் வரைக்குத் பொலிஸ் பிரிவும் அவரது கட்டுப்பாட்டின் கீழே இருந்தது.

36. பாதுகாப்பு செயலாளராக கோத்தபாய இரண்டு சட்டங்கின் கீழ் பெருமளவான மேலதிக அதிகாரங்களைக் கொண்டிருந்தார். பயங்கரவாத தடுப்புச் சட்டம் இது தற்போதும் அமுலில் உள்ளதுடன் பயங்கரவாதம் என்பதற்கு அதிர்ச்சிதரும் வகையில் விரிவாக வரைவிலக்கணத்தையும் கொண்டுள்ளதுடன் சட்டரீதியான மீள்பார்வை இல்லாமல் LTTE இனருடன் தொடர்புபட்ட சந்தவொரு சந்தேகநபரை நீண்ட காலத்திற்கு தடுத்து வைக்கும் அதிகாரத்தையும் சித்திரவதை மூலம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தை அடிப்படையாக கொண்டு குற்றஞ்சுமத்தவும் அதிகாரிகளை அனுமதிக்கின்றது. 2005 இல் நிறைவேற்றப்பட்டு 2011 இல் நீக்கப்பட்ட அவசர காலச் சட்டமானது

குற்றச்சாட்டுக்கள் இன்றி காலவரையறையின்றி தடுத்து வைப்பதற்கான இன்னுமொரு ஆதாரத்தை வழங்கியது.

37. இந்த அதிகாரங்களைக் கொண்டு கோத்தபாள மேலும் தன்னுடைய கட்டுப்பாட்டை பலப்படுத்திக் கொண்டார். பாதுகாப்பு அமைச்சர் என்ற பெயரை பெரும்பாலும் அடையாளமாக கொண்டிருந்த அவரது சகோதரரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு கீழ் இருந்தார். பாதுகாப்பு தொடர்பாக முடிவெடுக்கும் உண்மையான சக்தியாக கோத்தபாய ஒவ்வொரு அமைப்பிலும் தனக்கு விசுவாசமான உள்வட்டத்தைச் சேர்ந்தவர்களை தெரிந்தெடுத்து நேரடியாக கட்டளைகளை வழங்கி உத்தியோகபூர்வமாக தொடர் கட்டளையை மேற்கொண்டார்.

38. *ஆயுதப்படைகள்.* இலங்கை இராணுவம் கடற்படை மற்றும் விமானப்படையை பாதுகாப்பமைச்சே நிர்வகிக்கின்றது. எல்லா நியமனங்கள், பதவி உயர்வுகள், இராணுவ நீதிமன்றத்தில் குற்றஞ் செய்தவர்களுக்கு வழக்குத் தொடருதல் உட்பட்ட ஒழுக்காற்றுவிடயங்கள் போன்றவற்றுக்கான அதிகாரத்தைக் கொண்டிருந்தார்.

39. *புலனாய்*வு . இராணுவப் புலனாய்வுப் பிரிவு மற்றும் அரச புலனாய்வுச் சேவை உட்பட உள்ளக மற்றும் வெளிநாட்டு புலனாய்வு சேவைகளை பாதுகாப்பமைச்சு கட்டுப்படுத்தியது.

40. *காவல்*துறை. குற்ற விசாரணைத் திணைக்களம், பயங்கரவாத விசாரணைப் பிரிவு, விசேட அதிரடிப்படை , கொழும்பு குற்றப் பிரிவு போன்ற சித்திரவதைகளுக்குப் பெயர்போன பிரிவுகள் உட்பட பொலிசாரின் அனைத்துப் பிரிவுகளுக்கும் பாதுகாப்பமைச்சு பொறுப்பாக இருந்தது. கோத்தபாய பாதுகாப்பு மேலதிக செயலாளர்கள், பொலிஸ் மா அதிபர், மற்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உட்பட்ட கட்டளைத் தொடர் ஊடாக இந்தப் பிரிவுகளின் நடவடிக்கை கட்டுப்பாட்டை மேற்கொண்டார்.

41. *இந்த*ப் பிரிவுகள் ஒரு குறிப்பிட்ட தொடர்பாடல்கள் முறை மூலம் கோத்தபாயாவிற்கு அறிவித்தார்கள்: கைதுகள், கடத்தல்கள் என்பன மிகக் கவனமான முறையில் பதிவு செய்யப்பட்டு, காப்பகப்படுத்தப்பட்டு மூத்த அதிகாரிகள் வரை அறிவிக்கப்பட்ட அதேவேளையில் கைதிற்கான அல்லது கடத்தலுக்கான கட்டளைகள் கட்டளைத் தொடர் ஊடாக அனுப்பப்பட்டன.

42. முன்னாள் இராணுவ வழுரராக இருந்த கோத்தபாய இராணுவம் மற்றும் பொலிஸ் படைகளில் தலைவராக பணிபுரிந்து வந்தார். கோத்தபாய தேசிய பாதுகாப்புச் சபையின் தலைசராகவும் இருந்தார். அவர் பொலிஸ் , இராணுவ நடவடிக்கைகளுக்கும் ஜனாதிபதியான தன்னுடைய சகோதரரின் அரசியல் தலைமைத்துவத்திற்கும் இடையில் முக்கியமான இணைப்பை வழங்கினார். கோத்தபாய அவருக்கு முந்தைய அல்லது அடுத்து வந்த பாதுகாப்பு செயலாளர்களை விட கூடுதலான அதிகாரங்களைக் கொண்டிருந்தார். அவர் தனிப்பட்ட ரீதியாகவும் இராணுவ நடவடிக்கைகள் மற்றும் பொலிஸ் விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஆட்களை நியமித்தல் மற்றும் மேற்பார்வை செய்வதிலும் சம்பந்தப்பட்டிருந்தார். ஆட்சேர்ப்பு மற்றும் பணிக்கமர்த்தல் போன்றவற்றை மேற்பார்வை செய்தார் அத்துடன் விசுவாசம் இல்லாதவர்கள் என சந்தேகிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு வழக்குத் தொடர்ந்து இல்லாது செய்தார். இவர் சிலவேளைகளில் அதிகாரத்துவ இடையதிகாரிகளையும் கடந்து தனக்கு நெருக்கமான வட்டத்துடன் வேலை செய்வதற்கு தனக்கு விசுவாசமான முன்னணி அதிகாரிகளுடன் நேரடித் தொடர்பினை பேணிவந்தார்.

43. கோத்தபாயாவின் முகவர்களின் பகிரங்க கூற்றுகளுக்கிணங்க அவர் மூலோபாயங்களை ஒருங்கிணைத்தல், நடவடிக்கைகளை திட்டமிடல், மற்றும் அறிக்கைகளைப்[1] பெற்றுக் கொள்ளுதல் தொடர்பாக தனக்கு கீழ் உள்ளவர்களுடன் அடிக்கடி

சந்திப்புக்களை நடாத்தினார். பாதுகாப்பு படைகளை மேற்பார்வை செய்யும் கோத்தபாயவின் பணி பற்றி மூத்த பொலிஸ் அதிகாரியொருவர் 06 மே 2009 இல் செவ்வியொன்றில் தெரிவிக்கையில் :

> உண்மையில், கொழும்பினுடைய நல்ல பாதுகாப்பை உறுதிசெய்யும் பிரதான நபராக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச இருந்தார். எங்களுடைய வேலைகளின் முன்னேற்றம் பற்றி அவருக்கு ஒவ்வொரு வாரமும் அறிவிக்க வேண்டும் , இதைவிட பொலிஸ் மா அதிபரும் ஒவ்வொருநாளும் விசாரணைகள் பற்றி தொடர்ச்சியாக விசாரித்துச் செல்வார். மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமல் மிடிவகே எங்களுக்கு தன்னுடைய பூரண ஆதரவை வழங்குகின்றார். பாதுகாப்பு செயலாளர் தான் எங்களுடைய பலம் அவர் எங்கள் அனைவரையும் ஒரு அணியாக கொண்டு வருவதில் வெற்றிபெற்றிருக்கின்றார். இதனால் எங்களுடைய விசாரணைகளும்[1] வெற்றி பெற்றிருக்கின்றது.

44. கோத்தபாய தன்னுடைய பாதுகாப்பு படைகளை இறுக்கமான கட்டுப்பாட்டைக் கொண்ட அமைப்பு என தானே விபரித்துள்ளார்:
இது ஒரு சங்கிலி போன்றது என்பதால் ஒவ்வொரு சிறிய விடயமும் மிகவும் முக்கியமானது. இது ஒரு தனியான படையோ அல்லது சேவையோ அல்ல இது ஒரு முழுமையான அணியின் முயற்றியே. எல்லாவற்றுக்கும் மேலே உள்ள ஜனாதிபதி அவர்கள் இதனை ஒருங்கிணைப்பதுடன் தலைமைத்துவத்தையும்[1] வழங்கியுள்ளார்.

45. கோத்தபாயாவின் முழுமையான அணியில் இந்த வழக்குத் தொடுநர்களை நாடு முழுவதிலுமுள்ள பொலிஸ்நிலையங்கள் மற்றும்

இராணுவ முகாம்களில் தடுத்து வைத்துச் சித்திரவதை செய்த அதிகாரிகளை உள்ளடக்கியிருந்தது.

## C. கோத்தபாயவின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த சித்திரவதை இடங்கள்

46. வழக்குத் தொடுநர்கள் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட தடுப்பு நிலையங்கள் கோத்தபாயவின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. நாடெங்கிலும் இருந்த இந்த மற்றும் ஏனைய இடங்கள் பாதுகாப்பமைச்சினால் நிர்வகிக்கப்பட்டன அத்துடன் இராணுவம் அல்லது பொலிஸ் மற்றும் இரண்டினாலும் பயன்படுத்தப்பட்டன:

- சாய்த்திய வீதி தடுப்பு நிலையம்: தீவின் கிழக்கு கரையிலுள்ள கொழும்பில் அமைந்திருந்தது, சாய்த்திய வீதி தடுப்பு நிலையம் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் 2008 ஆம் ஆண்டு பிற்பகுதி வரை தமது நடவடிக்கைகளை குற்ற விசாரணைத் திணைக்களத்தின் தலையமத்திற்கு மாற்றும் வரை கைதிகளை தடுத்து வைத்து விசாரணை செய்து சித்திரவதை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது.

- குற்ற விசாரணைத் திணைக்களம் , அத்துடன் 4ஆம் மாடி என்றும் அழைக்கப்படும்- கொழும்பு யோக் வீதியில் அமைந்திருந்தது. சிஐடி இன் தலைமையகம் சித்திரவதைக்குப் பெயர் போன இடமாக இருந்ததுடன் நாடு முழுவதும் 4ஆம் மாடி எனவும் அறியப்பட்டது. 2008 ஆம் ஆண்டின் பிற்பகுதிக்குப் பின்னர் இந்த இடத்திலே ரிஐடி தன்னுடைய அலுவலகங்கள் மற்றும் தடுத்து நிலையங்களை வைத்திருந்தது.

- பூசா முகாம் - இது தெற்குக் கரையில் ரிஐடி இனரால் இயக்கப்பட்டு வந்த ஒரு தடுப்பு முகாம்.

- மவுண்டு லேனியா பொலிஸ் நிலையம் - கொழும்பின் தெற்கே உள்ள ஒரு பொலிஸ் நிலையம் ஆகும்.

- தேமட்டக்கொட பொலிஸ்நிலையம் - கொழும்பில் அமைந்திருந்ததுடன் சித்திரவதைக்குப் பெயர் போன கொழும்பு குற்றப்பிரிவின் வீடாக இருந்தது.

- புல்மோட்டை பொலிஸ் நிலையம் : தீவின் கிழக்கு கரையில் அமைந்திருந்தது அத்துடன் ரிஐடி இனால் பயன்படுத்தப்பட்டது. 2009 ஆம் ஆண்டு வசந்த காலப் பகுதியில் போர் வலயத்தில் இருந்து வந்த உள்நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்த மக்களை விசாரித்து பதிவுகளை மேற்கொள்ளும் பிரதேசத்தில் இந்த காவல் நிலையமும் அமைந்திருந்தது.

- ஜோசப் முகாம் - தீவின் வடக்கிலுள்ள வவுனியாவிற்கு அருகில் அமைந்திருந்தது. ஜோசப் முகாம் வன்னிப் பாதுகாப்பு படைகளின் தலைமையகம் எனவும் உத்தியோகபூர்வமாக அழைக்கப்பட்டது. இலங்கையின் வடக்கிலுள்ள மாவட்டங்களில் இராணுவ மற்றும் பொலிஸ் நடவடிக்கைகளுக்கான ஒரு பெரிய மையமாக இருந்துள்ளது. இராணுவப் புலனாய்வுப் பிரிவு, அரச புலனாய்வுப் பிரிவு மற்றும் ரிஐடி உட்பட இராணுவ , புலனாய்வு மற்றும் பொலிஸ்படைகள் இந்த முகாமில் இயங்கின.

- பாலியல் அடிமைத்தனம் இடம்பெற்ற இனந்தெரியாத இராணுவ முகாம்கள் - வழக்குத் தொடுநர் வித்தியா ஜெயக்குமார் கைதியாகப் பிடிக்கப்பட்டு வழமையான இராணுவக்கட்டமைப்பின் பகுதியாக இருந்த இரண்டு இராணுவ முகாம்களில் வேறு தமிழ்ப் பெண்களுடன் பாலியல் அடிமையாக நடத்தப்பட்டார்.

## D. கோத்தபாயாவின் வெள்ளை வான்கள் ஆட்கடத்தல் சித்திரவதை , பாலியல் வன்முறை மற்றும் அச்சுறுத்திப் பணம் பெறும் முறைகள்

47. இந்தச் சித்திரவதை நிலையங்களில் இடம்பெற்ற இந்த துஸ்பிரயோகங்கள் எழுமாற்றாக இடம்பெற்றவையல்ல. இதைவிட பாதுகாப்பமைச்சின் வெவ்வேறு பகுதிகளுக்கிடையில் ஒருங்கிணைப்பு தேவைப்படும் வழமையான மற்றும் திட்டமிட்ட செயற்பாடாக இருந்தது.

48. அவை அடிக்கடி வெள்ளைவான் கடத்தல் உடன் ஆரம்பிக்கும் - இந்தப் பதமானது கோத்தபாயாவின் ஆட்சியின் பயங்கரத்தைக் குறிப்பதாக மாறியது. வழமையாக மூன்று வெவ்வேறு அணிகள் கடத்தி , விசாரணை செய்வதுடன் பாதிக்கப்பட்டவரை

விடுதலை செய்கின்றது. கடத்தல்காரர்கள் 4 அல்லது 5 பேரைக் கொண்ட சிவில் உடை அணிந்த சிங்கள ஆண்கள் அத்துடன் இலக்கத்தகடுகள் இல்லாத ஒரு வாகனத்தை ஓடுகிறார்கள்.பாதிக்கப்பட்டவர்கள் வாகனத்தின் பின்பக்கம் தள்ளப்பட்டு பெரும்பாலானவர்களின் கண்கள் கட்டப்படுவதுடன் அவர்களுடைய கைகளும் கையிற்றினால் கட்டப்படுகின்றது அல்லது கைவிலங்கிடப்படுகின்றது. பிடிவிறாந்துகள் எவையும் காட்டப்படுவதில்லை. அவர்கள் விசாரணைக்காக முன்னரே தீர்மானிக்கப்பட்ட இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

49. சித்திரவதை இடங்களிலுள்ள தடுத்து வைக்கப்படும் அறைகள் - பொலிஸ் நிலையங்களில் அல்லது இராணுவ முகாம்களில் என்றாலும் அவை சிறியனவாகவும் சுகாதாரமற்றவையாகவும் இருந்தன. பாதிக்கப்பட்டவர்கள் அவர்களை அடைத்து வைத்திருந்த சிறிய அறைகளில் இருந்து தயார்செய்யப்பட்ட அத்துடன் சித்திரவதைக்குரிய உபகரணங்களைக் கொண்டிருந்த இன்னுமொரு வேறான அறைக்கு கொண்டு சென்றார்கள். விசாரணை அறையானது வழமையாக பெரியதாக இருப்பதுடன் ஒரு மேசை கதிரை போன்ற தளபாடங்களுடன் கொட்டன்கள் வயர்கள் பைப்புகள் போன்ற கருவிகளையும் கொண்டிருந்தன. இவை பெரும்பாலும் கூரையிலுள்ள தீராந்தி அல்லது கப்பியுடன் கயிறு அல்லது சங்கியுடன் இணைக்கப்பட்டிருக்கும் அத்துடன் பாதிக்கப்பட்டவர்களை தரையிலிருந்து மேலே உயர்த்துவதற்குப் பயன்படுத்தப்பட்டன.

50. பாதிக்கப்பட்டவர்கள் வழமையாக நீண்ட நேரம் விசாரிக்கப்படுகின்றார்கள். கூடுதலாக விசாரணையாளர் பாதிக்கப்பட்டவர் பற்றிய ஒரு கோவையை வைத்திருக்கின்றார். பொதுவான உடல் சித்திரவதைகள் கன்னத்தில் அறைதல், அடித்தல், குத்துதல் சப்பாத்துக்கால்களால் முகம் மற்றும் உடல் முழுவதும் உதைதல் , திரும்பத்திரும்ப பாதிக்கப்பட்டவர்களின் முதுகு, காலகள்

அல்லதுஅவர்களது குதிக்கால்களில் மண்நிரப்பிய பிளாஸ்டிக் பைப் தடிகள், கொட்டன்கள் மற்றும் அவர்கள் போன்றவற்றால் அடித்தல் போன்றவற்றை உள்ளடக்குகின்றது. பாதிக்கப்பட்டவர்கள் பொதுவாக கிழிந்த தோல்க்காயங்கள், அடி காயங்கள் , கட்டித்தொங்கவிடுதல் , குதிக்காலில் அடித்தல் , மின்னசாரம் பிடித்தல் தண்ணீருக்குள் மூழ்கடித்து அல்லது பெற்றோல் அல்லது மிளகாய்த்தூள் கொண்ட பொலித்தீன் பையினால் முகத்தை மூடி மூச்சுத்திணறச் செய்யப்பட்டுள்ளார்கள். தடுத்து வைக்கப்பட்டவர்களில் பலர் எரியும் மிளகாய்தூள் புகையை உள்ளே இழுக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். சிகரெட்டினால் சுடுதல் என்பது விசேடமாக பெண்களுக்கு உள்பக்க தொடையில் சுடுதல் என்பது பாலியல் வன்புணர்விற்கு முன்னோடியாக பாவிக்கப்படுகின்றது. பாதிக்கப்பட்டவர்கள் அடிக்கடி சூடான இரும்புக்கம்பிகளால் சுடப்படுவதால் அவர்களுக்கு கண்ணுக்கு புலப்படக்கூடிய காயத்தழும்புகள் ஏற்படுகின்றன.

51. சித்திரவதை இடம்பெறும் இடங்களில் பெண்கள் மற்றும் ஆண்கள் மீதான பாலியல் சித்திரவதை என்பது பொதுவாக காணப்படுகின்றது. பொதுவாக பாதிக்கப்பட்ட ஒரு பெண் ஆடைகள் அகற்றப்பட்டு , பெயர்களால் அழைக்கப்பட்டு கேலி செய்யப்படுவதுடன் அவர்களது பிறப்புறுப்புக்கள் மற்றும் மார்புகள் வலிஏற்படும் வகையில் கசக்கப்படுகின்றன அல்லது இழுக்கப்படுகின்றன. அவர்கள் பின்னர் குற்றம்புரிந்தவர்களுடன் வாய்மூலமான பாலியல் வன்புணர்வு மேற்கொள்ள வற்புறுத்தபடக்கூடும் அல்லது பெண்ணுறுப்பு அல்லது மலவாசல் ஊடான பாலியல் வன்புணர்வுக்கு உட்படக்கூடும். பாதிக்கப்பட்ட ஆண்கள் சித்திரவதை செய்பவர்கள் கெட்டவார்த்தைகளால் பேசி வாய்மூலமான பாலியல் உறவு வைத்துக் கொள்ள அடிக்கடி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். ஆண் சித்திரவதையாளர்கள் பாதிக்கப்பட்ட ஆண்களை தமது ஆண்குறிகளைக் கொண்டும் அத்துடன் இரும்புக்கம்பி போன்ற

பொருட்களைப் பாவித்தும் மலவாசல் வழியாக பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்துகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் சிங்களப் பெண் காவலர்கள் அல்லது பாதுகாப்பு படை உறுப்பினர் தமிழ் பெண் மற்றும் ஆண் கைதிகளை பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்துவதில் சம்பந்தப்படுகின்றார்கள்.

52. ஆட்கடத்தலுக்கு இலக்காகி பாதிக்கப்பட்டவர்கள் அடிக்கடி அவர்களது குடும்பத்தினர் பாதுகாப்பு படையினருக்கு இலஞ்சம் செலுத்திய பின்னர் விடுவிக்கப்படுகின்றார்கள். அவர்களது கண்ணகள் கட்டப்பட்டு கைவிலங்கு போடப்பட்டு கையளிக்கப்படுவதற்காக வாகனத்தில் இன்ந்தெரியாத இடத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றார்கள். அவர்களுக்கு பொதுவாக விடுதலை செய்யப்படப் போவது பற்றி சொல்லப்படுவதில்லை அத்துடன் பலர் தாம் கொல்லப்படப் போவதாகவே எண்ணுகின்றனர். கண்கட்டுகள் , கைவிலங்குகள் அகற்றப்பட்டு குடும்பத்தார் ஒழுங்கு செய்த முகவர்களின் ஊடாகவே பாதிக்கப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுகின்றார்கள். நாட்டை விட்டுத் தப்பிச் செல்லும் பாதிக்கப்பட்டவர்களுக்காக எஞ்சியுள்ள குடும்பத்தினர் முன்னாள் கைதிகள் பற்றிய தகவல்களைக் கேட்டு பாதுகாப்பு படைகளினால் அடிக்கடி துன்புறுத்தப்படுகின்றார்கள். சில சந்தர்ப்பங்களில் , இந்தச் சம்பவங்கள் பற்றி சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மனித உரிமைகள் அமைப்புகள் போன்றவற்றுக்கு அறிவிப்பதை தடுப்பதற்காக பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் வன்முறையான பழிவாங்கல்ககுக்கு முகங்கொடுக்கின்றார்கள்.

53. வழக்குத் தொடுநர்களின் அனுபவங்கள் பின்வருமாறு

## றோய் சமதானத்தின் சித்திரவதை

### A. றோயினுடைய கைது

54. 2005 ஆம் ஆண்டு , போரில் ஏற்பட்ட ஓய்வினைப் பயன்படுத்தி கடனாவில் இருந்த தன்னுடைய வீட்டில் இருந்து இலங்கைக்கு பிரயாணம் செய்து ஒரு பெண்ணை திருமணம் செய்தார். இந்தப் பெண் இப்போது அவருடைய மனைவியாக உள்ளார். அவர்கள் கொழும்பில் வாடகைக்கு ஒரு வீட்டை எடுத்தார்கள் . மனைவி கர்ப்பமான போது அவர்கள் குழந்தை கிடைக்கும் வரைக்கும் இலங்கையில் தொடர்ந்தும் இருப்பதற்கு முடிவெடுத்தார்கள்.

55. அவ்வர்போது, கணனி இலத்திரனில் கடை நடாத்தி வந்த தன்னுடைய நண்பருக்கு அதற்குரிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கு றோய் உதவி செய்தார். செப்டெம்பர் 2007 இல், அவருடைய நண்பர் இலங்கைக்கு 600 கைத்தொலைபேசிகளை இறக்குமதி செய்தார் அவை றோயினுடைய வீட்டுக்கு அனுப்பப்பட்டதுடன் அடுத்த நாள் அவருடைய நண்பர் வந்து எடுப்பதற்காக றோயினுடைய வீட்டில் இருந்தன.

56. 2007 ஆம் ஆண்டு செப்டெம்பர் 14 இல் அதிகாலை வேளையில், சாதாரண உடையணிந்து தானியங்கி துப்பாக்கிகள் தாங்கிய நபர்கள் றோயினுடைய வீட்டுக்கு வந்தார்கள். றோயும், அவரது மனைவியும் உறங்கிக் கொண்டிருந்ததுடன் துப்பாக்கி நபர்கள் கதவில் தட்டியதையடுத்து எழுந்தார்கள். அந்த நபர்கள் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் என்று தம்மை அறிமுகம் செய்ததுடன் அவருடைய வீட்டில் தேடுதல் நடாத்தப் போவதாக சொன்னார்கள். றோயும் அதற்குச் சம்மதித்ததை தொடர்ந்து அவர்கள் உள்ளே நுழைந்தார்கள். வரவேற்பறையில் (கோல்) றோய் தனது நண்பருக்கு இறக்குமதி செய்து கொடுத்து உதவிய தொலைபேசிகளின் திறக்கப்படாத பெட்டிகள் இருந்தன. அந்த அதிகாரிகள் அந்தப் பெட்டிகளைத் திறந்து செல்லுலர் தொலைபேசிகளைக் கண்ட போது

அவர்கள் அவற்றுக்கான தீர்வை விலைப்பட்டியலைக் காட்டுமாறு கேட்டார்கள். இந்தப் பொருட்கள் தொடர்புபட்ட படிவங்களை றோய் அவர்களிடம் காட்டி இந்தப் பொருட்கள் தன்னுடைய நண்பரின் வியாபாரத்திற்குச் சொந்தமானவை என விளக்கமளித்தார். அந்தப் பெட்டிக்குள் இருப்பவை ஜி.பி.எஸ் (புவிகோள நிலையியல் காட்டி) கருவிகள் என அந்த அதிகாரிகள் றோயிடம் சொன்னதுடன் இது சட்ட விரோதமானது என்றும் சொன்னார்கள். எவ்வாறாயினும் அவர்கள் றோயிடம் இது போன்ற ஜி.பி.எஸ் கருவியை அவர்கள் சுட்டிக் காட்டவில்லை.

57. கிட்டத்தட்ட 25000 இலங்கை ரூபாய்கள் தமக்கு கொடுத்தால் அவரை விட்டுவிட்டு போவதாகவும் இல்லாவிட்டால் விசாரணைகளுக்காக அவரை TID இன் தலைமையகத்திற்கு கொண்டு செல்வோம் எனவும் றோயிடம் சொன்னார்கள். தனது விடுதலைக்காக கொடுப்பதற்கு தன்னிடம் பணம் இல்லை என றோய் அந்த அதிகாரிகளிடம் கூறிய போது அவர்கள் அவரைக் கைது செய்தார்கள்.

58. றோயை சில்வர் கலர் மேட்சடர்ஸ் வானில் ஏற்றி , கைவிலங்கிட்டதுடன் அவருடைய கண்களும் கட்டப்பட்டன. அவருடைய கர்ப்பமான மனைவியும் அவர்களுடைய பிள்ளையும் TID அதிகாரிகளின் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்கள். அந்த அதிகாரிகள் கொஞ்ச நேரம் றோயை கொழும்பைச் சுற்றி வாகனத்தில் கொண்டு சென்ற வேளையில் அவரைக் கொலை செய்து அவரது உடலைப் புதைப்போம் என்று அதிகாரிகள் அச்சுறுத்தினார்கள். பின்னர் காலை வேளையில் கொழும்பு நகர்ப் பகுதியில் இருந்த TID இன் தடுப்பு முகாமிற்கு அனுப்பபட்டார்.

59. அங்கு வந்தடைந்ததும் , TID அதிகாரிகள் தலைமையகத்திற்குள் றோயினைக் கொண்டு சென்றார்கள், அந்த அலுவலகத்தினுள் இருந்த ஒரு அறையினுள் இருந்த கதிரையுடன் சேர்ந்து விலங்கிட்டதுடன் செல்லுலர் தொலைபேசிகள் இறக்குமதி பற்றி

விசாரித்தார்கள். றோய் பின்னர் சார்ஜன்ட் அப்தீனின் அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு மேசை ஒன்றுடன் விலங்கிடப்பட்டார்.

60. பிரதிவாதியான கோத்தபாயவின் கீழ் இருந்த பாதுகாப்பமைச்சின் மேலதிக செயலாளர் சுனில் எஸ் சிறிசேன இனால் கையொப்பமிடப்பட்ட தடுத்து வைப்பதற்கான ஆணையின் கீழ் றோய் TID இனரால் தடுத்து வைக்கப்பட்டார்.சிங்கப்பூரில் இருந்து அனுமதி இல்லாமல் தொலை தொடர்பு சாதனங்களை இறக்குமதி செய்த பின்னர் பொது ஒழுங்கினை நிலை நாட்டவும் அல்லது தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படும் வகையில் நடந்து கொள்வதை தடுப்பதற்காகவும் அவர் தடுத்து வைக்கப்பட்டதாக தடுத்து வைப்பதற்கான கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

61. காலை 10 மணியளவில், அந்த தடுப்பு நிலையத்திற்கு பொறுப்பாக இருந்த பிரசன்ன டி அல்விஸ் இனைப் பார்ப்பதற்கு றோய் கொண்டு செல்லப்பட்டார். அந்த அதிகாரி றோய்க்கு ஜி.பி.எஸ் கருவியை வைத்திருப்பது சட்ட விரோதமானது என்று றோயிடம் கூறியதுடன் அவரைக் கிட்டத்தட்ட 15 நிமிடங்களாக விசாரித்தார். அதிகாரி டி அல்விஸ் கடனா ரொறொன்ரோவிலுள்ள தமிழ்ப் புலிகளின் புலனாய்வினை இயக்குவதாக றோயைக் குற்றஞ்சாட்டினார்கள்.

62. 2007 செப்டெம்பருக்கும் 2008 நவம்பருக்கும் இடையில் றோய் வுஜனு இனரால் தடுத்து வைக்கப்பட்டார் இதன் போது அவர் வழக்கறிஞரைப் பார்வையிட அனுமதிக்கப்படவவில்லை, குற்றஞ்சாட்டப்படுவதற்கு நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்படவில்லை அத்துடன் இவரது தடுப்புக்காவல் ஒரு சுயாதீனமான நீதிமன்றத்தினால் மீள்பார்வை செய்யப்படவில்லை.

63. றோய் கொழும்பு சாத்யா வீதியில் இருந்த TID இன் தடுப்பு முகாமில் செப்டெம்பர் 2007 தொடக்கம் ஏப்பிரல் 2008 வரை 8 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டார். அவர் உள்ளூர் இலங்கை கைதிகளிடமிருந்து தனியாக வைக்கப்பட்டதுடன் சார்ஜன்ட் அப்டீன்

அலுவலகத்தில் வேறு சில வெளிநாட்டு பிரஜைகளுடன் வைக்கப்பட்டார்.

64. அங்கு, எல்லா நேரமும் றோய் மேசை ஒன்றுடன் விலங்கிடப்பட்டு வைத்திருந்ததுடன் வலிக்ககூடியமாறு நிலத்தில் இருப்பதற்கு அல்லது நிலத்தில் கிடக்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டார். தடுப்பு நிலையத்தில் மெத்தை தலையணை அல்லது கதிரை அல்லது வேறு தளபாடங்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை. றோய் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த காலத்தில் அவரை அங்கிருந்த காவலர்கள் கனேடியப் புலி என்று அவரை அழைத்ததுடன் அவரைக் கொல்வோம் என்று அடிக்கடி அச்சுறுத்தினார்கள். றோய்க்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவு உணவும் நீருமே வழங்கப்பட்டது அத்துடன் அவரது நீரிழிவு நோய்க்கான மருந்துகளும் கொடுக்கப்படவில்லை இதனால் அவர் சில சமயங்களில் அந்த இடத்திலே சிறுநீர் கழித்தார்.

65. கிட்டத்தட்ட இரண்டு அல்லது மூன்று வாரங்களாக காவலர்கள் சார்ஜன்ட் அப்டீனின் அலுவலகத்திற்குள் றோயையும் மற்றைய கைதிகளையும் அடித்து விசாரிப்பதற்கு வருவார்கள். வலி ஏற்படக்கூடிய நிலைகளில் றோய் சங்கியிடப்பட்டிருந்தார். காவலர்கள் றோயை உலோகப் பைப்புகள் அல்லது இறுக்கமான இறப்பர் கொட்டன்களாலும் அடித்தார்கள். அவரை தமிழ்ப் புலிகளின் உறுப்பினர் என ஒப்புதல் வாக்குமூலம் வழங்குமாறும் கத்தினார்கள். இவ்வாறு அடித்தமையாலும் அவரை நீண்ட காலமாக ஒரு இடத்திலே குந்தியிக்க வைத்தமையாலும் றோய்க்கு கடுமையான உடல்வலியை ஏற்படுத்தியது , அவர் இன்று வரை ஊனமுற்றவராகவே இருக்கின்றார்.

66. சித்திரவதைகள் உளவியல் ரீதியானதாக இருந்தது. றோய் தடுத்து வைக்கப்பட்ட காலப்பகுதி முழுவதும் TID அதிகாரிகளால் அச்சுறுத்தப்பட்டார் அத்துடன் இன ரீதியாகவும் அவமானப்படுத்தப்பட்டார். அவர்கள் அவருடைய மனைவியைக் கைது செய்து பாலியல் வன்புணர்வு செய்வோம் என அவரை

அச்சுறுத்தியதுடன் அவரை விடுவிப்பதற்கு மனைவி இலஞ்சம் கொடுக்க வேண்டும் எனவும் கோரினார்கள். றோயை தலையில் சுடப்போவதாக அச்சுறுத்தினார்கள்.டி அவர்கள் மற்ற கைதிகளை நிர்வாணப்படுத்தி அவர்களை அடிக்கும் போது றோயை அதைப் பார்க்குமாறு நிர்ப்பந்தித்தார்கள்.

**B. சர்வதேச அவதானிப்பாளர்கள் - ஆனால் சுதந்திரம் இல்லை**

67. றோய் தடுத்து வைக்கப்பட்டிருந்த TID இன் தடுப்பு நிலையத்திற்கு பல்வேறு சர்வதேச அவதானிகள் வந்தார்கள். அவர் கைது செய்யப்பட்டு சில நாட்களிலே, வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் சர்வதேச வியாபாரத்திற்கான திணைக்களதிலிருந்து கனேடியர் அலுவலகர் ஒருவர் பார்க்க வந்தார். இவர் திரு நோமன் எனவும் இவர் கொழும்பில் உள்ள கனடா உயர ஸ்தானிகராலயத்தில் பணியாற்றுபவர் என றோய்க்கு தெரிய வந்தது. அவருடைய கைது பற்றி என்ன செய்யலாம் என்று பார்ப்பேன் என திரு நோமன் றோயிடம் கூறினார்.

68. ஒக்டோபர் 2007 இல் சித்திரவதைகளுக்கான ஐநாவின் விசேட பிரதிநிதி மான்பிரட் நோவக் TID இன் தடுப்பு நிலையத்தை உத்தியோகபூர்வமாக பார்வையிட வந்தார். றோய் அவரைக் கண்டார் ஆனால் அவருடன் கதைப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அவர் ஐக்கிய நாடுகளுக்கு அடுத்து சமர்ப்பித்த அறிக்கையில் கொழும்பிலுள்ள TID இன் தடுப்பு நிலையத்தில் சித்திரவதைகள் இடம்பெறுவதாக பல அறிக்கைகள் கிடைப்பதாக திரு நோவக் விபரித்ததுடன் குற்றம் புரிந்தவர்களில் ஒருவராக சார்ஜன்டை பெயர்குறிப்பிட்டுள்ளார்[1].

69. 19 ஒக்டோபர் 2007 அளவில், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் ( செஞ்சிலுவைச் சங்கம்) TID இன்

தடுப்புநிலையத்திற்கு விஜயம் செய்ததுடன் ரோயையும் சந்தித்தார்கள். அவர் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை அவர்கள் ஆவணப்படுத்திய ஆவணத்தையும் ஒரு பதிவு அட்டையையும் அவர்கள் அவருக்கு கொடுத்தார்கள். ரோய் தான்படுத்து உறங்குவதற்கு மெத்தை எதுவும் இல்லை என அவர்களிடம் தெரிவித்தார் அதன்விளைவாக 2017 டிசெம்பர் முற்பகுதியில் அவருக்கு ஒரு மெல்லிய மெத்தையொனறு வழங்கப்பட்டது.

## C. எவரும் இங்கு உனக்கு உதவமுடியாது: சாய்த்திய வீதியிலுள்ள தடுப்பு இடத்தில் சித்திரவதை

70. 17 டிசெம்பர் 2007 இல் பொறுப்பு அதிகாரி பிரசன்ன டி அல்விஸ் இற்கும் பிரதிவாதி கோத்தபாய ராஜபக்சவிற்கும் இடையே இடம்பெற்ற ஒரு தொலைபேசி உரையாடல் ரோயின் காதில் விழுந்தது. அவர்கள் அவருடைய அவரைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

71. அன்று மாலை, ரோய் TID அதிகாரிகளினால் மிருகத்தனமாக சித்திரவதை செய்யப்பட்டார். அந்த அன்று இரவு, அந்த தடுப்பு நிலையத்திற்கு இரண்டாவது பொறுப்பதிகாரியாக இருந்த இன்ஸ்பெக்டர் பீரிஸ் ரோய் அடைத்து வைக்கப்பட்டிருந்த அறைக்குள் வந்தார். அவருடன் கடமையில் அப்போது இல்லாத பல காவலர்களும் வந்தார்கள். செஞ்சிலுவைச் சங்கத்தின் மெத்தையைப் பெற்றுக் கொள்ளும் உரிமை உனக்கு இல்லை என இன்ஸ்பெக்டர் பீரிஸ் ரோயிடம் சொன்னார். காவலர்கள் ரோயிடமிருந்து மெத்தையைப் பறித்ததுடன் முட்டுக்காலில் அவரை இருக்கச் செய்தனர். பீரிசும் மற்றைய அதிகாரிகளும் ரோயின் வயிற்றில் உதைந்ததுடன் கடீனடிய புலியை நாங்கள் கொல்ல வேண்டும் என திரும்ப திரும்ப கத்தினார்கள். அதிகாரிகள் ரி 56 தாக்குதல் துப்பாகிகளின் அடிப்பாகத்தால் இவரைத் தாக்கினார்கள். ஒருவன் நோயினுடைய

நெஞ்சின் ஒருபக்கத்தில் துப்பாக்கியால் குத்தினான் அதேவேளையில் பீரிசும் மற்றையவர்களும் முகத்திலும், அடிவயிற்றிலும், கைகளிலும், கால்களிலும் குத்தினார்கள், உதைந்தார்கள். இந்த அடியால் றோயின் இடது பக்க மணிக்கட்டில் வீக்கம் ஏற்பட்டது, முழங்காலில் காயமும், வயிற்றிலும், மர்ப உறுப்பு பகுதியிலும் வலி ஏற்பட்டது.

72. அடுத்தநாள் காலை, பொறுப்பதிகாரி , பிரசன்ன டி அல்விஸ் முதல் நாள் இரவு என்ன நடந்தது என றோயிடம் நக்கலாக கேட்டார். அவருக்கு அடித்ததைப் பற்றி செஞ்சிலுவைச் சங்கத்திற்கு சொல்லக்கூடாது என றோயை அவர் எச்சரித்தார். ஒப்புதல் வாக்கு மூலத்தில் கையொப்பமிட்டால் அவர் விடுதலை செய்யப்படுவார் என றோயிடம் தெரிவித்ததுடன் அவர் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பமிட்ட பின்னர் இந்த வகையான அடிகள் எதுவும் இடம்பெறாது என்று தெரிவித்தார். சார்ஜன்ட் அப்டீன் அதற்குரிய ஆவணங்களை எழுதி தயார் செய்வார் ஆனால் றோய் அதில் கையொப்பமிடவிட்டால் TID இனர் அவரது மனைவி பிள்ளையை கைது செய்து சிறையில் அடைப்பார்கள் என அவர் றோயிடம் சொன்னார். அதிகாரி டீ அல்விசிடம் நான் ஒரு வழக்கறிஞரைப் பார்க்க விரும்புகின்றேன் என றோய் கூறிய போது உனக்கு வழக்கறிஞர் தரமுடியாது என அவர் பதிலளித்தார். ஒருவரும் உனக்கு இங்கு உதவி செய்ய முடியாது என்றார்.

### D. பூசா தடுப்பு முகாமிற்கு மாற்றப்பட்டமை

73. மே 2008 அளவில், தெற்கு இலங்கையிலுள்ள TID இன் பூசா தடுப்பு முகாமிற்கு றோய் மாற்றப்பட்டார். அவரை மாற்றும் கட்டளையானது பிரதிவாதியான பாதுகாப்பு செயலாளர் கோட்டபாயாவிற்கு கீழ் இருந்த மேலதிக பாதுகாப்பு செயலாளர் எஸ் கெட்டியாராச்சியினால் கையொப்பமிடப்பட்டது. யூலை 2008 வரை றோய் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

74. மலசலகூட வசதி மற்றும் நீர் எதுவும் இல்லாமல் ஒரு சிறிய அறையில் தனியாக பூசாவில் றோய் வைக்கப்பட்டிருந்தார். அவர் போத்தலில் சிறுச நீர்கழிக்கவும் ஒரு பிளாஸ்ரிக் பையில் மலம் கழிக்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டார்.

75. ஒவ்வொரு நாளும் றோயை அடைத்து வைத்தவர்கள் அவரை வசாரணைக்காக ஒரு விசாரணைக்காக கொண்டு சென்றார்கள். மற்றைய கைதிகள் மிருகத்தனமாக சித்திரவதை செய்யப்படுவதை பார்க்க நிரிப்பந்திக்கப்பட்டார். காவலர்கள் கைதிகளை தலைகீழாக கட்டித் தூக்கினார்கள். அவர்கள் பொலித்தீன் பைகளில் பெற்றோல் , மிளகாய்தூள் போடப்பட்டு அவற்றை கைதிகளின் தலையின் மேலாகப் போட்டுக் கட்டியதுடன் அவர்களை இரும்பு பைப்புகள் மற்றும் மரக்கொட்டன்களாலும் அடித்தார்கள். காவலர்கள் பெண் கைதிகளையும் அடித்து , நெருப்பால் சுட்டதுடன் பாலியல் துஸ்பிரயோகமும் செய்தார்கள். றோய்க்கும் அவ்வாறே நடக்கும் என அச்சுறுத்தப்பட்டார்.

## E. பலவந்தமான ஒப்புதல் வாக்குமூலம்

76. 2008 இன் யூலை பிற்பகுதியில் , றோய் தற்காலிகமாக கொழும்பு சாத்திய வீதி TID தடுப்புநிலையத்திற்கு மாற்றப்பட்டார். அவரை LTTE இன் சர்வதேச புலனாய்வுப் பிரிவின் உறுப்பினர் என ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்குமாறு அவர் நிர்ப்பந்திக்கப்பட்டார். அவர் வாக்குமூலம் கொடுக்க மறுத்தால் அவரது மனைவியைக் கைது செயவும் என்றும் அவரது பிள்ளையைக் கொல்வோம் என்றும் அவரைப் பிடித்து வைத்திருப்பவர்களால் அச்சுறுத்தப்பட்டார். ஆகஸ்ட் 2008 முற்பகுதியில் , அச்சுறுத்தல்களில் இருந்து அவருடைய மனைவியை பாதுகாப்பதற்காக ஜி பி எஸ் கருவியை LTTE இனருக்காக தான் சட்டவிரோதமாக இறக்குமதி செய்ததாக றோய்

பொய்யான ஒரு வாக்குமூலத்தை எழுதிக் கொடுத்தார். அவர் பின்னர் பூசா தடுப்பு முகாமிற்கு அனுப்ப்பட்டார்.

77. அவரிடமிருந்து பலவந்தமாகப் பெறப்பட்ட வாக்குமூலத்தை அடிப்படையாக கொண்டு 4 நவம்பர் 2008 அளவில் சட்டவிரோதமாக ஜிபிஎஸ் கருவிகளை இறக்குமதி செய்தார் என்றும் LTTE இனருக்கு உதவியதாக இறுதியாக அவர் குற்றஞ்சாட்டப்பட்டார். கிட்டத்தட்ட 3 வருடங்கள் தொடர்ச்சியாக தடுத்து வைக்கப்பட்ட இந்த காலப்பகுதியில் றோய்க்கு பிணை மறுக்கப்பட்டது, அத்துடன் உண்மையான வழக்கு எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை அத்துடன் றோயின் வழக்கறிஞரும் ஒரு மனு ஒப்பந்தம் பற்றி கதைத்தார். 19 ஆகஸ்ட் 2010 இல் , குடும்பத்திற்கு எதிரான அச்சுறுத்தல்களை நிறுத்தும் பொருட்டு அவர் ஜிபிஎஸ் கருவியை வைத்திருந்ததை ஏற்றுக் கொண்டதுடன் 500 000 இலங்கை ரூபாய்களை ( கிட்டத்தட்ட 2860 அமெரிக்க டொலர்களை) தண்டப் பணமாக செலுத்தினார். ஏனைய குற்றச்சாட்டுக்கள் கைவிடப்பட்டன. 27 ஆகஸ்ட் 2010 அன்று றோய் தடுப்பிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

78. 2010 இல் றோய் தடுப்பிலிருந்த விடுதலை செய்யப்பட்டதை தொடர்ந்து உள்ளூர் பத்திரிகைக்கு இவர் தன்னுடைய கதையைப் பற்றி தெரிவித்தார் இதனால் அவருடைய உறவினர்கள் நாட்டைவிட்டுச் செல்வதற்கு இலங்கை அரசாங்கப் பொலிஸ் அனுமதி வழங்க மறுத்து விட்டார்கள்.

## ரமேஸ் தேவராஜன் அனுபவித்த சித்திரவதை

79. ரமேஸ் தேவராஜன் என்பவர் தமிழ் இனத்தைப் பூர்வீகமாகக் கொண்ட ஓர் இலங்கையர். இவர் 2000ம் ஆண்டுகளில் மனிதநேய அமைப்புக்களில் பணியாற்றினார். தனது குடும்பம் ஏற்கனவே பாதிப்புற்றிருந்தமையால் அரசியலில் ஈடுபாடுகொள்ளாமல் தனது குடும்பத்திற்கு ஆதரவு வழங்குவதில் உறுதியாக இருந்தார். போரின் ஆரம்ப கட்டங்களில் இடம்பெற்ற தமிழர்களுக்கெதிரான காடையர்களின்

வன்முறையில் அவரது இளைய சகோதரி ஒருவர் கொல்லப்பட்டார். விடுதலைப் புலிகளால் பலவந்தமாக இணைக்கப்பட்ட மற்றுமொரு இளைய சகோதரத்தினையும் அவர் இழந்தார்.

80. பிரெஞ்சு நாட்டு அரச சார்பற்ற நிறுவனமான பட்டினிக்கு எதிரான நடவடிக்கை (Action Against Hunger) என்னும் அமைப்பினைச் சேர்ந்த 17 தமிழ் பணியாளர்கள் 2006ம் ஆண்டு மிகவும் மோசமாகப் படுகொலை செய்யப்பட்ட பின்னர் மனிதாபிமானப் பணியாளராக இருப்பதனால் தனது பாதுகாப்புக் குறித்து ரமேஸ் அச்சம்கொள்ளத் தொடங்கினார். மனிதாபிமான அமைப்புக்களில் ஒன்றில் தான் பணியாற்றுவதால் இலங்கை அரசாங்கத்தினால் தான் இலக்குவைக்கப்படலாம் என அவர் அச்சமடைந்தார்.

81. 2008 இலைதுளிர் காலத்தின்போது ரமேஸ் வீட்டில் இல்லாத தருணத்தில், பாதுகாப்பு அதிகாரிகள் அவரைத் தேடி அடையாளமற்ற ஓர் வெள்ளை வானில் அவரது குடும்பத்தினரிடம் சென்றனர். ரமேஸ் தலைமறைவாக இருந்தார்.

82. 2009 இவர் கைதுசெய்யப்பட்டு இலங்கையில் 4ம் மாடி என அறியப்பட்ட குற்றவிசாரணைப்பிரிவின் கொழும்பிலுள்ள தலைமையகத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

83. தடுத்துவைக்கப்பட்டிருந்தபோது ரமேஸ் குற்றவிசாரணைப்பிரிவினதும் பாதுகாப்புச் சேவைகளினதும் அதிகாரிகளினால் மீண்டும் மீண்டும் விசாரணைசெய்யப்பட்டார் அத்துடன் LTTE யினை ஆதரிப்பதாக பொய்யாக குற்றஞ்சாட்டப்பட்டார்.

விசாரணையாளர்கள் இவருக்கு ஓர் கோப்பினை வைத்துக் குறிப்பெடுத்தனர்.

**கிளியின் ஆசனமுறை (ஒருவகை சித்தரவதை முறை) (The Parrot's Perch): குற்றப்புலனாய்வாளர் நிசாந்த டீ சில்வா மேற்கொண்ட சித்திரவதை**

84. தடுப்பிலிருந்தபோது, பல நாட்கள் காவலாளர்கள் ரமேசை விசேட அறை ஒன்றினுள் கொண்டுசென்று அவரது சாரத்தினைக் கழற்றுவித்து உள்ளாடையுடனேயே விட்டனர். அந்த அறை இறைச்சிக் கடை போன்று மணம் வீசியது. கூரையில் பொருத்தப்பட்டிருந்த இரும்புக் கொழுக்கிகளில் மொத்தக் கயிறு தொங்கவிடப்பட்டிருந்ததுடன் சுவர்களில் இரத்தக்கறையும் படிந்திருந்தது.

85. அந்த அறையில் இரண்டு விசாரணையாளர்கள் இருந்தனர்: சிஐடி பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிசாந்த டீ சில்வா - இவர் ஓர் பெரியவர். அவர்கள் ரமேசை கிளி போல் உட்காரவைத்தனர்: மரக்கட்டை ஒன்று முழங்கால்களுக்கு பின்புறமாக வைக்கப்பட்டு அவரது கைககள் மரக்கட்டைக்கு கீழால் கட்டப்பட்டு நீண்டநேரம் தலைகீழாகத் தொங்கவிடப்பட்டார். ரமேஸ் தனது முழுக் கதையையும் விவரமாகக் கூறிக்கொண்டிருக்க "இப்போது உண்மையைச் சொல்லவும்" என டீ சில்வா எச்சரித்தார். பின்னர் இன்ஸ்பெக்டர் டீ சில்வா மரக் கொட்டனால் அவரது பாதத்தின் மையப் பகுதியில் அடித்தார். அது மிகவும் வலியாக இருந்தது. ரமேஸ் அழத்தொடங்கியதுடன் அந்த வலியைத் தாங்கமுடியவில்லை என அதிகாரியிடம் குறிப்பிட்டார். அவருடைய முதுகிலும், கால்களிலும் கைகளிலும் மரத் தடியினால் அடித்தனர். இதனால் அவருடைய

கைவிரல் நகங்கள் கறுப்பாக மாறின. அவரைத் தடுப்புக் கூட்டிற்கு கூட்டிச் சென்று அடுத்த விசாரணைக்கு முன்னதாக தனது கதையை மீள யோசிக்குமாறு குறிப்பிட்டனர்.

86. மீண்டுமொரு மாலைவேளை ரமேஸ் அதே சித்திரவதை அறைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். மீண்டும் இன்ஸ்பெக்டர் டீ சில்வா பிரதான சித்திரவதையாளராகவும் அத்துடன் வேறு பல அதிகாரிகளும் பிரசன்னமாகி இருந்தனர். ரமேசிற்கு அவரது உடல் முழுவதிலும் மரக் கொட்டனால் அடித்தனர். தனது முகத்தையும் தலையையும் காக்க கைகளை உயர்த்தியபோது அவரது வலது மணிக்கட்டு காயமுற்றது. அதன் விளைவால் அவரால் இன்றும் பாரம் தூக்கமுடியாது. அவரது தலையில் ஓர் பெட்டிக் கோப்பினைக் காப்பாக வைத்து அதன்மேல் பலதடவைகள் அடித்தனர். ரமேசிற்கு தலை சுற்றி சிறிதுநேரம் மயங்கிவிட்டார். பின்னர் தன்னைச் சுற்றி இரத்தம் கிடப்பதைக் கண்டார்.

87. தடுப்பின்போது அடியும் விசாரணைகளும் தொடர்ந்தன: இன்னொரு முறை வேறு விசாரணைக் குழுவினர் பெற்றோல் நனைக்கப்பட்ட பிளாஸ்ரிக் பையினை அவரது தலையில் போட்டு மூச்சுத் திணறவைத்தனர்.

88. சிஐடி விசாரணைகளின் போது ரமேஸ் துஸ்பிரயோக வார்த்தைகளுக்கும் முகம்கொடுத்தார். ஒரு பொலிஸ் அதிகாரி அவருக்கு இவ்வாறு குறிப்பிட்டார்: "அம்மட்ட ஹுகுன்னா ஹுத்திகே புத்தா. தமஸி பபா ஹுகும் எப்பா" (Ammata hukanna huththige puthā. Thamuse babā hukum epa) அல்லது "I will fuck your mother, நீ வேசியின் மகன். எங்களை முட்டாளாக்க முயற்சிக்கவேண்டாம்!".

அரச புலனாய்வுச் சேவையினர் மேற்கொண்ட சித்திரவதை

89. 2009 ஆண்டின் பிற்பகுதியில் ரமேஸ் ஓர் பேருந்தில் ஏற்றப்பட்டு பூசா தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டார். அவர் பதிவிடத்திற்குச் சென்றதும் அவரது உடை கழற்றிச் சோதனையிடப்பட்டது. பின்னர் அவர் ஓர் தடுப்புக் காவல் தொகுதியினுள் விடப்பட்டார். ரமேஸ் பூசா முகாமில் பல மாதங்களாக தடுத்துவைக்கப்பட்டார்.

90. அங்கே அவர் அரச புலனாய்வுச் சேவை அதிகாரிகள் எனத் தம்மை அறிமுகப்படுத்திய ஓர் விசாரணை அணியினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு சித்திரவதைசெய்யப்பட்டார். விசாரணைகள் தொடங்கியபோது பிரதான விசாரணையாளர் ரமேசின் கோப்பினை வைத்திருந்ததுடன் 4ம் மாடியில் நடைபெற்ற விசாரணைகளின் போது கூறிய விபரங்களும் அவருக்குத் தெரிந்திருந்தது.

91. விசாரணை நடைபெறுகின்ற வேளைகளில், அரச புலனாய்வுச் சேவை அதிகாரிகள் மரத்தில் செய்யப்பட்ட தடித்த பற்றினால் (bat) ரமேசிற்கு அடித்தனர். ஒரு சந்தர்ப்பத்தில் முக்கிய விசாரணையாளர் எனக்குச் சொல்லு! எனக்குச் சொல்லு! எனக் கத்தியவாறு ரமேசின் தலையை சுவரில் மோதினார். இன்னொரு தடவை தனது ரீசேட்டினால் ரமேசின் கழுத்தை நெரிக்க முயற்சித்தார். ஒருமுறை ஆணிகள் அறையப்பட்டிருந்த மரப் பலனை ஒன்றின் மீது ரமேசை முட்டுக்காலில் நிற்குமாறு வற்புறுத்தினர். அவர் முட்டுக்காலில் இருக்கும் போது அதிகாரி ஒருவர் அவருடைய தலையில் அடிக்க ஆணிகள் அவருடைய தோலினுள் புகுந்தன. ஆண் அதிகாரிகள் அவருடைய விதைகளை பலமாக நசித்து ரமேசிற்கு பாலியல் ரீதியான துஸ்பிரயோகத்தினையும் மேற்கொண்டனர்.

92. இந்த விசாரணைகளின் போது அதிகாரிகள் பின்வரும் மிகவும் இழிவான பாலியல் வார்த்தைகளையும் ரமேசிற்கு எதிராகப் பிரயோகித்தனர்: “ குத்திகே புத்தா” இதன் அர்த்தம் “வேசியின் மகன்” என்பதாகும். “ டுவுவுநு காரியா” அல்லது டுவுவுநு நாசகாரி மற்றும் “தமஸ் மறலா டன்னா திப்பே” அதாவது “ நீ கொல்லப்படவேண்டியவன்”.

93. இறுதியில், 4ம் மாடிக் கட்டிடத்திற்கு மீண்டும் மாற்றப்படவுள்ளதாக ரமேசிற்கு காவலாளிகளால் தெரிவிக்கப்பட்டது. ஓர் அதிகாரியினால் வழங்கப்பட்ட ஓர் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்திடுமாறு ரமேஸ் வற்புறுத்தப்பட்டார். பலவந்தமாக எடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தினை இறுதியில் ரமேசிற்கு எதிரான வழக்கில் பயன்படுத்தினர். அப்போது அவர் தற்கொலை எண்ணம் கொண்டிருந்ததுடன் உடல் நலிவுற்றும் இருந்தார்.

94. சித்திரவதை செய்வதில் இன்ஸ்பெக்டர் நிசாந்த டீ சில்வாவின் பங்கு பற்றி அதிகாரிகள் அறிந்திருந்தனர். ஆயினும் ஒருபோதும் டீ சில்வா மீது வழக்குப்போடவோ அல்லது சித்திரவதையில் அவருடை பங்கு தொடர்பாக ஒழுக்க நடவடிக்கை எடுக்கவோ இல்லை. பதிலாக, ராஜபக்ச அரசாங்கத்தின் கீழ் சிஐடியில் அவருக்குப் பதவியுயர்வு வழங்கப்பட்டது. அவர் தற்போது சிஐடியின் குற்றப் பிரிவிற்குப் பொறுப்பான அதிகாரியாக உள்ளார். பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை உட்பட்ட மனித உரிமைகள் தொடர்பான வழக்குகளின் விசாரணைகளுக்கு அவர் தலைமைதாங்குகின்றார். இலங்கை அரசாங்கம் இந்த வழக்குகளை ஐ.நா விற்கு முன்னுதாரண வழக்குகளாகவும் மனித உரிமை

துஸ்பிரயோகிகளை சட்டரீதியாகப் பொறுப்புள்ளவர்களாக வைத்திருப்பதற்கான தமது விருப்பத்திற்கும் திறமைக்கும் உதாரணங்களாகவும் சமர்ப்பித்துள்ளது.1

95. ரமேசிற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் முடிவில் நீக்கப்பட்டன. அவர் தனது உயிருக்குப் பயந்து இலங்கையை விட்டுத் தப்பி வெளியேறினார். அதிலிருந்து அவருடைய குடும்பத்தினர் பொலிசினுடைய தொந்தரவிற்கும் அச்சுறுத்தலுக்கும் முகம்கொடுத்துவந்தனர். அவர் விடுவிக்கப்பட்ட பின்னர் ரமேஸ் எங்கிருக்கின்றார் என அறிய அதிகாரிகள் அவரது உறவினர்களை விசாரணைக்குட்படுத்தி அவர் எங்கே என்பதை வெளிப்படுத்தாவிட்டால் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என அச்சுறுத்தினர். தொந்தரவுகள் தொடர்ந்தன. இன்னொருமுறை, 2018 இன் இறுதிப்பகுதியளவில் ரமேஸ் தொடர்பான தகவல்களை அறிய பொலிஸ் அதிகாரிகள் அவருடைய வீட்டினை சோதனையிட்டனர்.

96. இன்றுவரை, அவர் உடல் வலியினால் அவதிப்படுவதுடன் அவருக்கு மனக் குழப்பமும் நீடித்திருக்கின்றது. இலங்கைப் பொலிசார் தன்னைத் தொடர்வதாக அவருக்கு கனவுகளும் நினைவுகளும் வருகின்றன. அவரால் முழு நேரம் வேலை செய்யமுடியாது. அவர் தொடர்ந்தும் உடற்பயிற்சிச் சிகிச்சைக்கு (பிசியோதெரப்பி) சென்றுவருகின்றார்.

### சாந்தி பத்மநாதனின் சித்திரவதை

97. இலங்கையில் 2009 இல் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போது சாந்தி பத்மநாதன் பாடசாலையில் உயர்தரமே பயின்றுகொண்டிருந்தாள். பல்கலைக்கழகத்தில் வணிகவியல்

கற்பதற்காக அவள் ஐக்கிய இராட்சியத்திற்கு சென்றாள். இலங்கையில் ஒரு தமிழராக அவள் ஒருபோதும் கண்டிராத ஒன்றை ஐக்கிய இராட்சியம் அவளுக்கு வழங்கியது: அதாவது அங்கே தமிழர்கள் நடத்தப்படுகின்ற முறையை அவள் தான் தண்டிக்கப்படுவாள் என்ற அச்சமின்றி எதிர்க்க முடியும் என்பது தான் அது. மகிந்த ராஜபக்ச லண்டனுக்கு வருகை தந்த போதும். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த போர் குற்றங்கள் பற்றிய ஆவணப்படத்தை சேனல்-4 செய்திச்சேவை ஒளிபரப்பிய போதும் அவள் மற்ற தமிழர்களுடன் சேர்ந்து ஆர்ப்பாட்டப்பேரணிகளில் பங்குபற்றினாள்.

98. 2012 இலையுதிர் காலத்தில் சாந்தியும் அவளது பெண் உறவினர் ஒருவரும் தமது குடும்பத்தினரை காண்பதற்காக இலங்கைக்கு திரும்பினர். தோள்களில் தட்டப்பட்ட போது அவர்கள் விமானநிலையத்தில் தங்கள் பயணப் பொதிகளை மட்டுமே திரும்ப பெற்றிருந்தனர். நேர்முகம் காணும் அறையொன்றிற்கு இழுத்துச்செல்லப்பட்டு சீருடையணிந்திருந்த காவல்துறை அதிகாரிகளால் கேள்வி கேட்கப்பட்டனர். கொழும்பில் உள்ள அவர்களின் விலாசத்தை எழுதிக்கொண்ட பின்பு அதிகாரிகள் அவர்களை செல்ல அனுமதித்தனர்.

99. அன்று இரவு வெகுநேரத்திற்கு பின் சாந்தியின் குடும்ப வீட்டிற்குள் நான்கு பேர் முண்டியடித்துக்கொண்டு சென்றதால் அங்கு ஒரு பெரும் சத்தம் ஏழுந்தது. அவர்கள் அடையாள அட்டைகளை காண்பித்து தாம் காவல்துறையின் பயங்கரவாத விசாரணைப் பிரிவிலிருந்து வருவதாக கூறினர். அவர்களின் அடையாள அட்டைகளை பரிசோதித்து வீட்டையும் சோதனையிட்டதன் பின்னர், சாந்தியும் அவளது உறவினரும் கைவிலங்கிடப்பட்டு கத்தி கதறக்கதற இலக்கக்குறியீடு எதுவுமற்ற ஒரு வெள்ளை வேனின் பின்புறம் பலவந்தமாக ஏற்றப்பட்டு வாகனத்தின் தரைத்தளத்தில் பலவந்தமாக அமரவைக்கப்பட்டனர். அவர்களின் கைது நடவடிக்கையினை எதிர்க்க

முற்பட்டபோது சாந்தியின் தந்தை அடித்து தரையில் விழுத்தப்பட்டார். வாகனத்திற்குள் இருந்த அதிகாரிகளில் ஒருவன் சாந்தியின் முகத்தில் பலமாக அறைந்ததுடன் கணமான பூட்ஸால் அவளது காலில் உதைந்தான். அந்த பெண்பிள்ளைகள் கதறி அழுததுடன் தாம் குடும்பத்தினரை காணவே வந்ததாகவும் விளக்கமளித்தனர். அதிகாரிகள் அவர்களை “கொட்டியா” அல்லது சிங்களத்தில் புலிகள் (தமிழீழ விடுதலைப்புலிகள்) என அழைத்தனர்.

100. பயங்கரவாத புலனாய்வு பிரிவு அதிகாரிகள் அந்த பெண்பிள்ளைகளை கொழும்பில் உள்ள மவுண்ட் லாவன்யா காவல்நிலையத்திற்கு கொண்டுசென்று அவர்களை தனித்தனியாக பிரித்தனர். சாந்தி ஒரு அதிகாரியிடம் முன்னிலைப்படுத்தப்பட்டு அந்த அதிகாரி அவளது அடையாள அட்டையினை ஒரு பிளாஸ்டிக்கினாலான சான்றாவணப் பையினுள் வைத்ததுடன் அவளின் விரல்ரேகைப் பதிவுகளையும் எடுத்து அவளை புகைப்படமும் எடுத்துதார். பின்னர் அவள் ஆண் காவலர்களால் ஒரு சிறையறைக்கு கொண்டுசெல்லப்பட்டு அவளின் கைவிலங்குகளை நீக்கினர். அரைகுறைத் தமிழில் அவர்கள் அவளின் ஆடைகளை களையுமாறு அவளுக்கு உத்தரவிட்டனர். அவர்கள் அந்த ஆடைகளை எடுத்துச்சென்றதுடன் மார்புக்கச்சையும் உள்ளாடைகளும் மட்டும் அணிந்திருந்த நிலையில் அலளை அவர்கள் அந்த கும்மிருட்டுச் சிறையறையில் அடைத்தனர்.

101. பலமணிநேரத்திற்கு பின்னர் வேறு இரண்டு காவலர்கள் வந்து சாந்தியை அவளது சிறையறையிலிருந்து ஒரு நடைபாதை வழியாக அழைத்துச்சென்றனர். ஏனைய சிறையறைகளிலிருந்து கடும்வெப்பத்தில் தண்ணீர் கேட்டு தமிழில் கதறும் பெண் குரல்களை அவள் கேட்டாள். புளோரசன்ட் விளக்கினால் ஒளியூட்டப்பட்ட சாளரங்கள் இல்லாத ஒரு அறைக்கு காவலர்கள் அவளை அழைத்துச்சென்றனர். ஒரு அதிகாரி கோப்புறையொன்றுடன் மேசையில் அமர்ந்துகொண்டிருந்தான். அவளை அழைத்துவந்த காவலர்களும்

அங்கு நின்றனர். அந்த அறையில் துர்நாற்றம் வீசியதுடன் இரத்தம் போல தென்பட்ட காய்ந்த கருப்புநிற கறைகள் காணப்பட்டது. கப்பியுடன் இணைக்கப்பட்ட ஒரு சங்கிலி உட்கூரையிலிருந்து தொங்கிக்கொண்டிருந்ததுடன் அந்த அறையின் ஒரு மூலையில் தடிகளும் கிடந்தன.

102. அவர்கள் சாந்தியை கைவிலங்கிட்டு சங்கிலியில் பிணைத்து அவளது கால்கள் தரைக்கு மேலாக அசைந்தாடும் வகையில் அவளை மேலே கட்டித்தூக்கினர். அவளது எடை முழுவதையும் தாங்கிக்கொண்டிருந்த உலோகத்தாலான அந்த கைவிலங்குகள் அவளது மணிக்கட்டுகளை கடித்துக்கொண்டிருந்தன. அவள் கீழ் உள்ளாடை மட்டுமே அணிந்திருந்தாள். அவள் தமிழீழ விடுதலைப்புலிகளுக்காக வேலை செய்வதாக அரைகுறைத் தமிழில் அவர்கள் அவள்மீது குற்றம் சாட்டினர். காவலர்கள் ஏதோ கணமாக நிரப்பப்பட்ட பிளாஸ்டிக் குழாய்களை எடுத்தனர். பின்னர் அவள் நினைவிழக்கும் வரையில் அவர்கள் சுமார் ஒரு மணி நேரமாக அவளை அடித்தனர். அப்போதும் அவள் தொங்கியபடியே இருந்தாள்.

103. பின்பு அவளது சிறையறையில் கண் விழித்த சாந்திக்கு அது பகலா இரவா எனறே தெரியவில்லை. ஆனால் அவளுக்கு அச்சமூட்டவும், அவளை உறங்கவிடாமல் செய்யவும் காவலர்கள் கதவில் அடித்து சத்தம் எழுப்புவர்.

104. ஏறக்குறைய 3 வாரங்களாக ஒவ்வொரு நாளும் சாந்தி இதே முறையில் விசாரணை செய்யப்பட்டாள். இரண்டு அதிகாரிகள் அவளின் சிறையறைக்குள் நுழைவார்கள். அவர்கள் அவளை அடிக்கடி பாலியல் ரீதியாக தொட்டு தீண்டுவார்கள். பின்னர் விசாரணை அறைக்கு கொண்டுசென்று அவளை மேசையில் கோப்புடன் இருக்கும் ஒரு அதிகாரியின் முன் நிறுத்துவர்கள். அவர்கள் தமக்குள் ஒருவருக்கொருவர் சிங்களத்திலும் அவளிடம் அரைகுறைத் தமிழிலும் அவளைக்குறித்து கீழ்த்தரமான பாலியல் கூற்றுக்களை மொழிந்து

பேசுவார்கள். ஒவ்வொரு முறையும் நினைவிழந்த நிலையிலேயே அவள் அவளது சிறையறைக்கு திரும்பகொண்டு செல்லப்பட்டாள்.

105. முதல் மூன்று தடவைகளும் சாந்தி சங்கிலியில் கட்டி தொங்கவிடப்பட்டு அடிக்கப்பட்டாள். நான்காவது தடவை அவள் தரையை நோக்கி பலவந்தமாக அழுத்தப்பட ஒரு அதிகாரி அவளது கழுத்தின் பின்புறம் தனது சப்பாத்துக் காலை வைத்து மிதித்தான். அவர்கள் கோப்பிலிருந்து நிழற்படம் ஒன்றை வெளியில் எடுத்து அவள் அதனை பார்க்வைத்தனர். அது ஐக்கிய இராட்சியத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட பேரணியொன்றில் அவள் கலந்துகொண்ட போது எடுக்கப்பட்ட அவளின் படம். அவர்கள் அந்த படத்தில் உள்ள மற்றவர்களின் பெயர்களை அறிய வற்புறுத்தி கேட்டனர். அவர்களது பெயர்கள் தனக்கு தெரியாது என்று அவள் தெரிவித்த போது அவர்கள் செந்நிறத்தில் பழுக்க காய்ச்சிய இரும்புக் கம்பி ஒன்றினை எடுத்துக்கொண்டு வந்து அவளின் முதுகில் பலமாக அழுத்தி குறிவைத்தனர். அவர்கள் யார் என்று தனக்கு தெரியாது என அவள் அலறினாள். அவள் நினைவிழக்கும் வரையில் அவர்கள் அந்த சூட்டுக் கம்பியை அவளின் முதுகில் அழுத்திப் பிடித்தனர். தொடர்ந்து வந்த நாட்களில் பல தடவைகள் அவர்கள் இதேபோல அவளுக்கு சூட்டுக்குறி வைத்தனர்.

106. முதலாவது சூட்டுக்குறி வைக்கப்பட்ட பின்னர் ஒரு சமயம் ஆண் அதிகாரி ஒருவன் சாந்தியின் சிறையறைக்குள் நுழைந்தான். அவன் சிறையறையின் கதவுடன் அவளின் கைகளை பிணைத்து கைவிலங்கிட்டதுடன் அவளை அறைந்தான். அவன் பற்றவைக்கப்பட்ட சிகரெட் முனையினை திரும்பத்திரும்ப அவளிள் வெறும் தொடையில் அழுத்தினான். சாந்தி அந்த சூட்டிலிருந்து தப்ப எதிர்த்தபோது அவன் அவளின் கால்களை குத்திப்பிடித்தவாறு அவளின் தொடைக்குள் சிகரெட்டை அழுத்தினான். பின்பு அவன் சாந்தியின் உள்ளாடைகளை களைந்து தனது கால்சட்டையையும் கழற்றி தனது ஆணுறுப்பை

அவளின் பெண்ணுறுப்பில் உட்செலுத்தி புணர்ந்தான். பின்னர் இரண்டு சமயங்களில் அவன் அவளின் சிறையறைக்குள் புகுந்து அவளை இதேபோன்று கற்பழித்தான். இரண்டாவது முறை மீண்டும் அவன் அவளை சிகரெட்டால் சுட்டான். ஒரு முறை அவன் தனது விரல்களை அவளின் ஆசனவாய்ப் புழையினுள் பலவந்தமாக செலுத்த முயற்சி செய்தான். ஆனால் அவள் ஒருவாறு சமாளித்து எதிர்த்தாள். அவன் மேலும் அவளது மார்பகங்களை பிதுக்கியதுடன் பற்களால் கடிக்கவும் செய்தான்.

107. விசாரணைகளின்போது அதே அதிகாரி சாந்தியை பாலியல் ரீதியாக அவமானப்படுத்தினான். அவளை அடிக்கும்போதெல்லாம் அவன் அவளுடன் பாலுறவு கொண்டதை மற்ற அதிகாரிகளிடம் விவரிப்பான். அவர்கள் சிங்களவர்களாக இருந்தபோதிலும் அவன் அரைகுறை தமிழில் பேசினான். எனவேதான் அவளால் புரிந்துகொள்ள முடியும். அடிக்கும் போது மற்ற அதிகாரிகள் அவளது மார்பகங்களை பிதுக்குவதுடன் அவளது பெண்ணுறுப்பையும் பற்றிப்பிடிப்பார்கள்.

108. அந்த விசாரணையாளர்கள் சந்தேகத்திற்குரிய தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களை அவளைக்கொண்டு அடையாளம் காட்ட வைப்பதில் கவனத்தை செலுத்த ஆரம்பித்தனர். அவள் மறுத்த போது கணமான மின்சார கேபிள்களால் அவளின் முதுகில் கசையடி கொடுத்தனர். கேபிள்கள் அவளின் மார்புக்கூட்டை சுற்றி வந்து அவளின் மார்பில் வலிக்கும் கையில் அடிக்கும். இரண்டு தடவைகள் அவள் முகம் மூடப்பட்டு காவல் நிலையத்திலிருந்து வெளியே ஒரு மக்கள் நெருக்கடியான இடத்திற்கு கொண்டுவரப்பட்டு மற்ற தமிழர்களை அடையாளம் காட்டுமாறு கேட்கப்பட்டாள்.

109. இறுதியாக அதிகாரிகள் சாந்தியை ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பமிடுமாறு கட்டாயப்படுத்தினர். அதன் முதல் பக்கம் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் காணப்பட்டது. அதில் அவளின் சுயவிபரங்கள் இருந்தது. ஏனைய பக்கங்கள் அவளால்

வாசிக்க முடியாத சிங்கள மொழியில் கையால் எழுதப்பட்டிருந்தது. அவள் கையொப்பமிட மறுத்த போது அவர்கள் உட்புறம் மிளகாய்த்தூளுடன் கூடிய ஒரு பிளாஸ்டிக் பையினை எடுத்து அவளது தலையில் கவிழ்த்து அதனை அவளது கழுத்தை சுற்றி கட்டினர். அவள் காற்றுக்காக போராடி மூச்சுத்திணறினாள். ஆவர்கள் அந்த பையினை அகற்றியதுடன் அவள் கையொப்பமிட்டாள்.

110. சுமார் மூன்று வாரங்கள் கடந்த பின் ஒருநாள் இரண்டு அதிகாரிகள் அவளது ஆடைகளை சிறையறைக்கு எடுத்து வந்து அவற்றை அணிந்து கொள்ளுமாறும் தம்மை தொடர்ந்து வருமாறும் அவளிடம் கூறினர். அவர்கள் அவளை அந்த கட்டடத்திற்கு வெளியே தரித்து நின்ற ஒரு வாகனத்திற்கு இட்டுச்சென்றனர். பின்னர் அவர்கள் அவளின் தலையினை ஒரு பையினால் மூடினர். தன்னை கொலை செய்யப்போகிறார்கள் என்று அவள் நினைத்தாள். ஆனால் அதற்கு பதிலாக அவர்கள் அவளது குடும்பத்தினர் அவளை விடுதலை செய்ய பணம் செலுத்துவதாக கூறி நியமித்த ஒரு மனிதனிடம் அவளை ஒப்படைத்தனர். அவள் இலங்கையை விட்டு தப்பிச்சென்றதுடன் ஒருபோதும் திரும்ப சென்றதில்லை.

111. சாந்தி இலங்கையை விட்டு தப்பி சென்றதனால் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் அவளது குடும்பத்தினரை அச்சுறுத்தி வருகின்றனர். பயங்கரவாத புலனாய்வு பிரிவினர் ஒரு குடும்ப உறுப்பினரை கைது செய்துள்ளதுடன் ஒரு டசனுக்கும் அதிகமான தடவைகள் அவர்களின் வீட்டில் தேடுதல்களை மேற்கொண்டுள்ளனர். குட்டியாக இருந்ததிலிருந்து அவர்கள் வளர்த்து வந்த அவர்களின் குடும்ப நாயினை அதிகாரிகள் கொன்றனர். அவளது நாயினை கொன்றது போலவே சாந்தியையும் தேடிக் கண்டுபிடித்து கொல்லப்போவதாக அவர்கள் அக்குடும்பத்தினரை எச்சரித்துள்ளனர்.

112. அவள் சந்தித்த கொடுமைகளால் ஏற்பட்ட உடல் மற்றும் உளவியல் நீதியிலான பாதிப்புகளால் இற்றை வரை, அவள்

துன்புற்றுவருகிறாள். அத்துடன் குறிவைத்ததனால் ஏற்பட்ட தழும்புகள் அவளது முதுகு முழுவதும் உள்ளது.

113. சாந்தி எந்த ஒரு குற்றத்திற்காகவும் ஒருபோதும் தண்டிக்கப்பட்டதில்லை.

**சுரேஸ் ஜெயபாலனின் சித்திரவதை**

114. சுரேஸ் ஜெயபாலன் ஒரு இலங்கை தமிழர். 2007 ஆம் ஆண்டு LTTE இல் பலவந்தமாக இணைக்கப்பட்டதுடன் அவர் வேலை செய்த ஒரு தொண்டு நிறுவனத்தில் ஒரு தகவல் வழங்குனராக வேலை செய்யுமாறு கேட்கப்பட்டார். இலங்கை அரசில் இருந்து ஊடுருபவர்களை கண்காணிப்பதே இவருடைய பணியாக இருந்தது.

115. இந்த தொண்டு நிறுவனமானது தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் போன்றவற்றினை ஆவணப்படுத்தும் ஒரு முக்கிய பணியை மேற்கொண்டு வந்தது. 2009 ஆம் ஆண்டு சிவில் போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கை இராணுவமும் பாதுகாப்பு படைகளும் மேற்கொண்ட போர்க்குற்றங்கள் பற்றிய தகவல்களை சுரேஸ் சேகரித்து வந்தார். இந்த அமைப்பானது இந்த தகவல்களை உலகின் வெவ்வேறு பாகங்களிலுமுள்ள மனித நேய அமைப்புக்கள் மற்றும் மதசார் அதிகாரிகளுக்கும் அனுப்பி வந்ததது.

116. 2009 ஆம் ஆண்டின் முற்பகுதியில் , இந்த தொண்டு நிறுவனத்தின் வளாகமானது இலங்கை இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகி அழிக்கப்பட்டது. சுரேசும் மற்றைய பணியாளர்களும் இலங்கைப் படைகள் அந்த இடத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னர் அந்த வளாகத்திலிருந்து ஆவணங்களை காப்பாற்றுவதற்கு ஓடிச் சென்றார்கள். சுரேஸ் பாதிக்கப்பட்டவர்களின் படங்கள், இழப்பு அறிக்கைகள் மற்றும் போர்க்குற்றங்கள் பற்றிய ஆதாரங்கள் உள்ளிட்ட பதிவுகளைப் புதைத்தார். மனித உரிமை மீறல்கள் பற்றி தாங்கள் ஆவணப்படுத்தியமை பற்றி அரசாங்கம் அறிந்தால் பழிவாங்கும்

நடவடிக்கையில் ஈடுபடும் என அவரும் அவருடைய சக பணியாளர்களும் அச்சமடைந்தனர். சுரேஸ் தன்னுடைய சொந்தப் பொருட்கள் சிலவற்றையும் LTTE யினரின் பொருட்கள் சிலவற்றையும் புதைத்தார்.

117. 2009 வசந்த காலத்தில் அவர் தனது சொந்த வீட்டில் இருந்து இடம்பெயர்ந்தார் அத்துடன் ஆயிரக்கணக்கான பொதுமக்களுடன் பொதுமக்கள் மீதான இராணுவத்தின் கண்மூடித்தனமான தாக்குதல்களுக்கு தப்பி தொடர்ந்தும் இடம்பெயர்ந்து சென்றார். இறுதியாக 2009 ஆம் ஆண்டு மே மாதம் அவரும் அவருடைய குடும்பமும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களுடன் வட்டுவாகல் பாலத்தைக் கடந்து இராணுவத்தினரிடம் சரணடைந்தார்கள். சுரேஸ் பெயர்போன பல முக்கிய LTTE தலைவர்கள் கத்தோலிக்க பாதிரியாருடன் இராணுவத்தின் பிடியில் இருப்பதை கண்டார். இவர்கள் அனைவரும் அடையாளம் இல்லாதவகையில் காணாமற் போனார்கள். பாதிரியாருடன் இறுதியாக கதைத்தவர்களில் இவரும் ஒருவர்.

118. சுரேசும் அவருடய பெற்றோர்களும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான ஒரு முகாமில் பல மாதங்களாக தடுத்து வைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார்கள். போர் முடிவடைந்து LTTE அழிக்கப்பட்ட பின்னர் அவர் தனது புது வாழ்க்கையை ஆரம்பித்தார்: போரினால் காலம் இழக்கப்பட்டதால் இரண்டு வருட கால படிப்பினை ஒருவருட காலத்தில் வேகப்படுத்தி முடித்து தன்னுடைய பல்கலைக்கழக பட்டப்படிப்பினை பூர்த்தி செய்து கொண்டார் அத்துடன் கணனி தரவு முகாமைத்துவத்தில் ஒரு வேலையையும் பெற்றார்.

119. 2011 ஆம் ஆண்டு குளிர்காலத்தில் , சுரேஸ் தனது இருப்பிடத்திற்கு திரும்பிச் சென்று கொண்டிருந்த போது சாதாரண உடையில் இருந்த நான்கு பொலிசாரால் கடத்திச் செல்லப்பட்டார். அவர்கள் அவரிடம் தமது அடையாள அட்டையைக் காட்டினார்கள் அதில் பயங்கரவாத விசாரணைப் பிரிவு எனக் குறிப்பிடப்பட்டிருந்தது அத்துடன்

அவர்கள் அவரை தமது லாண்ட்குறூசர் வாகனத்தின் பின்புறம் இழுத்துச் சென்று ஏற்றினார்கள். அவர் கைவிலங்கிடப்பட்டு கண்கள் கட்டப்பட்டு கொழும்பில் உள்ள நான்காம் மாடிக் கட்டிடத்திற்கு கொண்டு சென்ற பின்னர் அவரைப் படமெடுத்தார்கள். அவர் இரவு நேரத்தை ஒரு சிறிய அறையினுள்ள கழித்தார்.

120. அடுத்த நாள் சுரேஸ் ஒரு அறைக்கு கொண்டு செல்லப்பட்டார் அங்கு ஒரு மேசையின் பின் இரண்டு அதிகாரிகள் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் அவரைக் கைது செய்த அதே ஆட்கள் ஆவர். அவர்கள் அவரைப் பற்றிய ஒரு ஆவணக் கோவையுடனும் ஒலிப் பதிவுக்கருவியுடனும் தயாராக வந்தார்கள். அவர்கள் அவருடைய குடும்பத்தைப் பற்றியும் பிறந்ததில் இருந்து என்ன செய்தார் என்பதை பற்றி கால ஒழுங்குப் படி விசாரித்தார்கள். ஒரு அதிகாரி குறிப்பெடுத்தார். பின்னர் சுரேசை அவர் அடைத்து வைக்கப்பட்டிருந்த சிறிய அறைக்குள் திரும்பவும் கொண்:டு வந்தார்கள். சில தினங்களின் பின்னர் அவர் மீண்டு:ம் விசாரிக்கப்பட்டார்.

121. சில வாரங்களின் பின்னர் , அவர் இன்னுமொரு அறைக்குள் கொண்டு செல்லப்பட்டார், அந்த அறையினுள் முடிவில் உலோகமூடி போடப்பட்ட கொட்டன், சீலிங்கில் ஒரு இரும்பு கம்பி மற்றும் ஒரு நீண்ட மெல்லிய வாங்கிலும் இருந்தது. அங்கு அவரைக் கைது செய்தவர்களில் ஒருவர் உட்பட இரண்டு அதிகாரிகள் அவருக்காக காத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அவரின் ஆடைகளைக் கழைந்து உள்ளாடையுடன் விட்டதுடன் அருகில் இருந்த சீலிங்கில் இருந்த இரும்பு கம்பியுடன் அவரது கைகளைக் கட்டினார்கள். அச்சமடைந்த சுரேஸ் அழத் தொடங்கியதுடன் அவர்களிடம் எல்லாவற்றையும் கூறிவிட்டதாக கூறினார். முழு உண்மையையும் அவர் கூறவேண்டும் என அதிகாரிகளில் ஒருவர் அவருடைய முதுகில் கொட்டனால் அடித்ததுடன் அவரது கால்களை பிளாஸ்ரிக்கினால் கவர் செய்யப்பட்ட உலோக வயரினால் காலில் அடித்தார்கள். மற்றயவர் குறிப்பெடுத்துக் கொண்டிருந்த போது ஒரு TID

அதிகாரி அவருக்கு அடித்தார். சுரேசினுடைய கதறல்கள் சுவர்களில் எதிரொலித்தன. அவர் குழப்பமும் பலவீனமும் அடையும் வரை அடிக்கப்பட்ட பின்னர் அவருடைய அறைக்குள் இழுத்துச் செல்லப்பட்டு அவருடைய கால்கள் சங்கிலியால் கட்டப்பட்டன.

122. சில நாட்களின் பின்னர் , அதிகாரிகள் அவருடைய அறைக்குள் வந்ததுடன் சிங்களத்தில் எழுதப்பட்ட ஒரு ஆவணத்தில் கையொப்பமிடுமாறு சொன்னார்கள். அவர் அது என்ன என்று கேட்ட போது அவர்கள் முகத்தில் அடித்துவிட்டு அது ஒரு வாக்குமூலம் என்று சொன்னார்கள். அவரால் அதனை வாசிக்க முடியாமல் இருந்தாலும் கூட அதில் கையொப்பம் இடுவதைத் தவிர வேறு வழியெதுவும் இல்லை என்பதை அவர் உணர்ந்து கொண்டார்.

123. அடுத்து வந்த சில மாதங்களில் அவர்கள் அவரை விசாரணை செய்து சித்திரவதை செய்தார்கள். அவரை கை முட்டிகள், உலோகமுனைகளைக் கொண்ட கொட்டன்கள் மற்றும் கடினமான பொருளால் நிரப்பப்பட்ட பிளாஸ்டிக் பைப் போன்றவற்றால் அடித்தார்கள். அவரைக் கன்னத்தில் அறைந்தார்கள், சப்பாத்துக் கால்களால் உதைந்தார்கள், சிகரெட்டினால் சுட்டார்கள், மிளகாய்தூளையும் புகையையும் சுவாசிக்குமாறு நிர்ப்பந்தித்தார்கள், முள்ளுக்கரண்டி போன்ற ஒரு சூடாக்கப்பட்ட உலோகத்தால் குதிதினார்கள், கதிரையால் வைத்து மிதித்ததுடன் வேறு பல சித்திரவதைகளையும் செய்தார்கள். அவர் மயக்கமடைந்து விழுந்த போது குளிர்தண்ணீரைக் கொண்டிவந்து முகத்தில் விசிறி அடித்தார்கள், மூச்செடுக்கமுடியாமல் திணறி தலையை இழுத்த போது அவர்கள் அவரது தலையில் மொட்டையான ஆயுதத்தால் அடித்தார்கள்.

124. ஒரு தடவை , அவரது கைகள் கால்களை சங்கிலியால் ஒரு சிறிய மேசையுடன் கட்டிவிட்டு கடும் வலியை ஏற்படுத்தும் வகையில் அவரது உடலை பின்புறமாக வளைவு வடிவாக இழுத்து நீட்டினார்கள். சங்கியால் கட்டப்பட்ட நிலையில் இவ்வாறு இழுக்கப்பட்ட நிலையில்

அவரின் முதுகெலும்பிற்கு நிரந்தரமான பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் 15 மணித்தியாலங்களுக்கு மேலாக விடப்பட்டார்.

125. ஒரு இரவு, உழுப்புகள் களையப்பட்டு உள்ளாடையுடன் விடப்பட்டதுடன் கம்பியுடன் கைகள் கட்டப்பட்டு தொங்கவிடப்பட்டு அவருடைய கைகள் கால்கள் சிகரெட்டினால் சுடப்பட்டன, மிளகாய், மிளகு தூள் என்பன முகத்தில் தூவப்பட்டதுடன், பெற்றோல் நனைத்த பையினால் முகத்தின் மேலாகப் போடப்பட்டு அதனை இறுகப்பிடித்து மூச்சுத்திணறச் செய்யட்டது, அவர் முச்சுத்திணறிய போது அவர்கள் சிரித்தார்கள். அவர்கள் ஒரு புளோறசண்ட் குழாய் மின்குமிழை அவரது காலில் அடித்து உடைத்தார்கள் அத்துடன் கதிரைக் கால்களின் கீழ் அவரது கைகளை வைத்து அதன் மீது உட்கார்ந்தார்கள்.

126. இந்த தடைவ, இரண்டு போர் அவரை பாலியல் ரீதியாக துன்புறுத்தினார்கள். அவர்கள் குடித்திருந்ததுடன் முதலில் தாங்கள் இருவரும் அவரது வாய்க்குள் விந்தினை வெளியேற்றும் வரை தங்களது ஆண்குறிகளுக்கு சுய இன்பத்தை ஏற்படுத்துமாறு சுரேசை நிர்ப்பந்தித்தார்கள். பின்னர் அவர்களில் ஒருவன் தன்னுடைய ஆண்குறியினை சுரேசின் மலவாசலினுள் புகுத்தி பாலியல் வன்புணர்வு செய்தான். மற்றவன் தன்னுடைய ஆண்குறியினை சுரேசினுடைய தொடைகளுக்கிடையில் வைத்து பாலியல் புணர்வு கொள்வதைப் போல் செய்தான். பின்னர் அவர்கள் அவரை ஒரு வாங்கிலில் நிமித்தி கிடத்திவிட்டு அவருடைய கை, கால்களை அந்த வாங்கில் கால்களுடன் கட்டினார்கள். அவர்களில் ஒருவன் நீ எங்களுடன் ஒத்துழைக்க வேண்டுன் என்று கூறி அவருடைய விதைகளை ஒரு கொண்டனால் நசுக்கினான். மற்றைய அதிகாரி தன்னுடைய ஆண்குறியினை சுரேசினுடைய வாயினுள் பலவந்தமாக புகுத்தி விந்தை வெளியேற்றினான். இவையாவும் நடைபெறும் போது அவர்கள் அவரைப் பார்த்து சிரித்தார்கள்.

127. 2012 இன் முற்பகுதியில், அதிகாரிகள் 2009 போரின் முடிவின் போது சுரேஸ் ஆவணங்கள் புதைத்த இடத்திற்கு அவரைக் கொழும்பில்

இருந்து வாகனத்தில் கொண்டு சென்றார்கள். அவர்கள் ஆவணங்களைக் தோண்டி எடுத்தார்கள். அங்கிருந்து அவர் ஜோசப் முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு ஒரு இருட்டு அறையினுள் வைக்கப்பட்டார். ஜோசப் முகாமில் சுரேஸ் மூன்று தடவைகள் இதே போன்ற பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டார். அவர் மலவாசலினூடாக வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதுடன் வாய்மூலமான பாலியல் புணர்விற்கும் நிர்ப்பந்திக்கப்பட்டதுடன் வேறு வடிவிலான பாலியல் துஸ்பிரயோகங்களுக்கும் ஆளானார்.

128. ஜோசப் முகாமில் அவர் தளபாடங்கள் எதுவும் இல்லாத நிலத்திற்கு கீழே இருந்த ஒரு அறையில் தனியாக அடைக்கப்பட்டார். அவர் அங்கு வந்த நாளன்று , காக்கி சீருடையில் இருந்த பொலிசாரினால் விசாரணை அறை ஒன்றுக்கு கொண்டு செல்லப்பட்டார். அவர் இரண்டு அதிகாரிகளைக் கண்டார் அவர்களில் ஒருவர் நான்காம் மாடிக்கட்டிடத்தில் குறிப்பெடுத்தவர் என்பதை இனங்கண்டு கொண்டார். அவர்கள் அவரை விசாரித்ததுடன் அவர் புதைத்து வைத்த ஏனைய ஆவணங்கள் பற்றியும் தம்மிடம் சொல்லுமாறு கேட்டார்கள், அதன் பின்னர் அவரை தடுத்து வைத்திருந்த அறைக்கு அவர்கள் அனுப்பினார்கள்.

129. நாட்கள் பல கழிந்த பின்னர், சுரேஸ் அவர் வைக்கப்பட்டிருந்த அறையிலிருந்து கொட்டன்கள், உலோக கம்பிகள், வயர்கள் , கயிறு ,பரல் போன்றவற்றைக் கொண்டிருந்த சித்திரவதை அறை ஒன்றுக்குள் கொண்டு வரப்பட்டார். அவரை விசாரணை செய்தவர்கள் அவருடைய கைகளை ஒரு கம்பத்திற்கு பின்னால் கொண்டு வந்து பின்பக்கமாக விலங்கு போட்டார்கள். அவர்கள் அவரை விசாரணை செய்தார்கள். அவர்களுக்கு சொல்லும் பதில் பிடிக்காவிட்டால் அவர்கள் அவரை கெட்டன்கள், கை முட்டிகள் , சப்பாத்துகள் மற்றும் வயர்களால் தாக்கினார்கள். சில சமயங்களில் ,அவர் தண்ணீராலும், ஐஸ் கட்டிகளாலும் நிரப்பப்பட்ட பரலினுள் விடப்பட்டார். அவர் ஒத்துழைக்கும் வரைக்குள் அந்த பரலினுள் இருக்கச் செய்தார்கள். வலி தாங்க

முடியாமல் தான் ஒத்துழைப்பதாக சுரேஸ் கத்தினார். மீண்டும் தண்ணீர் பரலினுள் நிர்ப்பந்திக்கப்பட்ட போது மாத்திரமே அவரிடம் சொல்வதற்கு வேறு ஒன்றும் இல்லை என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

130. 2012 ஆம் ஆண்டு இரண்டாம் காலாண்டுப் பகுதியில் அவருடைய குடும்பத்தினர் ஜோசப் முகாமில் இருந்த அதிகாரிகளுக்கு பணம் கொடுத்த பின்னர் சுரேஸ் இறுதியாக விடுதலை செய்யப்பட்டார். அவர் பின்னர் உயிர் பயம் காரணமாக இலங்கையை விட்டுத் தப்பிச் சென்றார்.

131. எந்தக் குற்றச் செயலும் புரிந்ததாக ஒரு போதும் குற்றஞ்சுமத்தப்படவில்லை.

132. அவரது விதைகளுக்கு ஏற்பட்ட பாதிப்பினால் தற்போதும் இருக்கும் வலி உட்பட அவர் சித்திரவதை காரணமாக ஏற்பட்ட உடல் மற்றும் உள தொடர்பான வடுக்களை இன்னமும் சுமந்து வருகின்றார். அவர் பல தடவைகள் தற்கொலைக்கு முயற்சி செய்திருக்கிறார் அத்துடன் நித்திரையின்மை , தடுப்பில் இருந்த போது நடைபெற்ற சம்பவங்கள் பற்றிய பயங்கரக் கனவுகள் மற்றும் மாறாத நிவைுகளாலும் துன்பப்படுகின்றார்.

**வித்தியா ஜெயக்குமார் சித்திரவதைக்குள்ளானமை**

133. வித்தியா ஜெயக்குமார் ஒரு பூர்வீக இலங்கைத் தமிழர். அவர்களது கிராமத்தின் மீது இலங்கை இராணுவம் பீரங்கித்தாகத் தல் மேற்கொண்ட போது ஒரு பெண் பிள்ளையாக, 1995 இல் அவளது குடும்பம் கடட்ாயமாக அவர்களது வீட்டை விட்டு இடம் பெயரவேண்டியதாயிற்று. தமிழ் மக்களை இராணுவம் முறைகேடாக நடத்தியதை பற்றி தனது பாடசாலையில் பேச்சாளர்கள் பேசுவதை கேடட் அவள் 1997 இல் தனது 18 ஆவது அகவையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டாள். சில காலம் அவள் ஒரு மருத்துவமனையில் பணியாளராக பணிபுரிந்தாள்.

134. அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே சமாதான முனனெடுப்புக்கள் மேற்கொளள்ப்பட்ட போது 2002 இல் வித்தியாவின் சகோதரர்களில் ஒருவர் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டதுடன் பதிலுக்கு வித்தியாவை விடுவிக்குமாறும் கோரினார். அவர்கள் அவளை விடுவிக்க மறுத்தனர். ஆனால் முன்னணி காவலரண்களிலிருந்து அவளை தொலைவில் வைத்திருக்க உறுதியளித்தனர். எனவே அவள் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப்பணியொன்றில் செயற்பட்டாள்.

135. எனினும் 2008 இல் இலங்கை இராணுவம் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலப்பகுதிக்குள் ஆழமாக முன்னேறியது. வித்தியா தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய பெண் உறுப்பினர் ஒருவரின் அணியுடன் மீள இணைக்கப்பட்டார். அரசாங்கத்தின் முன்னேற்றம் தொடர்ந்ததுடன் நிலைமையும் மோசமடைந்தது. வித்தியா விலகிப்போய் தனது குடும்பத்துடன் மீள இணைந்துகொள்ள எண்ணினாள். ஆனால் தான் தமிழீழ விடுதலைப்புலிகளால் கண்டுபிடிக்கப்பட்டு இயக்க விதிமுறையை மீறி விலகியமைக்காக தண்டிக்கப்பட நேரிடும் என்று அஞ்சினாள். இறுதியாக அவள் தப்பிச்செல்ல முடிவெடுத்தாள்.

136. 2009 இளவேனிற்காலத்தில் இலங்கை இராணுவவத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான உள்நாட்டுப் போர் இரத்தம் தோய்ந்த ஒரு முடிவுக்கு வந்துகொண்டிருந்தது. இராணுவம் தமிழீழ விடுதலைப்புலிகளின் எஞ்சிய பகுதிகளையும் முற்றுகையிட்டதால் ராஜபக்ச அரசு பொதுமக்களை பாதுகாப்பு வலையங்கள் (No Fire Zones) என கூறப்பட்ட பகுதிகளுக்குள் திரளுமாறு பணித்தது. ஆனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்த அந்த பாதுகாப்பு வலையங்கள் யாவும் போர் விமானங்களின் கண்மூடித்தனமான குண்டுவீச்சுக்கும் கனரக ஆட்லறி பீரங்கிகளின் தாக்குதலுக்கும் உள்ளாகின. அந்த கடுமையான ஆயுதத்தாக்குதலிலிருந்து பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கால்களாலேயே ஓடித் தப்பினர். சாலைகளில் கூட்டம்கூட்டமாக ஆண்கள்

பெண்கள் குழந்தைகள் என நிறைந்திருந்த இந்த மக்கள்திரளுடன் வித்தியாவும் இணைந்துகொண்டாள். மே 2009 வாக்கில், ஒருவழியாக அவள் ஒரு நீர்ப்பரப்பின் மேல் அமைந்திருந்த ஒரு குறுகலான நடைபாதையான வட்டுவாகல் பாலத்தை சென்றடைந்தாள். போரில் உயிர்பிழைத்து மிகுந்த அச்சத்துடன் இருந்த ஆயிரக்கணக்கானோர் பாலம் முழுவதும் வந்து நிறைந்துகொண்டிருந்ததுடன் அவர்களை தடுப்புக்காவலில் வைகக் காத்திருந்த இராணுவத்தின் பிடிக்குள்ளும் சென்றனர்.

137. 2009 மே 18 அன்று அல்லது அதையொட்டிய நாட்களில் பாலத்தை கடந்து வித்தியா இராணுவத்தினரிடம் சரணடைந்தாள். முதலில் அவள் ஒரு வெட்டைப்பகுதிக்கு அனுப்பப்பட்டு அதன் பின்பு கைவிடப்பட்ட ஒரு வீட்டில் அமையப்பெற்றிருந்த யாரும் அறிந்திராத தடுப்பு மையம் ஒன்றிற்கு பேருந்தில் ஏற்றி அனுப்பப்பட்டு அங்கு அவள் சுமார ் ஆறு மாதங்கள் வரை தடுத்து வைக்கப்பட்டாள். பின்பு 2009 நவம்பரில் ஒருநாள ் அவள் இராணுவ அதிகாரி ஒருவரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன் அவள் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் அவள் முன்பு வகித்த பாத்திரத்தை ஒப்புக்கொள்ளும் வரையில் வயிற்றிலும் சள்ளைகளிலும் உதையப்பட்டாள். அன்று இரவு சிப்பாய்கள் வித்தியாவின் கண்களை கட்டியும், அவளது கைகளை முதுகுக்கு பின்புறமாக கட்டியும் அவளை வாகனம் ஒன்றினுள் ஏற்றினர்.

**இராணுவ முகாமொன்றில் பாலியல் அடிமைத்தனம்**

138. இலங்கை இராணுவ முகாம்களில் அமையப்பெற்றுள்ள இரண்டு இரகசிய தடுப்பு நிலையங்களுக்கு வித்தியா அனுப்பப்பட்டார். இந்த இரண்டு இடங்களிலும் வித்தியாவுடன் ஏனைய தமிழ் பெண்களும் பலவந்தப்படுத்தி பாலியல் அடிமைகளாக நடத்தப்பட்டு அடுத்தடுத்து

ஒவ்வொரு இரவும் ஆண் மற்றும் பெண் இராணுவத்தினரால் மேற்கொளள்ப்பட்ட பாலியல் வல்லுறவு மற்றும் சித்திரவதையினை அனுபவித்தனர். இந்த துன்பியல் 2009 நவம்பரில் தொடங்கி 2013 பெப்பிரவரி வரையிலும் முடியவில்லை.

139. கண்கள் கட்டப்படட்வாறான ஒரு பயணத்தின் பின்னர் - நவம்பர் 2009 இல் முதலாவது தடுப்பு மையத்தை வித்தியா வந்தடைந்தபோது – அவள் அகவை 15 தொடக்கம் அகவை 30 வரையான இளம் தமிழ் பெண்கள் குழுவொன்றுடன் சேர்த்து அடைத்து வைக்கப்பட்டாள். அங்கு அவளது முதல் நாளன்று, அவள் ஒரு தகவல் வழங்குநராக மாற சம்மதித்தால் அவளை விடுவிப்பதாக கூறினார் ஒரு இராணுவ அதிகாரி. அவள் மறுத்ததையடுத்து சீருடையில் இரண்டு பெண் அதிகாரிகள் அவளை காண வரும் வரையில் ஒரு அறையில் விடப்படட் டாள். அவர்களுடன் வந்த இராணுவச்சிப்பாய் அந்த இரண்டு பெண்களும் உயர் தரவரிசை அதிதாரிகள் என்றும் அவள் அவர்களுக்கு கீழ்ப்படியவேண்டும் என்றும் அரைகுறைத் தமிழில் கூறினான். அந்த பெண்கள் வித்தியாவை ஒரு அறைக்கு கொண்டுசென்று அவளிடம் ஒரு ஆடையை கொடுத்து அவளது ஆடைகளை மாற்றிக்கொள்ளுமாறு கூறினர். வித்தியா அவர்களை வெளியே இருக்குமாறு கேடட்போது, அவர்கள் சிரித்ததுடன் அவளது மார்புக்கச்சை உளள்ாடைகள் உட்பட எல்லா ஆடைகளையும் கிழித்தனர். அவர்கள் எந்த உள்ளாடைகளும் இல்லாமலே அவளுக்கு ஆடை அணிவித்தனர்.

140. அவள் “யாரோ ஒருவருடன் கணவன் மனைவியைப் போல” உறங்கவேண்டுமென அந்த பெண் அதிகாரிகள் அவளிடம் கூறினர். அவர்கள் அவளது வாய்க்குள் இரண்டு குளிகைகளை வைத்து அவற்றை விழுங்கச்செய்தனர். பின்னர் அவர்கள் அவளை அழும்படி தனியே விட்டுவிட்டு சென்றனர். அந்த அறையில் ஒரு கட்டிலும் சுவரில் சனாதிபதி மகிந்த ராஜபக்சவின் உருவபப்டமும் இருந்தது.

141. பின்னர் அவர்கள் திரும்ப வந்தனர், இம்முறை மனதுங்கா என்ற ஒரு மூத்த ஆண் இராணுவ அதிகாரியுடன். பின்னர் அதிகாரிகள் மனதுங்காவை மேஜர் என குறிப்பிடுவதை கேட்ட வித்தியா அந்த ஆங்கில சொல் தரவரிசையை விளக்க அடிக்கடி சிங்களத்திலும் தமிழிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திலும் கூட பயன்படுத்தப்படுவதாக அறிந்துகொண்டாள் அவர்கள் சொல்வதை அவள் செய்யாவிட்டால் அவர்கள் அவளை கட்டிப்போட்டு ஒவ்வொரு இரவும் பல ஆண்களை அனுப்பவேண்டி வரும் என அந்த பெண் இராணுவ அதிகாரிகள் வித்தியாவிடம் கூறினர். அவர்கள் அவளை அதிகாரி மனசிங்கவுடன் தனியே விட்டு சென்றனர். வித்தியா அழத்தொடங்கியதுடன் தன்னை எதுவும் செய்துவிட வேண்டாம் என அதிகாரி மனசிங்காவிடம் கெஞ்சினாள். அவள் குனிந்து முழங்காலிட்டு கட்டிலின் கால்களை பற்றிக்கொண்டாள். எனவே அவன் அந்த இரண்டு பெண் அதிகாரிகளையும் திரும்ப அழைத்தான். அவர்கள் வித்தியாவை அடித்து கட்டிலில் கிடத்தினர். பின்னர் அவளது மணிக்கட்டு களை கட்டிலின் இருபுறமும் வைத்து கட்டி விட்டு மீண்டும் அறையை விட்டு அகன்றனர்.

142. அதிகாரி மனதுங்க வித்தியாவை அடித்ததுடன் அவளது உடல்முழுவதும் தொட்டு தீண்டினான். அவளது ஆடைகளை களைவதற்காக அவன் அவளின் கட்டுக்களை அவிழ்த்து விட்டான். பின்னர் அவன் அவள்மேல் ஏறி தனது ஆணுறுப்பை அவளது பெண்ணுறுப்பினுள் பலவந்தமாக செலுத்தினான். அவன் மேலும் தனது ஆணுறுப்பை அவளது வாய்க்குள்ளும் திரும்பத்திரும்ப செலுத்தி விந்தை வெளியேற்றினான். அவள் சத்தி எடுப்பது போல உணர்ந்து அவனது விந்தை வெளியே துப்பினாள். அவன் அதனை அவளது முகம் முழுவதும் தேய்த்தான்.

143. சிறிது நேரத்தின் பின்னர், அவன் அவளை இழுத்து நிறுத்தி கடடிலின் மேல் குனிந்து நிற்குமாறு கூறினானன். அவன்

அவளது ஆசனவாய்க்குள் தனது ஆணுறுப்பை செலுத்திப்புணர்ந்தான். அவன் அதனை முடித்துகெ காண்ட பின்னர் அவளது நீண்ட கூந்தலை பற்றி கட்டிலிலிருந்து தரையில் விழுத்தி தரதரவென இழுத்துச்சென்றான். பின்பு அவன் சென்றுவிட்டான்.

144. வித்தியா வலியுடனும் நகரமுடியாமலும் நீண்டநேரம் தரையிலேயே இருந்தாள். இது தான் முதல் முறையாக அவள் கொண்ட பாலுறவு. ஒரு இயல்பான பெண்ணாக தனது வாழ்க்கை முடிந்து விட்டது என்றும் இதன்பின் யாரும் தன்னை விரும்ப மாட்டார்கள் என்றும் அவள் எண்ணினாள்.

145. கடைசியில் அந்த பெண் அதிகாரிகள் அந்த அறைக்கு திரும்பி வந்து அவளுக்கு ஆடை அணிவித்து மற்ற பெண்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த அறைக்கு கெண்டு வந்தனர். ஆண்கள் யாரும் அந்த முகாமில் வைக்கப்பட்டிருக்கவில்லை. வித்தியா கண்ணீர்விட்டு அழுததால், தடுத்து வைகக்ப்பட்டிருந்த மற்ற பெண்கள் அவளிடம் இது தான் இங்கு நடக்கின்றது, அதாவது வெளியிலிருந்து ஆட்கள் இங்கு வந்து தமக்கும் இதையே தான் செய்வதாக கூறினர்.

146. மாதாமாதம் வித்தியா அந்த முகாமில் குறைந்தபட்சம் 15 – 20 வெவ்வேறு ஆண்களாலும் ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகள் பல ஆண்களாலும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டாள். அவர்கள் அனைவரும் சிங்களத்தில் பேசினர். அவளும் தடுத்து வைக்கப்பட்டிருந்த மற்ற பெண்களும் “கற்பழிப்பு அறைக்கு” செல்ல வேண்டியது தமது முறைாக இருந்துவிடும் என்று ஓவ்வொரு இரவும் பயத்துடன் வாழ்ந்தனர். அந்த முகாமில் தரித்தருந்த ஆண்கள் கடமையினை முடித்துவிட்டு செல்லும் போது பெரும்பாலும் ஒவெ வாரு இரவும் தடுத்து வைக்கப்பட்டி ருந்த பெண்களை கற்பழிக்க வந்தனர். முகாமிற்கு வெளியில் இருந்த படையினரும் கற்பழிக்க வந்தனர். சிலவேளைகளில் ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் பாலின்பம் அனுபவிக்க விரும்பினர். எனவே அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த பெண்களை வெளியில் கொண்டு சென்று

கூடாரங்களுக்குள் வைத்து கற்பழிப்பார்கள். வித்தியா அந்த கூடாரங்களுக்குள் வைத்து இரண்டு அல்லது மூன்று தடவைகள் கற்பழிக்கப்பட்டார்.

147. பல தருணங்களில், படையினரால் அவள் கற்பழிக்கப்பட்ட போது மற்ற இராணுவத்தினர் புகைப்படங்கள் அல்லது வீடியோக்கள் எடுப்பார்கள். சில வேளைகளில் பெண் அதிகாரிகள் கண்டுகழிப்பதுடன் அவளைப் பாரத்து சிரிப்பார்கள்.

148. வழமையாக பகல் வேளையில் குறைந்தபட்சம் மூன்று சந்தர்ப்பங்களில், பெண் அதிகாரிகளால் வித்தியா கற்பழிக்கப்பட்டதுடன் பாலியல் ரீதியாகவும் தாக்கப்பட்டாள். அவர்கள் கூறுவதை அவள் செய்யாத பட்சத்தில் அவர்கள் அவளை அறைந்தனர். அவர்கள் அவளது பெண்ணுறுப்பினுள் தமது விரல்களை செலுத்தியதுடன் தமது மார்பகங்களை மசாஜ் செய்து தமது பெண்றுப்புக்களை தொட்டு தீண்டுமாறும் உத்தரவிட்டனர்.

149. பல மாதங்கள் தடுப்புக்காவலுக்கு பின்னர் ஒரு நாள் இரவு, அவர்கள் உறங்கிக்கொண்டிருந்த அறையிலிருந்து தடுத்து வைக்கப்பட்டிருந்த பெண்களில் ஒரு பெண் வெளியில் கொண்டு செல்லப்பட்டாள். சிறிது நேரத்திற்கு பின்னர் "கற்பழிப்பு அறை" இருந்த திசையில் ஒரு துப்பாக்கிச்சூட்டு சத்தம் வந்ததை வித்தியா கேட்டாள். என்ன நடந்தது என்று பாரப்பதற்காக அவள் வாசலுக்கு சென்றபோது படையினர் அந்த பெண்ணை அவளது தலையிலிருந்து இரத்தம் வழிந்த நிலையில் அந்த அறையிலிருந்து வெளியே தூக்கிச்செல்வதை பாரத்தாள். அவளது உடல் ஒரு போரவ்வையால் போர்த்தப்பட்டிருந்தது. வித்தியா அவளை பின்னொருபோதும் திரும்ப கண்டதில்லை.

150. அவள் இந்த முகாமில் இருந்த காலத்தில் தடுத்து வைகக் ப்பட்டிருந்தவர்களுக்கு கிட்டத்தட்ட மாதம் ஒரு முறை என்ற ரீதியில், காவலர்கள் ஒரு ஊசி மருந்து ஏற்றினர். அவர்கள் ஒரே ஊசியையே தடுத்து வைக்கப்பட்டிருந்த அனைவருக்கும் பாவித்தனர். அந்த ஊசி

மருந்துகள் என்ன என்பது பற்றி அவளுக்கு ஒருபோதும் கூறப்பட்டதில்லை. ஆனால் அவை கருத்தடைக்கான ஒரு வழிமுறையாக இருக்கும் என கருதப்பட்டது. ஏனெனில் வேறுவேறு ஆண்கள் பலரால் எப்போதுமே பெரும்பாலும் ஆணுறை பாவிக்காமலே பலமுறை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் அவளோ அங்கிருந்த மற்ற பெண்களில் எந்த ஒரு பெண்ணோ ஒருபோதும் கருத்தரிக்கவில்லை.

151. அவளுக்கு வலிப்பு நோய் ஏற்படத்தொடங்கியிருந்ததன் பின்னர் வவுனியாவில் உளள் ஒரு மருத்துவமனைக்கு சென்ற போது அவள் பெற்றுக்கொண்டதுதான் அவள் பெற்ற ஒரே மருத்துவ சிசிச்சை. இரண்டு நாட்களின் பின்னர் அவள் முகாமிற்கு திருப்பி அனுப்பப்பட்டு அங்கேயே பல மாதங்கள் இருந்தாள்.

**"நான்காம் மாடி" கட்டிடத்தில் விசாரணையும் சித்திரவதையும்**

152. ஒருநாள் ஏறக்குறைப மார்ச் 2011 இல் வித்தியாவையும் தடுத்துவைக்கப்படடிருந்த ஏனைய பெண்களையும் பரிசோதனை செய்யவென ஒரு பெண் தகவல் வழங்குநர் முகாமிற்கு வந்தார். அன்று இரவு படையினர் வந்து வித்தியாவையும் மற்றொரு பெண்ணையும் கண்களை கட்டி கைகளை முதுகுக்கு பினபுறமாக கட்டி வெளியில் கொண்டு சென்றனர். அவர்கள் ஒரு நீண்ட தொலைவிற்கு வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டு ஒரு கடட்டத்திற்குள் அழைத்துச்செல்லப்படட்னர். அங்கு அவர்கள் பல படிக்கட்டு தொகுதிகளில் ஏறி மேலே செல்லவேண்டி இருந்தது. அவர்கள் ஒரு இருள்நிறைந்த சிறையறையில் வைக்கப்பட்டனர். இரவு முழுவதும் ஆண்களும் பெண்களும் அடிவாங்கி அலறுவது போன்ற அலறல்சத்தம் கேடட்து.

153. அடுத்த நாள ்காலை, சாதாரண உடை அணிந்திருந்த ஆண்களால ்ராஜேஸ்லரி ஒரு படிக்கட்டுத் தொகுதி கீழே இறக்கி அழைத்துச்செல்லப்பட்டாள். அவர்கள் தம்மை யார ்என்று அடையாளப்படுத்தவோ அல்லது அவர்கள் எங்கு இருக்கிறாரக்ள் என்றோ

அவளிடம் கூறவில்லை. ஒரு சாளரத்தினூடாக அங்கு அவர்களை சுற்றிலும் உயரமான கடட் டங்கள் இருந்ததையும் தொலைவில் கடல் இருந்ததையும் அவள் கண்டாள்.

154. அன்றும் அதற்கு அடுத்த நாளும் வித்தியா சீருடை அணிந்திராத அதிகாரிகளால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டாள். முதலாம் நாள் அவளை ஒரு தகவல் வழங்குநராக மாற்றுவதற்கு இணங்கவைகக் முயற்சித்தனர். இரண்டாம் நாள் ஒரு கோப்பினை அவள்முன் வைத்துவிட்டு அதில் கையொப்பமிடுமாறு கூறினர். அதற்கு அவள் மறுத்த போது திரும்பவும் அவளை அவளுடைய இருள்நிறைந்த சிறையறைக்கே கொண்டு சென்றனர். பிற்பாடு இரண்டு அதிகாரிகள் அவளுடைய சிறையறைக்குள் பிரவேசித்து ஒரு பெரிய தடியால் அவளது முதுகில் அடித்தனர். ஒருவன் மின்கலவிளக்கொன்றை பிடித்திருக்க மற்றையவன் அவளது முதுகில் அடித்தான். அவர்கள் சென்றுவிட அவர்களுக்கு பதிலாக வேறு இரண்டுபேர் மாற்றப்பட்டனர். அவர்கள் இருவரும் வித்தியாவை மாறிமாறி கற்பழித்தனர்.

**இராணுவ சமையற்கூட முகாமொன்றில் பாலியல் அடிமைத்தனம்**

155. அடுத்த நாள் காவலர்கள் அவளது கண்களையும் கைகளையும் கட்டி படிக்கட்டுகள் வழியாக கீழே இறக்கி கட்டிடத்தை விட்டு வெளியே கொண்டுவந்தனர். அவர்கள் அவளை அறியப்படாத ஒரு பகுதியில் உளள் படை முகாம் ஒன்றிற்கு ஒரு நீண்ட தொலைவு வாகனத்தில் கொண்டுசென்றனர். காவலர்கள் முகாமில் இருந்த அதிகாரிகளுடன் பேசிவிட்டு வித்தியாவை அங்கு விட்டுவிட்டு சென்றனர். அவள் ஒரு பதிவேட்டில் தனது பெயரை கையெழுத்திடவேண்டி இருந்தது. பின்னர் அவள் ஒரு வீட்டிற்கு கொண்டு செல்லப்பட்டாள்.

156. உள்ளூர் படையினருக்கு அந்த முகாம் ஒரு மத்திய சமையற்கூடமாக செயல்பட்டது. அது பாலியல் அடிமைத்தன நிலையமாகவும் செயல்பட்டது. – வித்தியா கொழும்பில் உள்ள “நான்காம் மாடிக்கு” செல்ல முன்னர் அவள் வைகக்ப்பட்டிருந்த படைமுகாமைப்போல். மார்ச் 2011 முதல் பெப்பிரவரி 2013 வரையில் ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளாக இந்த முகாமில் வித்தியா சிறைவைக்கப்பட்டாள். அவளுடன் 18 முதல் 35 வரை அகவையுடைய 12 பெண்கள் வரையில் வைக்கப்பட்டிருந்தனர்.

157. இக்காலப்பகுதியில் அவள் பலதடவைகள் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதுடன் எத்தனை தடவைகள் என்ற எண்ணிக்கையையும் அவள் மறந்துவிட்டாள். அவள் தன்னை குளிக்காமல் வைத்திருந்தாள். ஆனால் அது அவர்களை தடுக்கவில்லை. பல சந்தர்ப்பங்களில் அவர்கள் அவளது வாயில் அல்லது அவளது உடல் முழுவதும் விந்தை வெளியேற்றினர். அடிக்கடி அவள் பலவந்தமான ஆசனவாய் புணர்ச்சிக்கு உட்படுத்தப்பட்டு அவளது ஆசனவாயில் இரத்தம் கசிந்தது. சிலவேளைகளில் அவள் ஒரே நேரத்தில் பல ஆண்களால் கற்பழிக்கப்படுவாள். அவள் அழுதாலோ அவர்கள் திருப்தியடையும் வகையில் அவர்கள் விரும்பியதை அவள் செய்யவில்லை என்ற பட்சத்திலோ அவர்கள் அவளை அறைந்தது தாக்கினர். சிலசமயங்களில் அவர்கள் கோபமடைந்து துப்பாக்கியால் அவளது தலைக்கு குறிவைபப்ாரக்ள். எல்லோருமே சிங்கள இராணுவ படையாட்களாக இருந்தனர். சிலர் உயர் தரவரிசை அதிகாரிகளாக காணப்பட்டனர். இரக்கத்தையோ அல்லது அனுதாபத்தையோ காட்டியவன் எப்போதும் எவனுமில்லை.

158. அவள் பிடித்துவைக்கப்பட்டிருந்த போது எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் செஞ்சிலுவைச் சங்கத்தின் சரவ் தேச குழுவோ

அல்லது ஏனைய வெளியாரோ அந்த தடுப்பு மையத்தில்கு வருகை தந்ததில்லை.

159. இந்த இரண்டு ஆண்டுகளும் அவளை பிடித்துவைத்திருந்தவர்கள் அவளும் மற்ற பெண்களும் கற்பமடையாமல் தடுப்பதற்காக என்று கருதப்பட்ட ஊசிமருந்துகளை சீராமுறையில் அவளுக்கு கொடுப்பதை தொடர்ந்து செய்தனர். இறுதியாக அவள் விடுவிக்கப்பட்ட அன்றைய நாள் இரவு அவளுக்கு கடைசி ஊசி ஏற்றப்பட்டது.

160. 2013 பெப்பிரவரி தொடக்கத்தில் அல்லது அதனையொட்டிய காலப்பகுதியில் வித்தியா ஒரு இராணுவ ஜீப் வாகனத்தில் வெளியேற்றப்பட்டு வவுனியா ஜோசப் முகாமிற்குள் அமைந்திருந்த ஒரு அறைக்கு கொண்டுவரப்பட்டாள். அங்கு அவள் தனது குடும்பத்தினருடன் மீள ஒன்றிணைக்கப்பட்டாள். சமையற்கூட முகாமிலிருந்து அவளை விடுவிப்பதற்கு அவளது குடும்பம் பணம் செலுத்தியிருந்தது. ஒரு உள்ளூர் காவல் நிலையத்திற்கு சென்று சீராக அறிக்கையிடவேண்டும் என்ற நிபந்தனையுடன் வித்தியா விடுவிக்கப்பட்டாள்.

### காவல் நிலையமொன்றில் மேலும் பாலியல் வன்கொடுமை

161. காவல்துறையினரால் அவள் பாலியல் நீதியிலான தொந்தரவுக்கு ஆளானதுடன் வாடிக்கையாக தொட்டு உடலால் பாலியல் ரீதியாக தீண்டப்பட்ட போதிலும் அறிவுறுத்தப்பட்டதன் படி அவள் காவல் நிலையத்திற்கு சென்று சீராக அறிக்கையிட்டாள். ஆனால் பின்பு 2014 இல் ஒருநாள் அவள் காவல் நிலையத்திற்கு அறிக்கையிட சென்ற போது ஒரு காவல்துறை அதிகாரி அவளை ஐந்து அல்லது ஆறு இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைத்தான். அவர்கள் தமது ஆண்குறிகளை அவளுக்கு காட்டியதுடன் அவள் அவற்றை தொடுமாறும்

கேட்டனர். அவர்கள் அவளை நிலத்தில் தள்ளிவிழுத்தி அவளது பாவாடையை உயர்த்தினர். அவர்களில் பலர் அவளை கற்பழித்தனர். அவளுக்கு வலிப்பு வரத்தொடங்கியதும் அவள் கடைசியில் வீட்டிற்கு திருப்பி அனுப்பப்பட்டாள்.

162. இந்த சம்பவத்திற்கு பின்னர் அவள் காவல் நிலையத்திற்கு சென்று அறிக்கையிடுவதை நிறுத்தினாள். கடைசியில் அவள் சமூகமளிக்க தவறியதால் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டாள். இராணுவ அதிகாரிகளால் அவள் கற்பழிக்கப்பட்டதை அவர்களிடம் தெரிவித்த பின்னர் அவர்கள் அவளையும் அவள் தொடர்பான விசாரணை ஆவணங்களையும் இராணுவத்திற்கு திருப்பிவிட்டனர். ஒரு அரசியல்வாதி தலையிட்டு அவளது விடுதலையை பெறும்வரை இராணுவத்தினர் அவளை பல மாதங்களாக தடுத்து வைத்திருந்தனர்.

163. விடுவிக்கப்பட்ட உடன் அவள் இலங்கையிலிருந்து தப்பி ஓடினாள்.

164. வித்தியா நீண்டகால சித்திவதைக்கு உட்படுத்தப்பட்டமை, பாலியல் அடிமையாக்க பாவிக்கப்பட்டமை, வெளியுலக தொடர்புகளற்ற தடுப்புக்காவல் ஆகியன அவளது உடல் மற்றும் உள ஆரோக்கியத்தில் மோசமான தாக்கங்களை ஏற்படுததியுள்ளது. அவள் மீண்டுவர போராடியிருப்பதுடன் தற்கொலை எண்ணங்களாலும் பீடிக்கப்பட்டிருக்கிறாள் என்பதுடன் அவளது அதிர்ச்சிக்குரிய விரிவான உளநல சிகிச்சையும் அவளுக்கு தேவையாக உள்ளது.

165. வித்தியா ஒருபோதும் எந்த ஒரு குற்றத்திற்காகவும் தண்டிக்கப்படட்தில்லை.

### நிமல் ஜெயசூரியாவின் சித்திரவதை

166. நிமல் என்பவர் சிங்கள இனத்தைச் சேர்ந்த இலங்கையர். இவர் பொதுமக்கள் ஆதரவு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன்னர் பல்வேறு மனித உரிமைகள் அமைப்புக்களில் பணியாற்றினார். இவர்

ஊழல் எதிர்ப்பு மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

167. அவர் இவ்வாறு பணியாற்றிவரும் காலத்தில், இவரைப் போன்ற வேலைகளில் ஈடுபட்டு வந்த இவரது சகபாடித் தமிழரான சிவா என்பவர் அவருடைய நண்பரானார் ( அவருடைய பாதுகாப்பு கருதி வழக்கிற்கான புனைபெயர் பாவிக்கப்படுகின்றது)

168. ராஜபக்சாக்கள் பதவிக்கு வந்து போர் தீவிரமடைந்து கொண்டிருந்த வேளையில் ஊழல்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக குரல் கொடுப்பது மிகவும் கடினமானதாக இருந்தது. பேச்சு சுதந்திரம் நசுக்கப்பட்டிருந்தது அத்துடன் அரசாங்கத்தை விமர்சிப்பது ஆபத்தானதாக கருதப்பட்டது.

169. 2008 இன் முற்பகுதியில் ஒரு மாலை வேளையில் ஒன்றாகப் பணியாற்றும் சிவாவை சிவில் உடையில் இருந்த அதிகாரிகள் கொண்டு சென்று விட்டதாக நிமலுக்கு செய்தி கிடைத்தது. மக்களை ஒன்று திரட்டி தலையீவதற்கு நிமல் முயற்சி செய்தார். சிவாவை நன்கு தெரிந்த முக்கியமான செயற்பாட்டாளர்களை அவர் அழைத்தார். ஆனால் அவர்கள் அச்சமடைந்ததுடன் உதவிக்கு வேறு யாரையும் அழைக்குமாறு தெரிவித்தார்கள்.

170. அடுத்தநாள் காலை , சிவா கொழும்மிலுள்ள TID யின் அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டார் என்ற உண்மையை நிமல் அறிந்து கொண்டார். சிவாவைக் காண்பதற்கு நிமல் அங்கு விரைந்து சென்றார்.

171. தொடரான பல சோதனை நிலையங்களைக் கடந்து சென்ற பின்னர் TID அலுவலகத்திற்கு முன்னால் இருந்து காவல்அறையில் காத்திருக்க வைக்கப்பட்டார். கொஞ்ச நேரத்திற்குப் பின்னர், ஒரு அதிகாரி வந்து அவருடைய அடையாள அட்டையை வாங்கினார். அதன்பின்னர் சிவில் உடையில் இருந்த ஒருவர் வெளியில் வந்து நீ ஒரு சிங்களவன் உனக்கு ஒரு பிள்ளை உண்டு அவ்வாறிருக்கும் போது ஏன் இப்போது

நீங்கள் பிரச்சினையில் மாட்டிக் கொள்கிறீர்கள் என்று சொன்னார். சிவா LTTE யிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டிருந்தார் என்பதை நிமல் உறுதிப்படுத்தினால் தான் அவரைப் போக அனுமதிப்பதாகச் சொன்னார். சிவாவிற்கு LTTE யினர் பண உதவி செய்தார்கள் என்பதை நிமல் மறுத்தார்.

172. பல மணித்தியாலங்கள் காத்திருந்த பின்னர், அந்த அன்று தான் பெரும்பாலும் வீட்டுக்கு திரும்பிச் செல்ல முடியாது என்பதை உணர்ந்து கொண்டார். மற்றவர்களுக்கு பாதிப்பு வாராமல் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக அவர் தன்னுடைய கைத்தொலைபேசியில் இருந்த அழைப்பு விபரங்களை அழித்தார்.

173. இறுதியாக, மாலைவேளையின் முற்பகுதியில் , நிமல் TID இன் அலுவலகத்திற்குள் அழைக்கப்பட்டார். ஒரு சாஜன்ட் தன்னுடைய அலுவலகத்திற்கு வந்து இருக்கையில் அமருமாறு சொன்னார். அதன் பின்னர் ஏனைய அதிகாரிகள் இளம் தமிழ்க் கைதி ஒருவரை உள்ளே கொண்டு வந்தார்கள். அவர் மோசமான நிலையில் இருந்ததுடன் உள்ளாடை மட்டுமே அணிந்திருந்தார். அதிகாரிகளில் ஒருவர் அந்தப் சிறுவனை நிலத்தில் உதைந்து விட்டார் பின்னர் அவர்கள் அவருடைய கைகளை ஒரு கதிரையின் காலுடன் சேர்த்து விலங்கிட்டார்கள். அவர்கள் அவருடைய உடம்பை இயலுமானரை இழுத்து ஒரு மேசையுடன் அவரது காலைக் விலங்கிட்டார்கள். அவரால் அசைய முடியவில்லை.

174. அதிகாரிகளால் அந்தச் சிறுவன் சித்திரவதை செய்யப்படுவதை நிமல் பார்க்க நிர்ப்பந்திக்கப்பட்டார். அந்த சார்ஜன்ட் அந்த சிறுவனை அவனது தலை மயிரில் பிடித்து இழுத்து அவனுடைய தலையை சுவருடன் பலமாக அடித்தார். அதிகாரிகள் அவனை அடிக்கவும் உதையவும் தொடங்கினார்கள் அவன் வலியில் கத்தினான். அதிகாரிகள் நிமலுடன் சிங்களத்தில் சாதாரணமான முறையில் கதைத்ர்கள் அத்துடன் தானும் TID இனைச் சேர்ந்தவர் என அந்தச் சிறுவன் நினைப்பான் என்று அவர் பயந்தார் இவற்றினால் நிமலுக்கு அவமானமாக இருந்தது. அந்த

அதிகாரிகள் அந்தச் சிறுவனைத் தொடர்ச்சியாக அடித்துக் கொண்டிருந்த போது அந்த சார்ஜன்ட் நட்புரீதியான தொனியில் நீங்கள் எந்த இடம் என்று கேட்டார்.

175. நிமல் மனித உரிமைகள் பணியாளராக வேலை செய்த போது பல தடவைகள் சித்திரவதைகளைப் பற்றி ஆவணப்படுத்தியிருந்தார் , இப்போது அதனை தன்னுடைய கண்முன்னால் பார்த்துக் கொண்டிருந்தமையால் இந்தக் காட்சிகள் குறிப்பாக குழம்பம் ஏற்படுத்துபவையாக இருந்தன. சிவாக்கு எதிராக சாட்சி சொல்ல அழுத்தம் கொடுக்கப்பட்ட அதேவேளையில் தன்னால் தான் அந்த சிறுவன் சித்திரவதை செய்யப்பட்டான் என்ற எண்ணம் இன்று வரை அடிக்கடி நிமலுக்கு வந்து போகின்றது. இந்தச் சிறுவனை அடித்த பின்னர் அவர்கள் அவனுடைய இரத்தம் தோய்ந்த உடம்பை சங்கிலியை அகற்றி அவனை அங்கிருந்து கொண்டு சென்றார்கள்.

176. அந்த சார்ஜன்ட் நிமலிடம் வந்து அவருடைய தலைமயிரைப் பிடித்து ஏன் வந்தாய் என்று கேட்டார். தான் தன்னுடைய சகபணியாளாரான சிவாவைப் பார்ப்பதற்கு வந்ததாக சிவா சொன்னார். அந்த சார்ஜன்ட் தனது விரல்களுக்கிடையில் அவரின் மூக்கைப் பிடித்து வலிக்ககூடியதாக நசித்ததுடன் அதனைப் பிடித்து இழுத்தார். நிமலை சிங்களவரா என்று கேட்டார். அவர் ஆம் என்று சொன்ன போது அவரது மனநிலை மாறியது. அந்த சார்ஜன்ட் நான் போகின்றேன் என்று கூறி அவரது தோளில் மெதுவாக தட்டிவிட்டு தன்னுடைய கைப்பெட்டியையும் எடுத்துக் கொண்டு அங்கிருந்து சென்று விட்டார்.

177. நிமால் சிவாவுடன் TID அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டார். மிக மூத்த அதிகாரியாக பிரசன்ன டி சில்வா இருந்தார். அவரின் மேற்பார்வையின் கீழ் 3 விசாரணைப் பிரிவுகள் இருந்தன. நிமலும் சிவாவும் பிரிவு 3 இனால் விசாரிக்கப்பட்டார்கள். பிரிவு 3 இற்குப் பொறுப்பாக இருந்த அதிகாரி ஜனகந்த அத்துடன் அவருக்கு கீழ் 6 அதிகாரிகள் இருந்தார்கள். சித்திரவதையில் ஈடுபட்டவர்களான இரண்டு

பேரான அந்த சார்ஜன்ட் இவரை ஏற்கனவே நிமால் சந்தித்திருந்தார் மற்றும் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோரும் உள்ளடங்குவர். இந்த இருவரும் பிறர்துன்பத்தில் இன்பம் காண்பவர்களாக இருந்தார்கள் அதாவது அவர்கள் ஆட்களை கொடுமைப்படுத்துவதிலும் அத்துடன் நிமல் மற்றும் ஏனைய கைதிகளுக்கு உயிர்ப்பயம் ஏற்படுத்துவதிலும் மகிழ்ச்சி கண்டனர்.

178. சிங்களவர் என்பதால் அவரை கடுமையாக நடத்தவில்லை என அந்த கான்ஸ்டபிள் நிமலிடம் கூறினார். ஒன்றான ஒரே அறையினுள் அடைத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் கைதிகளைப் போல் நிமால் சங்கிலியால் கட்டி வைக்கப்படவில்லை அத்துடன் கொறிறோறில் ( Corridor) இருப்பதற்கும் நிற்பதற்கும் அனுமதிக்கப்பட்டிருந்தார். இருப்பினும், நிமல் வழமையான முறையில் அடிக்கப்பட்டார். ஒரு கைதியுடன் நேருக்கு நேராக நின்று அந்தக் கைதியின் தலைமயிரைப் பிடித்து தலையை கீழே இழுத்து வயிற்றுடன் தொட்டுக் கொண்டிருக்க வைத்திருப்பது என்பது அந்த கான்ஸ்டபிளின் விருப்பத்திற்குரிய சித்திரவதையாக இருந்தது. பின்னர் அவர் தன்னுடைய தலையை குனிந்து முள்ளந்தண்டின் நடுப்பகுதிக்கு சற்று மேலே குறிப்பிட்ட ஒரு இடத்தில் தலையால் அடித்தார். அவர் இந்த முறையை பாவிப்பதில் கைதேர்ந்திருந்தார்: அதாவது அவர் எப்போதும் நிமலின் முள்ளந்தண்டில் அதே இடத்தில் தனது கையால் அடிப்பார். அது எப்போதும் கடுமையான வலியை ஏற்படுத்தியது.

179. நிமல் வழமையாக பிரிவு 3 இற்குப் பொறுப்பாக இருந்த அதிகாரியான ஜனகந்த என்பவராலே விசாரிக்கப்பட்டார். அவர் நிமலிடம் அவரது வேலை பற்றியும் அவருடன் சேர்ந்து பணியாற்றுபவர்கள் பற்றியும் LTTE யினருடன் அவர்களுக்கு தொடர்பு உள்ளதா என்று கேட்டார்.

180. கடுமையாக அடிக்கப்படும் அவருடன் இருந்த தமிழ்க் கைதிகள் போல் இல்லாமல் நிமல் வழமையாக மனநிலை ரீதியாகவே சித்திரவதை செய்யப்பட்டார். அதிர்ச்சியூட்டும் வகையில் தமிழ்க் கைதிகள் சித்திரவதை

செய்யப்படுவதை பார்ப்பதற்கு அவர் நிர்ப்பந்திக்கப்பட்டார். ஒரு சந்தர்ப்பத்தில் பின்னிரவு வேளையில் நிமல் படுத்துக் கொண்டிருக்கும் போது அந்தக் கான்ஸ்டபிள் கைவிலங்கிடப்பட்டபடி ஒரு கைதியை அந்த அறைக்குள் கொண்டு வந்தார்.அந்தக் கான்டபிள் அந்த மனிதரை அவருக்கு முன்னாள் சித்திரவதை செய்ததை பார்த்தார். அந்த கான்ஸ்டபிள் விலாவிலும் வயிற்றிலும் குற்றினான் அத்துடன் சீமெந்தினால் நிரப்பப்பட்ட பைப்பினால் அவனுடைய கால்களில் அடித்தான். இது அரை மணித்தியாலமாக நடைபெற்றது அந்த மனிதன் அழுதான், கத்தினான். ஆந்தக் கான்டபிள் அவனைக் கொல்லப் போவதாக அச்சுறுத்தினான் அத்துடன் தன்னுடைய மனைவி கர்ப்பமாக உள்ளார் எனவும் தன்னுடைய குழந்தையைப் பார்ப்பதற்கு தயவுசெய்து தன்னை உயிருடன் விடுமாறு அந்த மனிதன் கொச்சை சிங்களத்தில் கெஞ்சினான்.

181. காவலர்கள் காலை மற்றும் மாலை குறிப்பிட்ட நேரம் வேலை செய்தார்கள் அத்துடன் காலையில் வேலை செய்பவர்கள் வரும்போது இரவு கைதிகளைத் தான் எவ்வாறு சித்திரவனா செய்தாகச் சொல்லி மகிழ்ந்தார்.

182. தனது நண்பரான சிவாவிற்கு அந்த கான்ஸ்டபிள் செய்தவற்றை நிமலால் ஒரு போதும் மறக்கமுடியாது. ஒரு நான் நண்பகல் , நான் அவரைக் கொண்டு செல்லப்போகின்றேன் என கான்ஸ்டபிள் அவர்களிடம் கூறினார். அவர் என்ன பொருள்படச் சொன்னார் என எவருக்கும் விளங்கவில்லை. ஆனால் அந்த இரவு நிமல் பயங்கரமான குழறல் சத்தத்தால் குழப்பமடைந்தார். மறுநாள் காலை, நிமல் வெளியே தண்ணீர் தாங்கி இருக்கும் இடத்திற்குச் சென்றார் அத்துடன் இரத்தம் தோய்ந்த நிலையில் சிவாவின் துடைக்கும் துண்டை கண்டார். பின்னர் அன்றைய தினம் , அந்தக் கான்ஸ்டபிள் கடந்த இரவு ஏதோ நடந்ததாக நிமலிடம் சொன்னார். தானும் மற்றைய அதிகாரிகளும் சிவாவின் பின்பக்கத்திற்குள் ஒரு கிரிக்கட் விக்கட்டை விட்டதாகச் சொன்னார். அந்தக் கான்ஸ்டபிள் இதைப் பற்றி பெருமையாகப் பேசிக் கொண்டிருந்தார் அத்துடன் தான்

எவ்வாறு அதைச் செய்ததென்றும் சிவா எவ்வாறு குழறினார் என்றும் விபரித்துக் கூறிக் கொண்டிருந்தார். சில நாட்களின் பின்னர் சிவாவை ஒரு இறந்த மனிதரைப் போல் பிரிவு3 இன் அலுவலகத்திற்கு கொண்டு வந்தார்கள்.

183. இந்தக் காலப் பகுதி முழுவதும் நிமல் மற்றவர்கள் சித்திரவதைப்படுத்தப்படுவதை பார்க்க நிர்ப்பந்திக்கப்பட்ட அதேவேளை சிவாவிற்கு எதிராக சாட்சி வழங்குமாறும் அழுத்தங்கொடுக்கப்பட்டார்.

184. பிரிவு 3 இல் அவர் தடுத்து வைக்கப்பட்ட காலப்பகுதியில் , பாதுகாப்பு சேவைகளின் ஏனைய பிரிவின் உறுப்பினர்கள் அங்கு வந்து போவதை நிமல் அவதானித்தார். கான்ஸ்டபிள் அவர்களை புலனாய்வாரள்கள் எனக் குறிப்பிட்டார். இந்த நபர்கள் சுத்தமான தோற்றமுள்ளவர்களாகவும் முழு நீளக் கையுடைய சேட்டுக்கள் அணிந்திருந்ததுடன் விசேட பைகளையும் காவிக் கொண்டு வந்ததுடன் பல கோவைகளையும் வைத்திருந்தார்கள். சில நேரங்களில் அவர்கள் வந்து கைதிகளை தங்களுடன் கொண்டு செல்வார்கள்.

185. ஒரு சந்தர்ப்பத்தில், நிமல் பிரிவு 3 இற்கு பொறுப்பதிகாரியாக இருந்த ஜனகந்தவின் அலுவலகத்தில் இருந்த போது ஒரு திறந்த இழுபெட்டிக்குள் ( Drawer) ஒரு கட்டு தடுத்து வைப்பதற்கான கட்டளைகள் இருப்பதைக் கண்டார். அந்தக் கட்டளைகளில் எழுத்துக்கள் அச்சிடப்பட்டு ஒரு கையெழுத்திற்கு அடுத்ததாக பாதுகாப்பு செயலாளர் என்ற கூறும் முத்திரை ஒன்றையும் கொண்டிருந்தது. இது பற்றி தன்னுடன் அதிகம் நட்பாக இருக்கும் அதிகாரிகளில் ஒருவரிடம் அவர் விசாரித்த போது அந்த அதிகாரி அந்தக் கையொப்பம் இறுதி தலைமை அதிகாரியான கோத்தபாய ராஜபக்சவின் கையொப்பம் என விளக்கமளித்தார். அவர்கள் ஒரு நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முன்னர் இறுதி தலைமை அதிகாரி அனுமதி வழங்க வேண்டும் என விளக்கமளித்தார்.

186. TID இன் காவலில் பல வாரங்கள் இருந்த பின்னர் நிமல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டு விடுவிக்கப்பட்டார். அவர் ஒரு போதும் எந்தக் குற்றச் செயலும் புரிந்ததாக வழக்குத் தொடரப்படவில்லை

187. எவ்வாறாயினும், அவர் தான் கண்காணிக்கப்பட்டுவருவதை உணர்ந்து கொண்டார். அவர் எங்கிருக்கின்றார் என்ன செய்துகொண்டிருக்கின்றார் என்பதை தெரிந்து கொண்ட இனந்தெரியாதவர்களிடமிருந்து அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. இனந்தெரியாதவர்கள் அவருடைய வீட்டைச் சுற்றி வருவார்கள்.

188. தமது பாதுகாப்பில் கரிசனை கொண்ட நிமலும் அவருடைய குடும்பத்தினரும் இலங்கையைவிட்டுத் தப்பிச் சென்று வெளிநாட்டில் புகலிடம் கோரினார்கள்.

189. நிமலுக்கு நடந்த துன்பத்தின் விளைவாக அவர் கடுமையான உடல் மற்றும் உணர்வுசார் பாதிப்புக்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார். வருடங்கள் கடந்தும் கான்ஸ்டபிள் அவருடைய முதுகில் முள்ளந்தண்டில் அடித்த இடத்தில் இன்னும் வலி உள்ளது. அவர் குற்ற உணர்வு மற்றும் அவமானம் போன்றவற்றால் துன்பப்படுகின்றார். தான் பலவந்தமாகப் பார்ப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட சித்திரவதைக் காட்சிகள் கட்டுப்படுத்த முடியாதபடி மனதில் திரும்ப திரும்ப வந்து போகின்றது அத்துடன் அவர் பயங்கரக் கனவுகளாலும் மாறாத நினைவுகளாலும் துன்பப்பட்டு வருகின்றார்.

### சமன் பெரேரா முகம்கொடுத்த சித்திரவதை

190. சமன் பெரேரா என்பவர் சிங்கள இனத்தைப் பூர்வீகமாகக் கொண்ட ஓர் இலங்கையர். இவர் 2011ம் ஆண்டு கோடை காலப் பகுதியில் இலங்கைப் பாதுகாப்புப் படைகளின் ஓர் பிரிவில் சிவில் உத்தியோகத்தராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். ஒரு நாள் மாலை வேளை, பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் எனத் தம்மை

அடையாளப்படுத்திக்கொண்ட சிவில் உடை அணிந்தவர்களால் சமன் தனது வீட்டில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

191. சமன் கொழும்பிலுள்ள 4ம் மாடிக்குக் கொண்டுசெல்லப்பட்டு சில நாட்களாக பயங்கரவாதத் தடுப்புப்பிரிவினரால் தடுத்துவைக்கப்பட்டிருந்தார். அப்போது இரும்புச் சட்டங்களால் திட்டமிட்டுக் கடட் ப்படடி ருந்த ஓர் தடுப்புக் கூட்டினுள ் அடைத்து வைகக்ப்படடார். அங்கிருந்து அவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் 5ம் பிரிவினைச் சேர்ந்த ரட்ணாயக்க என்பவர் உளளிட்ட சில அதிகாரிகளால் விசாரணைக்காக அடிகக்டி கூட்டிச் செல்லப்பட்டு சித்திரவதைக்குட்படுத்தப்பட்டார்.

192. கொழும்பு 1 இலுள்ள புதிய செயலர் கடட்டத்தின் 6 ஆம் மாடியின் அவசர கால ஒழுங்கு விதியின் கீழ், சமனுக்குப் பாதுகாப்பு அமைச்சினால் தடுப்பாணை பிறப்பிகக்ப்பட்டது.

193. சமன் தடுத்து வைகக்ப்பட்டிருந்த கூட்டிற்கு வெளியே கொறிடோர் புறமாக சித்திரவதை அறை இருந்தது. சமனும் ஏனைய கைதிகளும் அங்கே கொண்டுசெல்லப்பட்டு நிர்வாணமாக்கப்பட்டு கண்களும் கடட் ப்படட் ன. அது சித்திரவதக்குத் தேவையான உபகரணங்களைக் கொண்ட ஓர் பெரிய அறை. கூரையில் இரும்புக் கேடர் பொருத்தப்பட்டுள்ளது. கைதிகளை தலைகீழாகக ் கடடி த் தொங்கவிடுவதற்காக விசாரணையார்கள் அந்த இரும்புக் கேடரில் கயிறினைக் கடடி தொங்க விட்டுள்ளனர். உள்ளே கைதிகள் சித்திரவதை செய்யப்படும்போது குழறும் சத்தத்தினை அவரால் கேடக்முடிந்தது.

194. மாலைப் பொழுதுகளிலேயே விசாரணையாளர்கள் கைதிகளை சித்திரவதை செய்வர். விசாரணைக்காகக் கொண்டுசெல்லப்பட்ட ஒவ்வொரு தடவையும் சமன் நிர்வாணமாக்கப்பட்டுள்ளார்.

195. எண்ணற்ற தடவைகள் சித்திரவதை அறைக்குக் கொண்டுசெல்லப்பட்ட சமன் மிருகத்தனமாகவும் இழிவாகவும்

நடத்தப்பட்டார்: தலைகீழாககக் ட்டித் தொங்கவிட்டும் நிலத்தில் குப்புறக் கிடத்தியும் நிர்வாணமாக்கி அடித்தனர்.அவரது மூக்கை உடைத்தனர். காதில் அறைந்தனர். விதைப்பைகளை நசித்தனர். கண்களுக்கு மிளகாய்த்தூளைப் போட்டனர். ரி-56 துப்பாக்கியினால் விரல்களை முறித்தனர். தண்ணீர் கேடட் போது சிறுநீரைக் குடிக்கவைத்தனர். மலவாசலினுள் குழாயினூடாக முட்கம்பியினைச் செலுத்தி பாலியல் ரீதியாகவும் சித்திரவதை செய்தனர். அதன் பின்னர், குழாயினை முதலில் வெளியே எடுத்துவிட்டு பின்னர் மெதுவாக முட்கம்பியினை வெளியே இழுத்து மலவாசலைக் கிழித்து அதிக இரத்தப்போக்கினை ஏற்படுத்தினர்.

196. பொறுப்பு அதிகாரியான பிரசன்னா டீ அல்விஸ் விசாரணை அறையினுள் செல்லும் வேளைகளில் மேலதிக தகவல்களை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுப்பார். பிரசன்னாவும் சமனுக்கு அடித்தும் கொலை அச்சுறுத்தல்விட்டும் உள்ளார்.

197. ஏனைய நேரங்களில் சமன் பிரசன்னாவின் அலுவலகத்தில் வைத்து விசாரிக்கப்பட்டார். அவரது அறை பயங்கரவாதத் தடுப்புப்பிரிவின் மிகவும் சிரேஸ்ட அதிகாரிகளின் அறைகளை விடப் பெரியதாகும். பிரசன்னாவின் விருது வாங்கும் புகைப்படம் ஒன்று சுவரில் தொங்கவிடப்பட்டிருந்தது. மேசைக்கு முனன் ால் இருப்பதற்கு கதிரை வழங்காமல் பிசன்னா சமனை முட்டுக் காலிலேயே நிற்கவிட்டார். அங்கே அவரை புலிகளுக்கு உதவியதாகக்குற்றம் சுமத்தியதோடு புலிகளுக்கு உதவிய ஏனைய அரச அதிகாரிகளின் பெயர்களை வழங்குமாறும் பிரசன்னா வலியுறுத்தினர். அவ்வாறான எதனையும் தான் செய்யவில்லை என சமன் வலியுறுத்தியபோதும் பிரசன்னா அவரின் தலையில் அறைந்தும், உதைந்தும் உண்மையினைக் கூறாவிட்டால் பூசா தடுப்பு முகாமிற்கு அனுப்புவதாகவும் குறிப்பிட்டார்.

198. ஒரு முறை, பிரசன்னாவின் அலுவலகத்தினுள் முட்டுக்காலில் நிற்கும்போது தொலைபேசி அழைப்பு வந்தது. பிரசன்னாவின் உதவியாளர் தொலைபேசியை எடுத்து “தயவு செய்து பொறுங்கள்” என

அழைப்பு மேற்கொண்டவருக்கு தெரிவித்தார். அந்த உதவியாளர் பிரசன்னாவிற்கு “இது பாதுகாப்புச் செயலர்” என இரகசியமாகக் குறிப்பிட்டார்.

199. அப்போது பாதுகாப்புச் செயலராக இருந்தவர் கோதபாய ராஜபக்ச.

200. பிரசன்னா தொலைபேசியை எடுத்து 2-3 நிமிடங்கள் தொடர்ச்சியாக பதிலளித்துக்கொண்டிருந்தார்: “ஆம் சேர், நான் செய்வேன், ஆம், நான் அந்த விடயத்தைப் பார்த்துக்கொள்கின்றேன். சரி, நான் பார்த்துக்கொள்கின்றேன். சரி சேர், சரி.” தொலைபேசி அழைப்பினை முடித்துகொண்ட பின்னர், பிரசன்னா அறையை விட்டு வெளியே சென்று 10 நிமிடங்கள் கழித்து திரும்பிவந்தார். நிலத்தில் முட்டுக்காலில் இருந்த சமனுக்கு அடித்துவிட்டு மற்றொரு அதிகாரியிடம் அவரை அவரது தடுப்பு4 கூட்டிற்கு அழைத்துச் செல்லுமாறு குறிப்பிட்டார்.

201. வேறு மாடியிலுள்ள விசாரணை அறைக்கும் சமன் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றார். இரும்புக் குவளைகள் மீது முட்டுக்காலில் நிற்கவிடப்பட்டுள்ளார். அவருக்கு மிகவும் வேதனையாக இருந்ததுடன் அவரது முழங்கால்களை மரத்துவிடச்செய்துள்ளது. அவர் ஏனைய கைதிகள் இரத்தத்தால் தோய்ந்திருப்பதைக் கண்டுள்ளதுடன் வலியால் ஆட்கள் கத்தும் சத்தத்தினையும் கேட்டுள்ளார்.

202. பின்னர் , சமன் நீதிமன்றத்திற்குக் கொண்டுசெல்லப்படடு தடுப்புச் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார். அந்த ஆண்டே அவர் விடுதலை செய்யப்பட்டு பின்னர் நிரபராதியாகக்ப்பட்டார்.

203. நிரபராதியாகக்ப்பட்ட பின்னரும், அதிகாரிகள் மீண்டும் அவரைத் தேடிக்கொண்டிருந்தனர். அவர் இலங்கையைவிட்டுத் தப்பிச்செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டார்.

204. தான் அனுபவித்த சித்திரவதையால் சமன் இன்றுவரை உடல் மற்றும் மன உளைச்சலால் அவஸ்தைப்படுகின்றார். அவருக்கு தொடர்ச்சியான உடல் வலியும் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதாக கனவு காணுதல், நித்திரையிலிருந்து எழும்பி குழறி சிறுநீர்விடுவதான உணர்வு போன்ற உணர்வுரதீயான வடுவிற்கும் முகம்கொடுக்கின்றார். சித்திரவதையின்போது அவரது மூக்கு உடைபடட்தால் தொடர்ச்சியாக மூக்கிலிருந்து இரத்தமும் வெளியேறுகின்றது. அவர் குடும்பத்திலிருந்தும் பிரிக்கப்பட்டுள்ளார். வெளிநாட்டில் தற்கொலை செய்வதற்கும் அவர் முயற்சித்துள்ளார்.

**செந்தில் புவனேஸ்வரன் - பொதுவாக ஜோசப் முகாம் என அறியப்படும் வவுனியாவிலுளள் பாதுகாப்புபடைகளின் தலைமையகத்தில் இடம்பெற்ற சித்திரவதை**

205. செந்தில் புவனேஸ்வரன் என்பவர் பட்டதாரி பட்டப்படிப்பை தொடர்வதற்காக யு.கேயிற்கு வந்த ஒரு இலங்கைத் தமிழர். அங்கு, அவர் ராஜபக்ச ஆட்சிக்கு எதிராக மற்றைய தமிழர்களுடன் இணைந்து ஆர்ப்பாட்டங்களிலும், அரசியல் நடவடிக்கைகளிலும் சுயமாக பங்குபற்றி வந்தார்.

206 2011 ஆம் ஆண்டு , சுகயீனமாக இருந்த ஒரு குடும்ப உறுப்பினரைப் பார்ப்பதற்கு செந்தில் இலங்கைக்கு திரும்பிச் சென்றார். அவர் குடிவரவு அதிகாரிகளால் விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டு ராஜபக்ச அரசாங்கத்திற்கு எதிராக ஐரோப்பாவில் ஏதாவது ஆர்பப்பாட்டஙக்ளில் பங்குபற்றியிருக்கின்றாயா என்று கேட்டார்கள். அவர்கள் இறுதியாக அவரைச் செல்வதற்கு

அனுமதித்தாரக்ள் அத்துடன் அவர ˙ வடக்கு இலங்கையிலுள்ள அவருடைய கிராமத்திற்கு பயணம் செய்தார்.

207 அவருடைய கிராமத்தில் , அவர் நண்பர்களைச் சென்று

சந்தித்ததுடன் இலங்கையின் அரசியல் பற்றியும் இலண்டனில் ராஜபக்ச அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் பற்றியும் அவர் நண்பர்களுடன் கலந்துரையாடினார். இந்தக் கலந்துரையாடல்கள் பின்னர் அவருக்கு பிரச்சினையாக வந்தது: அவர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணையாளர்களால் விசாரிக்கப்பட்ட பேர்து அவரக்ளுக்கு இந்த கலந்துரையாடல்களின் விபரங்கள் தெரிந்திருந்தது. யாரோ அவரைப் பற்றிய தகவல்களை கொடுத்திருந்தார்கள்.

208. ஒரு நாள், அவர் ஒரு உள்ளூர் கடைக்கு சென்று விட்டு வீடு

திரும்பிக் கொண்டிருந்த போது ஜீப்பில் இருந்த சீருடை அணிந்த நபர்களால் நிறுத்தப்பட்டார். தாங்கள் அவரை விசாரிக்க வேண்டியிருப்பதாக அவர்கள் தெரிவித்தார்கள். அந்த அதிகாரிகளில் ஒருவர் அவருக்கு கைவிலங்கு போட்டதுடன் அவரை அந்த ஜபீபிற்கு இழுத்துச் சென்றார்கள். அவரை முதலில் அருகிலுள்ள ஒரு இராணுவ முகாமிற்கு கொண்டு சென்றார்கள் அங்கு பல நாட்களாக வைத்து அவர் யு.கேயில் படித்துக் கொண்டிருக்கும் போது பங்கெடுத்த அரசியல் நடவடிக்கைகள் பற்றி விசாரித்தார்கள். அவரை விசாரணை செய்தவர்கள் அவரைப் பற்றிய ஒரு கோவை ஒன்றை வைத்திருந்தார்கள். இந்த விசாரணைகளின் போது அவர் கொட்ன்களாலும் உலோக கம்பியின் ஒரு பக்க முனையாலும் தாக்கப்பட்டார். அவருடைய தலையை ஒரு சுவருடன் மோதியதுடன் சப்பாத்துக் கால்களாலும் உதைந்தாரக்ள். அவருடைய

விசாரணையாளர்கள் விசாரணை பற்றிய குறிப்புக்களை ஒரு கோவையில் பத்திரமாக வைத்தார்கள்.

209. செந்தில் அவரது இந்த கோவையுடன் ஜோசப் முகாமிற்கு மாற்றப்பட்டார். அங்கு அவரைப் படமெடுத்ததுடன், கைவிரல் அடையாளங்களும் எடுக்கப்பட்டதுடன் அவருடைய உள்ளாடைகளுடன் மட்டும் அவர் நிலத்திற்கு கீழ் இருந்த ஒரு அறையில் போடப்பட்டார். அடுத்து வநத் ஐந்து நாட்களாக அவர் அதிகாரிகள் குழுவினால் திரும்பத்திரும்ப விசாரிக்கப்பட்டார்.

210. அவரை விசாரணை செய்தவர்களுக்கு அவர் முன்பு வைக்கப்பட்டிருந்த இராணுவ முகாமில் என்ன சொல்லியிருந்தார் என்பது ஏற்கனவே தெரிந்திருந்தது. அவர்கள் அவரிடம் அதே கேள்விகளைக் கேட்டதுடன் அவர் ஒரு LTTE உறுப்பினர் எனவும் குற்றஞ்சாட்டினாரக்ள். அவர் அதனை மறுத்த போது அவர்கள் உலோக மூடி போடப்பட்ட கொட்டனால் முதுகு, தோள்கள், கால்கள், மற்றும் ஆணுறுப்பு என உடல் முழுவதும் அடித்தார்கள். அதிகாரிகள் அவர் மீது சிங்களத்தால் கத்தினாரக்ள் ஆனால் அதனை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

211. வேறொரு சந்தர்ப்பத்தில் , அதிகாரிகள் அவரை விசாரிப்பது பற்றி கவலை கொள்ளாமல் அவர்கள் அறைக்குள் வந்த உடனேயே அவரை மிருகத்தனமாக தாக்கினார்கள் அவர்கள் அவரை இழுத்துச் சென்று தலையை சுவருடன் மோதியதுடன் அவரை கொட்டன்களாலும் வயர்களாலும் கண்மூடித்தனமாக தாக்கினார்கள்.

211. ஜோசப் முகாமில் வைக்கப்பட்டிருந்த இரண்டாம் நாளில் , விசாரணையாளர்கள் சூடாக்கப்பட்ட இரும்புக் கம்பியினால் செந்திலை சுட்டார்கள். அவரை பிடித்து வைத்திருந்தவர்கள் அவருடைய

வெவ்வேறு உடல் உறுப்புக்களை சென்றடைவதற்கு வெவ்வேறு நிலையில் பிடித்து வைத்திருந்தார்கள். பல அதிகாரிகள் அவரை ஒரு சுவருடன் வைத்துப் பிடிக்க இன்னொருவர் அவருடைய முதுகில் குறுக்கு குறுக்கு வடிவுகளில் சூடு வைத்தார்கள். அவர் இறுக்கப்பிடிக்கப்பட்டு நெஞ்சில் சூடு வைக்கப்பட்டார். பின்னர் அவரைத் திருப்பி முதுகிலும் கால்களிலும் சுட்டார்கள். நிறுத்துமாறு

அவர் அவரக்ளிடம் கெஞ்சினார். அவர் முட்டுக் காலில் இருக்கச் செய்யப்பட்ட போது அவருடைய கீழ்க்காலில் இருந்த எரிந்த சதை அவருடைய தொடையில் இருந்த எரிகாயங்களுடன் ஒட்டியது. சூடு வைக்கப்பட்ட பின்னர் அவருடைய தலையை சுவருடன் மோதினார்கள் இந்த துன்புறுத்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது ஏனைய அதிகாரிகள் அறையினுள் வந்து பார்த்துக் கொண்டிருந்தாரக்ள். அவர்கள் சிரித்ததுடன் அவரையும் அவரது குடும்பத்தையும் தமிழ் மக்களையும் பற்றி அவதூறாக கேவலமாக கதைத்தார்கள்.

212. வேறு ஒரு நாள், செந்தில் ஒபப்புதல் வாக்கு மூலம் எழுதுவதற்கு மறுத்த போது அவர் சூடாக்கிய இரும்புக் கம்பிகளால் மீண்டும் சுடப்பட்டார். அவர் தனது உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மட்டும் இறுதியில் எல்லாவற்றுக்கும் ஒத்துக் கொண்டார். ஒரு அதிகாரி தமிழில் சொல்ல சொல்ல அந்த அதிகாரி எதைச் சொல்கிறாரோ அதனை எழுதுவதற்கு நிரப்பந்திக்கப்பட்டார்.

2013. ஜோசப் முகாமில் அவர் தடுத்து வைக்கப்பட்ட முதல் வாரத்தின் பின்னர் ஒரு நாள் காலையில் , காவலர்கள் அவர் வைக்கப்பட்டிருந்த அறைக்குள் வந்ததுடன் அவருக்கு ஒரு ரீ சேட்டும் , நீளக்காற்சட்டையும் கொடுத்தார்கள். அவர்கள் அவருடைய கண்களைக் கட்டி வெளியே ஒரு வாகனத்திற்கு இழுத்துச்

சென்றாரகள். ஒரு மணித்தியாலமாக வாகனம் ஓடிய பின்னர் அது நிறுத்தப்பட்டு அவரை வாகனத்தில் இருந்து வெளியே வீதியில்

இழுத்து இறக்கினார்கள். அவர் அங்கு ஒரு வேறு ஒரு நபரைச் சந்தித்தார் அந்த நபர் தான் ஒரு முகவர் எனவும் செந்திலை விடுவிப்பதற்காக அவரது குடும்பத்தவர்கள் தன்னை ஒழுங்குபடுத்தியதாகவும் தன்னை அறிமுகம் செய்து கொண்டார்.

214. செந்தில் ஒரு வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்டார் அங்கு ஒரு

உறவினர் அவருக்காக காத்துக் கொண்டிருந்தார். அவர் தன்னுடைய

உடுப்புக்களை கழற்ற முற்பட்ட போது உடுப்பு அவருடைய எரிகாயங்களில் இருந்து வடிந்த நீர்மத்துடன் ஒட்டியிருந்தது. உடுப்பில் இருந்து அதனை உரித்தெடுப்பதற்கு அவர் அதனை நீரில் ஊற வைக்க வேண்டியிருந்தது. அவருடைய உறவினர் மருந்தினை அவரது காயங்களில் தடவிவிட்டார். அதன் பின்னர் அவரை அடுத்த நாள் அவரச அவசரமாக கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார். அவர் பாதுகாப்பாக இங்கிலாந்து திரும்பினார்.

215. செந்தில் இலங்கையை விட்டு வெளியேறியதில் இருந்து , அவருடைய குடும்பம் கடுமையான தொந்தரவுகளையும், அச்சுறுத்தல்களையும் இலங்கை அதிகாரிகளிடமிருந்து எதிர் நோக்கியிருக்கின்றது. 2013 இன் குளிர்காலப் பகுதியில் , சீருடையணிந்த இராணுவத்தினர் அவருடைய குடும்ப வீட்டுக்குள் அத்துமீறிப் புகுந்தார்கள். அவரக் ள் அவருடைய தகப்பனாரை தாக்கியதுடன் அவரை வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றாரக்ள் அங்கு வைத்து செந்தில் இருக்கும் இடத்தைச் சொல்லுமாறும் கேட்டார்கள். பொலிசார் குடும்பத்தவர்கள் மனித உரிமை ஆணைக்குழுவினை தொடர்பு கொள்ள கூடாது, அவரக்ள் LTTE இனை ஆதரிக்கும் குடும்பங்களுடன் கதைக்க கூடாது மற்றும் மூன்று மாதங்களுக்குள் செந்திலை அவர்கள் பொலிஸ்

நிலையத்திற்கு கொண்டு வரவேண்டும் என்ற மூன்று நிபந்தனைகளின் கீழ் அவரை விடுதலை செய்தார்கள்.

216. 2016 ஆம் ஆண்டு , சிவில் உடை அணிந்த அதிகாரிகள் அவர்களுடைய வீட்டுக்கு வந்ததுடன் செந்திலைப் பற்றியும் அவரது சகோதரனைப் பற்றியும் அவர்களிடம் விசாரித்தார்கள். செந்திலின் பெற்றோருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை அத்துடன் அதிகாரிகள் அவருடைய தகப்பானாரைத் தாக்கியதுடன் அவரின் மூக்கில் இருந்து இரத்தம் வழிந்தது. இந்தக் குழப்பத்தால் அயலவர்ககள் வீட்டுக்கு வரத் தொடங்கியதும் அதிகாரிகள் அங்கிருந்து சென்று விட்டார்கள்.

217. இன்றுவரை செந்தில் அவர் அனுபவித்த துன்பங்கள் பற்றிய பயங்கரமான கனவுகள், அதைப் பற்றிய மீளும் நினைவுகளும் அடிக்கடி அவருக்கு வந்த வண்ணம் உள்ளது. அவரால் எதிலுமே கவனம் செலுத்த முடியாமையால் அவர் தன்னுடைய பட்டப்படிப்புக்களை தாமதப்படுத்த வேண்டியிருந்தது. அவர் தற்போதும் உடல் மற்றும் உளவியல் ரீதியான வலிகளை அனுபவித்து வருவதுடன் தன்னுடைய முதுகில் சூடு வைக்கப்பட்ட காயத்தழுமப்புகளையும் கொண்டுள்ளார்.

218. செந்தில் ஒரு போதும் எந்தக் குற்றச் செயலும் செய்ததாக ஒரு போதும் குற்றஞ்சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்படவில்லை.

## ரமணன் சிவலிங்கத்திற்கு இடம்பெற்ற சித்திரவதை

219. ரமணன் சிவலிங்கம் ஒரு இலங்கைத் தமிழர். 2008 ஆம் ஆண்டு அவர் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்தார். ஒரு நாள் அவருடைய வகுப்பில் படித்த ஒருவர் தான் ஒரு சோடி ஸ்பீக்கர்களை அருகில் உள்ள கடை ஒன்றுக்கு திருத்துவதற்கு கொண்டு வந்ததாகவும் அவர்களால் அதை திருத்தமுடியவில்லை அவற்றை உன்னிடம் கொடுத்து

வைக்கலாமா என்று கேட்டார். அவற்றை தான் பின்னர் வந்து இன்னுமொரு கடைக்கு கொண்டு செல்வதாகவும் சொன்னார். அந்த நேரத்தில் தன்னுடன் படிப்பவர் LTTE யினருடன் சம்மந்தப்பட்டவர் என்பது ரமணனுக்கு தெரியாது.

**கைதும் தொமட்டக்கொட பொலிஸ்நிலையத்தில் இடம்பெற்ற சித்திரவதையும்**

220. அளவில் யூன் 2008 , காவல்த்துறையைச் சேர்ந்த ஒரு குழுவினர் வந்து ரமணன் தங்கியிருந்த கட்டிடத்தை சோதனை செய்ய வந்தார்கள். அவர்கள் அவரைக் கைது செய்து விசாரணைக்காக கொழும்பிலுள்ள தெமட்டக்கொட பொலிஸ் நிலையத்திற்கு சொண்டு வந்தார்கள். அவரை படம் எடுத்ததுடன் அவரது கைவிரல் அடையாளங்களும் எடுக்கப்பட்டன.

221. அடுத்த ஒரு வாரகாலமாக சித்திரவதை செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு பொலிஸ்நிலையத்தில் வைத்திருந்தார்கள். அவரை விசாரணை செய்தவர்கள் அவரை அடித்து மூச்சு திணறச் செய்து அவரிடமிருந்து பதில்களை எடுத்தார்கள். அவர்கள் LTTE உறுப்பினர் என அவரைக் குற்றஞ்சாட்டியதுடன் அவருடன் படிப்பவர்களில் யார் LTTE உறுப்பினர்கள் என்று உண்மையைச் சொல்லுமாறு கேட்டார்கள். அவருடைய வீட்டில் இருந்த ஸ்பீக்கருக்குள் தாங்கள் வெடிமருந்தினைக் கண்டுபிடித்துள்ளதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டினார்கள். ரமணனிற்கு இது பற்றி எதுவுமே தெரியவில்லை. அவருக்கு அவை ஸ்பீகர்கள் என்பதைத் தவிர எதுமே தெரியாது.

222. அவரை விசாரணை செய்தவர்கள் தடியால் அவரை அடித்தார்கள் அத்துடன் கையால் குத்தினார்கள், உதைந்தார்கள். அவருடைய தலையினை சுவருடன் மோதினார்கள். பொற்றோலில் தோய்த ஒரு பிளாஸ்ரிக் பையினை தலையில் மேலாக போட்டு மூடி ஆவியை பலவந்தமாக சுவாசிக்க வைத்தார்கள். அவர் சுவாசிப்பதே ஒரு போராட்டமாக இருந்ததுடன் சுவாசிக்க முடியாமல் துன்பப்பட்டுக்

கொண்டிருந்தார். அந்த எண்ணையின் ஆவி மணமும் தலைச்சுற்றும் பல நாட்களாக அவருக்கு இருந்தது.

223. ஒரு வாரத்தின் பின்னர் , அவருடைய குடும்பத்தினர் பொலிசாருக்கு பணம் கொடுத்து அவரை விடுவித்தார்கள். அவர் ஒரு போதும் உத்தியோகபூர்வமாக குற்றஞ்சாட்டப்படவில்லை. இறுதியில் அவர் குணமடைந்து மீண்டும் பல்கலைக்கழகத்திற்கு வந்தார். ஆனால் பட்டப்படிப்பினை நிறைவு செய்யும் அவரது திட்டம் பாதியில் முடிவடைந்தது.

**கடத்தலும் தொடர்புகள் எதுவுமற்ற தடுத்து வைப்பும்**

224. அடுத்த வருடம் இலங்கை அரசாங்கத்திற்கும் LTTE யினருக்கும் இடையினாலான போர் முடிவுக்கு வந்தது. LTTE யினரால் ஆட்சி செய்யப்பட்ட இலங்கையின் வடக்குப் பகுதி இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டது. இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான பொதுமக்கள் மந்தைகள் போல் தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டார்கள். LTTE யில் உறுப்பினராக இருந்த ரமணனின் தூரத்து உறவினர் ஒருவர் இந்த முகாம் ஒன்றிலிருந்து தப்பி வந்ததுடன் தான் பிடிபட்டால் தனது உயிருக்கு ஆபத்து என்பதால் நாட்டை விட்டுத் தப்பிச் செல்வதற்கு முயற்சி செய்தார்.

225. 2009 ஆண்டின் வசந்த காலப் பகுதியில் இந்த உறவினர் கொழும்புக்கு வந்ததுடன் தன்னுடைய பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் மற்றும் கடவுச்சீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுமாறு ரமணனைக் கேட்டார்.

226. சில நாட்களின் பின்னர் , ரமணன் ஒரு உணவு விடுதியில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போது எதிர்பாரதவிதமாக திடீரென ஒரு அடையாளமிடப்படாத வாகம் ஒன்று அவருக்கு முன் வேகமாக வந்து நின்றது. அதன் கதவு திறக்கப்பட்டு சிவில் உடையில் இருந்தவர்களால் வானிற்குள் பலவந்தமாக ஏற்றப்பட்டார். இவர் உதவி கேட்டு கத்தினார். அவர் சத்தம் போட்டால் கொன்றுவிடுவோம் என்று அவர்கள் மிரட்டினார்கள். அவர்கள் அவருடைய கண்களைக்கட்டி ஒரு தடுப்பு

முகாமிற்கு கொண்டு சென்றார். அந்த வாகனமானது வேகத்தடுப்பு பிட்டிகளைக்கடந்து ஒரு இடத்திற்கு கொண்டு வந்தார்கள். உள்ளே கைவிரல் அடையாளங்கள் எடுக்கப்பட்டதுடன் உடுப்புக்கள் களையப்பட்டு பின்னர் சிவில் உடையில் இருந்த பாதுகாவலர்களால் படமும் வீடியோவும் எடுக்கப்பட்டது. யன்னல்கள் இல்லாத ஒரு சிறிய அறையினுள் அவரை அடைத்தார்கள்.

**சித்திரவதை மற்றும் பாலியல் வன்கொடுமையின் கீழ் இடம்பெற்ற விசாரணை.**

227. அடுத்த வந்த மூன்று வாரங்களாக அவர் மீண்டும் மீண்டும் அவரைத் தடுத்து வைத்திருந்த சிறிய அறையில் இருந்து ஒரு விசாரணை அறைக்குள் கொண்டு செல்லப்பட்டார். அந்த அறையில் ஒரு கொங்கிறீட் வாங்கிலும் , கொங்கிறீட் தூண்களும் கறைபடிந்த சுவர்களும் அத்துடன் ஒரு துர்நாற்றமும் இருந்தது. சீலிங்கில் இருந்து இரும்பினாலான கம்பிகள் தொங்கிக் கொண்டிருந்து. அங்கே மரப் பொல்லுகள், கொட்டன்கள் மற்றும் ஏனைய பல மழுங்கிய ஆயுதங்களும் இருந்தன.

228. காவலர்கள் விசாரணை அறைக்கு கொண்டு சென்ற போதெல்லாம் றமணன் அச்சத்தில் கத்துவார். விசாரணையாளர்கள் தங்களுக்குள் சிங்களத்தில் கதைத்தார்கள். ஆனால் அவரை தமிழில் விசாரித்து அவருடைய கசினும் ஏனைய LTTE உறுப்பினர்களும் நாட்டை விட்டுத்தப்பிச் செல்ல உதவியதாக குற்றஞ்சாட்டினார்கள். தொமட்டக்கொட பொலிஸ்நிலையத்தில் முன்னைய ஆண்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டதைப் பற்றி விசாரணையாளர்களுக்கு தெரிந்திருந்தது. கடந்தமுறை அவர் கைது செய்யப்பட்டு இதையே செய்வதாக குற்றஞ்சாட்டியதுடன் LTTE இனரை தொடர்ந்தும் ஆதரிப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

229. அவர் மிகவும் அச்சம் அடைந்ததுடன் கதைப்பதற்கும் சிரமப்பட்டார். எனவே அவர்கள் அவரை அடிக்கத்தொடங்கினார்கள்.

அவர்கள் அவரை ஒரு கொங்கிறீட் தூண் ஒன்றுடன் கட்டிய பின்னர் மரப் பொல்லுகள் மற்றும் சீமெந்தினால் நிரப்பப்பட்ட பிளாஸ்டிக் பைப்புகளால் அடித்தார்கள். அவர்கள் அவருக்கு திரும்ப திரும்ப குத்தினார்கள் பாரமான சப்பாத்தினால் உதைந்தார்கள். அவருடைய தலையைக் கொண்டு போய் சுவருடன் மோதினார்கள். அவரைக் குப்புறக்கிடத்தி விட்டு அவர் எழுந்து நடக்கவோ அல்லது நிற்க முடியாத அளவுக்கு குதிக்காலில் ஒரு கம்பியால் அடித்தார்கள்.

230. விசாரணைகள் மற்றும் அடித்தல்கள் என்பன அவர் தடுத்து வைக்கப்பட்ட காலம் முழுவதும் தொடர்ந்தது. ஒரு சந்தர்ப்பத்தில் , அவர்கள் அவரை கணுக்காலில் இருந்து தலைகீழாக கட்டி தண்ணீர் நிரப்பிய பை ஒன்றினால் தலையை மூடிக்கட்டி மூச்சுத் திணறச் செய்தார்கள். இன்னுமொரு சந்தப்பத்தில் பெற்றோலில் தோய்த பிளாஸ்டிக் பை ஒன்றினால் அவரது தலையினை மூடிக்கட்டி மூச்சுத் திணறச் செய்தார்கள்.

231. ஒரு சந்தர்ப்பத்தில் , அவர்கள் பல படங்களைக்காட்டி அதில் உள்ளவர்களை அடையாளங்காட்டுமாறு ரமணணைக் கேட்டார்கள். பயம் மற்றும் குழப்பமடைந்த நிலையில் அந்தப் படங்களில் ஒன்றில் இருந்த அவரது உறவினரை அடையாளங்காண முடியவில்லை. எனவே பொய் கூறுவதாக அவர்கள் அவரைக் குற்றஞ்சாட்டினார்கள். காவலர்களில் ஒருவர் சூடாகிச் சிவந்த ஒரு இரும்புக் கம்பியைக் காவலர்களில் ஒருவர் கொண்டு வந்த போது அவர்கள் இவரை அசையவிடாமல் செய்த்தார்கள். அவர்கள் கொதித்துக் கொண்டிருந்த உலோகக்கம்பியை வாழ்க்கை முழுவதும் சுடுதழும்பும் கடுமையான வலியும் ஏற்படும் வண்ணம் அவருடைய முதுகில் திரும்பத்திரும்ப அழுத்தினார்கள். அவர்களை அதைச் செய்ய வேண்டாம் என்று ரமணன் கெஞ்சினான். அதற்குப் பதிலாக தன்னைக் கொன்றுவிடுமாறு அவர் அவர்களைக் கேட்டான். விசாரணையாளர்கள் புகைப்பிடித்ததுடன் சிரித்து கதைத்து பாடினார்கள்.

232. அந்த ஒரு அமர்வுக்குப் பின்னர் , விசாரணை அறையினுள் றமணன் தனியாக விடப்பட்ட வேளையில் விசாரணையாளர்களில் ஒருவன் திரும்பி வந்து தன்னுடைய ஆண்குறியை றமணனின் வாயினுள் திணித்து வாய்மூலமான பாலியல் புணர்ச்சியில் ஈடுபடுவதற்கு அவரை நிர்ப்பந்தித்தான். இன்னுமொரு அமர்வின் போது அவருடைய விசாரணையாளர்கள் கடும் குளிரான ஒரு பொருளினை அவருடைய மலவாசலினுள் புகுத்தியதுடன் அது கடும் வலியை ஏற்படுத்தியது.

233. இவ்வாறான துஸ்பிரயோகங்களின் கீழ் அவரால் வாசிக்கமுடியாத மொழியான சிங்களத்தில் ஒப்புதல் வாக்குமூலம் போல் ஒன்றில் கையொப்பமிட்டார்.

234. பல வாரங்கள் இடம்பெற்ற இந்த துன்பத்தின் பின்னர் , றமணனால் சுயமாக நடக்க முடியவில்லை. அவருடைய முகம் வீக்கமடைந்து இருந்தது அத்துடன் அவருடைய முதுகில் காயங்கள் இருந்தன. ஒரு நான் இரவு அவர் கண்கள் கட்டப்பட்டு அவர் வைக்கப்பட்டிருந்த அறையிக்கு வெளியே சிலரால் கொண்டு செல்லப்பட்டு ஒரு வாகனத்தில் ஏற்றப்பட்டு அந்த வாகனம் பல மணித்தியாலங்களாக ஓடியது. இறுதியாக அவர்கள் ஒரு இடத்தில் வாகனத்தை நிறுத்தியதுடன் அங்கு காத்து நின்ற ஒருவரிடம் இவரைக் கையளித்தார்கள். ஜோசப் முகாமில் இருந்து விடுவிப்பதற்கு தன்னை றமணனின் குடும்பத்தினர் பணம் கொடுத்து ஒழுங்குபடுத்தியதாக அந்த நபர் கூறினார்.

235. தன்னுடைய உயிருக்கு அஞ்சி இவர் இறுதியாக குடும்பத்தினரின் உதவியுடன் இலங்கையை விட்டுத் தப்பி வந்து ஒரு வெளிநாட்டில் புகலிடத்தைப் பெற்றுக்கொண்டார். இன்றுவரை இந்த துன்பியல் சம்பவத்தின் விளைவாக அவர் உடல் மற்றும் உளவியல் ரீதியாக துன்பப்பட்டு வருகின்றார். அவர் குறிப்பிட்ட தூரம் நடக்க முயலும் போது அவருடைய பாதங்கள் வலிக்கின்றன. இரவு நேரங்களில் அவருக்கு பயங்கரமான கனவுகள் இடையிடையே வருவதுடன் பகல் நேரங்களில்

அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் நடந்த பயங்கர சம்பவங்கள் நடப்பது போல் உள்ளன.

236. நமணன் ஒரு போதும் எந்தக் குற்றச் செயல் செய்ததாகவும் குற்றஞ்சாட்டப்படவில்லை.

**வசந்தி றட்ணசிங்கத்தின் சித்திரவதை**

237. வசந்தி றட்ணசிங்கம் ஒரு இலங்கைத் தமிழர். 2000 ஆண்டு காலப் பகுதிகளில் அவர் வடக்கு இலங்கையில் LTTE அரசாங்கத்தின் சிவில் நிர்வாகத்தில் நிதிப்பிரிவில் வேலை செய்தார். 2009 ஆண்டு முற்பகுதியில் முன்னேறி வந்த இலங்கை இராணுவத்தினர் கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்கள் காரணமாக ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தப்பிச் சென்ற போது அவரும் தன்னுடைய சொந்த வீட்டில் இருந்து இடம்பெயர்ந்து சென்றார்.

238. அவர் போர் வலயத்தை விட்டு தப்பிச் செல்ல முயற்சி செய்தார் ஆனால் இலங்கைக் கடற்படையினரால் பிடிக்கப்பட்டார். அவர் பொலிசாரின் காவலின் கீழ் மாற்றப்பட்டு இலங்கையின் கிழக்கு கரையிலுள்ள புல்மோட்டைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார்.

239. கிட்டத்தட்ட இரண்டு மாதங்களாக , வசந்தி புல்மோட்டை பொலிஸ்நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார். அத்துடன் ஆகக்குறைந்தது மூன்று தடவைகள் கொடுமையான உடல் மற்றும் பாலியல் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டார். அவரை சித்திரவதை செய்தவர்கள் TID அதிகாரிகள் அவர்கள் தாங்கள் வசந்தியை விசாரிப்பதற்கு முன்னர் பெண் பொலிஸ் அதிகாரியை அறையை விட்டு வெளியே போகுமாறு சொன்னார்கள். அவர்கள் LTTE உடைய பணத்தைக் கையாள்வதற்குப் பொறுப்பாக இந்தது யார் என்றும் அந்த பணம் எங்கிருந்து வந்தது என்றும் அறிய விரும்பினார்கள். அவர் பதிலளித்த

போது அவர் பொய் சொல்வதாக குற்றஞ்சாட்டியதுடன் மரப் பொல்லுகளால் முதுகிலும் கால்களிலும் அடித்தார்கள். அவர்கள் அவருடைய மார்பகங்களைப் பிடித்தார்கள் அத்துடன் கெட்ட வார்த்தைகளால் கொச்சைத் தமிழில் பேசியும் "LTTE இன் பெண் உறுப்பினர்கள் போல் தலைமுடியைப் பின்னிக் கட்டுமாறு" சொல்லியும் அவரை சீட்டினார்கள்.

240. வசந்தி பாலியல் ரீதியான சித்திரவதைக்கும் உள்ளாக்கப்பட்டார். TID அதிகாரிகள் அவருடைய பெண்உறுப்பினுள் மரத்தடியை பலவந்தமாகச் செலுத்தி அவரை பாலியல் வன்புணர்வு செய்தார்கள். அவர் தாங்கமுடியாத வலியை அனுபவித்ததுடன் வலியினால் கத்தினார். அவர்கள் அவரது வயிற்றில் அடித்ததுடன் மார்பகங்களையும் பிடித்தார்கள். அடுத்த நாள் சிறுநீருடன் இரத்தம் வந்தது. திருமணமாகாத கன்னியாக இருந்த அவருக்கு இந்த வன்புணர்வானது அவருடைய கலாச்சார அடையாளத்தையே சிதைப்பதாக இருந்தது: இந்த துன்பியல் சம்பவத்திற்குப் பின்னர் தான் ஒரு போதும் திருமணம் செய்யமுடியாது என்று அச்சப்பட்டார்.

241. அதன் பின்னர் , சிங்களத்தில் உள்ள ஒரு ஆவணம் ஒன்றில் கையொப்பமிடுமாறு அவர்கள் அவரிடம் சொன்னார்கள். அவருக்கு மொழி தெரியாவிட்டாலும், அதில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று தெரியாவிட்டாலும் அச்சத்தின் காரணமாக அதில் கையொப்பமிட்டார்.

242. வசந்தி அதன் பின்னர் பூசா முகாமில் TID இனரின் தடுப்பு நிலையத்திற்கு மாற்றப்பட்டார். அங்கு அவரை அடைத்து வைத்திருந்த சிறிய அறையிலிருந்த போது ஏனைய கைதிகள் கத்தும் சத்தத்தை அவரால் கேட்ட முடிந்தது. அவர் விசாரணைக்கான கொண்டு செல்லப்பட்ட போது ஒரு ஆண் அதிகாரி அவரது உள்பக்க தொடையில் சிகரெட்டினால் சுட்டதுடன் வாய்மூலமாகவும் அவதூறு செய்தார்.

243. பூசாவில் கிட்டத்தட்ட ஒரு மாதம் வைக்கப்பட்ட பின்னர், கொழும்பிலுள்ள 4ஆம் மாடிக்கட்டிடத்திலுள்ள TID இனரின் தடுப்பு நிலையத்திற்கு மாற்றப்பட்டார். மூன்று பக்கங்கள் இரும்புக் கம்பிகளையும் ஒரு பக்கம் சுவரையும் கொண்ட மிருகத்தை அடைக்கும் ஒரு கூடு போன்ற ஒரு சிறிய அறையினுள் அவர்கள் அவரை அடைத்தார்கள். நாலாம் மாடிக்கட்டடித்தில் வைக்கப்பட்டிருந்த அந்தக் குறுகிய காலத்தில் , அவரால் வாசிக்கமுடியாத சிங்கள மொழியில் இருந்த ஒரு ஆவணத்தில் கையொப்பமிடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார்.

244. அதன் பின்னர் 2010 இல் விடுதலை செய்யப்படும் முன்னர் வசந்தி கிட்டத்தட்ட ஒரு வருட காலம் சிறையில் இருந்தார். பாதுகாப்பு அதிகாரிகளிடம் ஒழுங்காக கையொப்பமிடுமாறு அவர் பின்னர் கேட்கப்பட்டார். அவருடன் உடலுறவு கொள்ள விரும்பிய சிங்கள இராணுவத்தினரால் அவர் தொந்தரவு செய்யப்பட்டார். மேலும் பாலியல் வன்முறைக்கு உள்ளாகலாம் என்று அச்சப்பட்ட வசந்தி இலங்கையை விட்டுத் தப்பிச் சென்று வெளிநாட்டில் புகலிடம் கோரியுள்ளார்.

245. வசந்தி சித்திரவதை காரணமாக மன மற்றும் உடல் ரீதியாக துன்பப்பட்டு வருவதுடன் அவருக்கு இனப் பெருக்கத் தொகுதி தொடர்பான பயங்கர பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளது.

246. 2011 இளவேனிற்காலத்தில், ஒரு இலங்கைத் தமிழரும் அரசாங்க பாடசாலை ஆசிரியருமான மயூரன் ராஜ்குமார் - சாதாரண உடையிலிருந்த இரண்டு நபர்களால் இடைமறிக்கப்பட்ட போது - அவர் பணிநிமித்தமாக பயணித்துக்கொண்டிருந்தார். அவர்கள் அவரை துப்பாக்கி முனையில், பலவந்தமாக ஒரு இருசக்கர வாகனத்தில் ஏற்றியதுடன் கண்கள் கட்டப்பட்ட நிலையில், பொதுவாக ஜோசப் முகாம் என்று அறியப்பட்ட, வவுனியாவில் உள்ள நன்கு அறியப்பட்ட வன்னி பாதுகாப்பு படை தலைமையகத்திற்கு கொண்டு சென்றனர்.

247. அங்கு சென்றடைந்ததும் அவர் விசாரணைக்காக ஒரு அறைக்கு கொண்டு செல்லப்பட்டு அவரது கண்கட்டு நீக்கப்பட்டது. அந்த அறை ஒரு சிறிய மேசையையும் அதற்கு மேலாக குறைவெளிச்சமுடைய மின்குமிழ் ஒன்றையும் கொண்டிருந்தது. மேசையின் மறு புறம் ராஜா என்று அழைக்கப்பட்ட அதிகாரி ஒருவர் அமர்ந்திருந்தார்.

248. ஏனைய பல அதிகாரிகள் அவருக்கு உடல்ரீதியாக சித்திரவதைகளை மேற்கொள்ள அதிகாரி ராஜா அவரை விசாரனை செய்ய ஆரம்பித்தார். அவர்கள் விடுதலைப்புலிகளுக்காக வெளிநாட்டிலிருந்து பணம் பெற்றதாக அவர் மீது குற்றம் சுமத்தியதுடன் அவர் அந்த தொகையை ஒப்படைத்துவிடுமாறும் அழுத்தமாக கேட்டனர். அப்படி எவ்விதமான தொடர்பும் இல்லை என அவர் மறுத்தபோது ஒரு அதிகாரி அவரது நெஞ்சில் பலமாக உதைந்து அவர் தரையில் விழுந்தார். அவர்கள் அவரது கைவிரல்கள் மற்றும் நெஞ்சில் கணமான சப்பாத்து கால்களால் மிதித்ததுடன் அவரது முகத்திலும் அறைந்தனர். அவர்கள் கம்புகளாலும், கட்டைகளாலும் அவரை அடித்தும் துப்பாக்கியின் அடிப்பகுதியால் அவரை இடித்தும் தாக்கியதுடன் பாலுறுப்பு பகுதியிலும் அவரை உதைந்தனர். அவர்கள் தீயசொற்களை அவர்மீது வீசி அவமதித்தனர் - சிலது பெண்களின் உடல் பாகங்கள் சம்மந்தமானது, ஏனையவை தமிழர்களை இழிவுபடுத்துபவை. நினைவிழக்கும் வரையில் அவர் உள்ளங்கால்களிலும் குதிக்கால்களிலும் அடித்து தாக்கப்பட்டார்.

249. சிறிது நேரத்திற்கு பின்னர், சிகரெட்டுகள் தனது உடலை சுட்டெரிக்கும் வலியால் சிவன் விழித்தெழுந்தார். அவர் தரையில் குப்பற கிடந்தார். ஒருவர் அவரது கைகளின் மீது ஏறி நிற்க அவரது கழுத்திற்கு பின்புறமாக ஒரு துப்பாக்கி நீட்டப்பட்டிருந்தது. பின்பு அவர் பழுக்க காய்ச்சிய உலோக கம்பியால் அவரது முதுகிலும் இடதுபுற மேல் கையிலும் குறியிடப்பட்டார். இது இரண்டு வெவ்வேறு தருணங்களில்

நிகழ்ந்தது என்பதுடன் ஒவ்வொரு முறையும், நினைவிழக்கும் வரையில் அவர்கள் அவருக்கு குறிவைத்தனர்.

250. உறவினர்கள் அவர் விடுவிக்கப்படுவதற்கு பணம் செலுத்திய சில நாட்களின் பின்னர் சிவன் விடுவிக்கப்பட்டார். அவர் ஜோசப் முகாமிலிருந்து வெளியே வருவதற்கு முன்னர், அதிகாரி ராஜா அவரிடம் பொது மருத்துவமனைக்கோ அல்லது மனித உரிமை குழுவிடமோ போகக்கூடாது என்றும் என்ன நடந்தது என்பதை எவரிடமாவது சொன்னால் அவரை கொலை செய்து விடுவதாகவும் கூறியுள்ளார்.

251. 2012 கோடை காலத்தில், தாம் அவரது கோப்பினை மூடுவதற்கு முன்னதாக சில கேள்விகளை கேட்கவேண்டியுள்ள காரணத்தினால் ஜோசப் முகாமிற்கு சென்று அறிவிக்குமாறு சிவனிடம் கூறப்பட்டது. கவலைப்பட வேண்டாம் என்றும் அவர் உடனேயே வீடுதிரும்ப அனுமதிக்கப்படுவார் என்றும் அவரிடம் கூறப்பட்டது. அவர் அதனை நம்பி ஜேசப் முகாமிற்கு சென்றார். ஆனால் அங்கு அவர் ஒரு புதிய அதிகாரிகள் குழுவினரால் தடுத்துவைக்கப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன் மீண்டும் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார்.

252. தமிழீழ விடுதலைப்புலிகளின் பணத்தினை அவர் பெற்றதாக மீண்டும் அவர்கள் அவர் மீது குற்றம் சுமத்தினர். அந்த தொகையினை ஒப்படைக்க மறுத்தால் தாம் அவரை கொழும்பில் உள்ள நான்காம் மாடிக்கு கொண்டுசென்றுவிடப்போவதாக அவர்கள் அவரை அச்சுறுத்தினர். தான் அந்த பணத்தை பெறவில்லை என அவர் மறுத்தபோது அவர்கள் அவரை மழுங்கிய ஒரு பொருளினால் அவரது தலையில் தாக்கினர். அடியின் விசையானது அவரது தாடையை மேசைமீது மோதவைத்து அவரது பல் உடைந்தது. அரை மயக்கநிலையில் அவரது தலை, தாடை மற்றும் வாயில் இரத்தம் வழிய அவர் தரையில் விழுந்தார். அதிகாரிகள் பின்னர் அவரை அவரது அடிவயிறு மற்றும் கவட்டுப்பகுதியில் உதைத்ததுடன் அவர் நினைவிழந்தார்.

253. அவரது குடும்பத்தினரால் பணம் செலுத்தப்பட்டதன் பயனாக இரண்டாவது முறையாக அவர் விடுவிக்கப்பட்டார்.

254. 2013 இளவேனிற்காலத்தில் ஜோசப் முகாமிற்கு சென்று அறிவிக்கும்படி மீண்டும் ஒருமுறை அவரிடம் கூறப்பட்டது. உயிருக்கு பயந்து அவர் இலங்கையை விட்டு வெளியேறியதுடன் இன்று வரையில் திரும்பிச் செல்லவில்லை.

255. அவரது சித்திரவதையாளர்களால் அவர் மீது மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகளினால் ஏற்பட்ட உடல்ரீதியிலான வலியாலும் உளநலப் பாதிப்புகளாலும் அவர் இன்று வரை துன்பப்படுகிறார். கடந்தகால நினைவுகளினூடாகவும் கனவுகளினூடாகவும் அந்த சித்திரவதையினை அவர் அடிக்கடி விடுவிக்கிறார் அது அவரை பதட்டத்துடனும், பயப்பட்டவாறும், சுவாசிக்க சிரமப்பட்டவாறும் நடக்கவைக்கிறது.

## XIII. தற்போது நடைபெறும் தண்டணையிலிருந்தான பாதுகாப்பு

256. பதவியில் இருந்த சகாப்த காலப்பகுதியில் நாடு முழுவதும் அவருக்கு கீழ் இருந்தவர்கள் ஆட்கடத்தல் , சித்திரவதை, மற்றும் கைதிகளை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்ற நம்பத்தகுந்த குற்றச்சாட்டுக்கள் பற்றி கோத்தபாயவிற்கு திரும்பத்திரும்ப அறிவிக்கப்பட்டது. ராஜபக்சாக்கள் அதனை தொடர்ச்சியாக மறுத்து வந்தார்கள். மறுப்புக்கள் ஏற்றுக் கொள்ள முடியாதவையாக மாறிய போது தனக்கு விசுவாசமான நண்பர்களை அல்லது குற்றஞ்செய்தவர்களையே உறுப்பினர்களாக கொண்ட விசாரணை குழுக்களை அமைப்பதை தானே மேற்பார்வை செய்ததுடன்

அவர்கள் ஒரு போதும் உண்மையை அல்லது நீதியை வழங்காத வண்ணம் உறுதி செய்து கொண்டார்.

### A. இலங்கையில் மோசமாகப் பேணப்பட்ட இரகசியம் சித்திரவதைகள் பற்றிய அறிக்கைகள் கோத்தபாயவின் கவனத்திற்கு அடிக்கடி கொண்டு வரப்பட்டன

257 . சித்திரவதைகள் மற்றும் ஏனைய உரிமை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்கள் பல தடவைகள் ராஜபக்ச ஆட்சியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன . அவை எல்லாவற்றையும் முயற்சி செய்து பட்டியலிட்டு ஒரு ஆவணமாக கொண்டு வருவதென்பது மிகப்பெரிய பணியாக இருக்கும்.

258 2005 இற்கும் 2014 இற்கும் இடையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சித்திரவதைகள் பற்றிய 4368 முறைப்பாடுகளைப் பெற்றுக் கொண்டது. அத்துடன் அவை பாதிக்கப்பட்டவர்கள் தாமாக முன்வந்து வழங்கிய சம்பவங்களே இவை. பலர் அவ்வாறு செய்வதற்கு துணியவில்லை.

259 2007 ஆம் ஞேடு சித்திரவதைக்கான ஐ நாவின் விசேட பிரதிநிதி மான்பிரெட் நோவக் இலங்கைக்கு ஒரு விஜயம் மேற்கொண்டதுடன் சாய்த்திய வீதி , பூசா உட்பட முறைப்பாடுகளில் அடைளாயங்காணப்பட்ட பல தடுப்பு நிலையங்களைச் சென்று பார்வையிட்டார். அவருடைய பெப்ரவரி 2008 ஆம் ஆண்டு அறிக்கையில் இலங்கையில் சித்திரவதை பரவலாக இடம்பெறுகின்றது என்றும் அத்துடன் பெற்றோலில் நனைத்த பைகளால் மூச்சுத்திணறச் செய்தல் உட்பட வித்தியாசமான சித்திரவதை முறைகள் இந்த முறைப்பாட்டில் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த அறிக்கையானது ராஜபக்ச அரசாங்கத்திற்கும் அனுப்பப்பட்டது. அது “கருத்துக்களை வழங்கியது”.[1]

260 அமெரிக்க அரச திணைக்களத்தின் 2009 ஆம் ஆண்டிற்கான மனித உரிமைகள் அறிக்கையும் பூசா முகாமில் ரிஜடி இனரால்

கைதிகள் மீது வேறுபட்ட சித்திரவதை முறைகளைப் பயன்படுத்தியதாக விபரித்துள்ளது. 2010, 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டு அறிக்கைகளும் பூசாவில் அதே சித்திரவதை முறைகள் பாவிக்கப்பட்டதாக தெரிவிக்கின்றன அத்துடன் எந்த வித முன்னேற்றங்களும் இல்லை எனவும் சுட்டிக்காட்டுகின்றன.

261 கோத்தபாய அவரது கட்டுப்பாட்டின் கீழ் இருந்த இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வன்முறை பற்றிய குற்றச்சாட்டுக்களையும் எதிர்நோக்கியிருந்தார். 2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்த பின்னர் உயிர் தப்பியவர்களுக்கான இடைத்தங்கல் முகாமில் இந்த பாலியல் வன்புணர்வு தொடர்பான குற்றச்சாட்டுக்கள் உடனடியாகவே வெளிவந்தன. ஒரு தொண்டு நிறுவனத்தின் பணியாளர் இராணுவத்தினர் முகாமிலிருந்து பெண்களைக் கடத்திச் செல்வதாகவும் அவர்களை பாலியல் ரீதியாக துஸ்பிரயோகம் செய்வதாகவும் சனல் 4 செய்திக்கு தெரிவித்தார். வழமைபோல், ராஜபக்ச அரசாங்கம் இது அரசாங்கத்திற்கு எதிரான பரப்புரை என்று கூறி இந்தக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்தது. ஆயினும் கோத்தபாய தனிப்பட்ட ரீதியில் சனல் 04 செய்தியாளரை தொலைக்காட்சியில் தொடர்பு கொண்டு பாலியல் வன்புணர்வு பற்றிய அவருடைய அறிக்கைக்காக நாடுகடத்தப்படுவதாக சொன்னார். “ பொதுமக்களை எனது இராணுவத்தினர் பாலியல் வன்புணர்வு செய்வதாக நீங்கள் குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கின்றீர்கள் ? உமது விசா இரத்துச் செய்யப்படுகின்றது , நீர் நாடுகடத்தப்படுகின்றீர்”

262 இலங்கையின் நிலைமைதொடர்பாக சர்வதேச சமூகத்திற்கு கரிசனையாக இருந்தது எனவே 2014 இல் அமெரிக்காவும் ஏனைய அரசுகளும் 2002 இற்கும் 2011 இற்கும் இடையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள் பற்றிய உத்தியோகபூர்வமான ஐநா விசாரணைக்கான தீர்மானத்திற்கு ஆதரவு வழங்கின. கோத்தபாய

சர்வதேச கண்காணிப்பு தனது நாட்டுக்கு எதிரான நீதியற்றதொன்று என நிராகரித்தார்.

### B. கோத்தபாய நீதியைத் தடுத்ததுடன் குற்றவாளிகளை தண்டனையில் இருந்து பாதுகாக்கும் ஒரு கலாச்சாரத்தினையும் உருவாக்கினார்.

263. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு முகங்கொடுத்த கோத்தபாய சித்திரவதை மற்றும் ஏனைய பாரிய மனித உரிமைகள் மீறல்களை விசாரித்து தண்டணை கொடுத்தல் மற்றும் போர்க்குற்றங்களுக்கு வழக்குத் தெடரும் இராணுவ நீதிமன்றங்களை உருவாக்குதல் உட்பட எல்லா கருவிகளையும் தன்னுடனே வைத்திருந்தார். பதிலாக ஒரு போதும் விசாரணைகள் மேற்கொள்ளப்போவதில்லை என உறுதியாக கூறிவந்தார்: “ நாட்டில் எந்த விசாரணையும் இடம்பெறாது , அதை செய்ய முயற்சி செய்யும் எவரையும் நான் எதிர்ப்பேன்” என தெரிவித்தார். இந்த நாட்டில் பிழைகள் எதுவும் இடம்பெறவில்லை. நான் உங்களுக்கு உறுதி கூறுகின்றேன் நடந்த எது பற்றியும் விசாரணை எதுவும் நடாத்தப்படமாட்டாது”.

264. பாரபட்சமற்ற நீதிக்குப் பதிலான, இலங்கை அரசானது சர்வதேச விசாரணைக்கான அழைப்பினை திசைதிருப்புவதற்காக தொடர்ச்சியான ஆணைக்குழுக்களையும் சபைகளையும் உருவாக்கியது. முதலில் போர் நடத்தப்பட்ட முறைபற்றி விசாரிப்பதற்கு கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு இருந்தது. இதனுடைய ஆரம்ப அமர்வில் அதன் தலைவர் மனித உரிமைகளைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை “இறந்த காலத்தை மறந்து விடுமாறு” சாட்சிகளிடம் சொன்னார்.

265. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் சிபார்சுகளின் தொடர்ச்சியாகவும் ஆயுதம்தாங்காத தனிமனிதர்கள் கூட்டாக இரணுவத்தால் படுகொலை செய்யப்படும்

வீடியோக்கள் வெளிவந்ததையடுத்து அதற்குப் பதிலளிப்பதற்காகவும் அடுத்து ஓர் இராணுவ விசாரணைச் சபை ஏற்படுத்தப்பட்டது. இந்த சபைய போரில் மூலகரத்தாக்காளாக இருந்த நான்கு மூத்த அதிகாரிகளை உள்ளடக்கியிருந்தது, ஆனால் அவர்கள் தாம் எவ்வாறு நடந்துகொண்டார்கள் என்பது பற்றி விசாரித்துக் கொண்டிருந்தார்கள். ஆச்சரியம் இல்லாதவகையில் ‘‘பொதுமக்கள் இழப்பை தவிப்பதற்காக இராணுவத்தினர் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்திருந்தார்கள்’’ என்று தெரிவித்தார்கள்.

266. அதே சமயத்தில், போர்[1] முடிவடைந்த போது இடம்பெற்ற மனித உரிமைகள் குற்றச்சாட்டைப் பற்றி விசாரிப்பதற்கு 2012 ஆம் ஆண்டு 5 உறுப்பினர்களைக் கொண்ட நீதிமன்ற விசாரணை ஒன்று உருவாக்கப்பட்டது. இந்த நீதி மன்றத்திற்கு கோத்தபாய ராஜபக்சவின் நண்பரான ஜெகத்ஜெயசூரியா தலைமை தாங்கினார். 2007 இற்கும் 2009 இற்கும் இடையில் ஜோசப்முகாமின் (சித்திரவதை இடம்) கட்டளையதிகாரியாக இருந்தமையால் இவரும் போர்க்குற்றங்களில் தொடர்புபட்டிருந்தாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். இந்த நீதிமன்ற விசாரணையின் அறிக்கை ஒரு போதும் பகிரங்கப்படுத்தப்படவில்லை ஆனால் அதிர்ச்சியில்லாத வகையில் இராணுவம் தாம் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தது.

267. பாதுகாப்பு செயலாளராக கோத்தபாய உண்மைகளை தடுப்பதற்கும் சட்ட ரீதியான கண்காணிப்பில் இருந்து பாதுகாப்பு படையினரை பாதுகாப்பதற்கும் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு அனுமதிவழங்கியிருந்தார். இந்த விசாரணைகளை கொண்டு நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட அதிகாரிகள் ஆழமான ஆதாய முரண்களைக் கொண்டிருந்தார்கள் என்பது அவருக்கு தெரியும். இந்த மூடிமறைப்பிற்கு அனுமதி அளிப்பதன் மூலம் தன்னுடைய பங்கு பற்றிய ஆதாரங்களும் ஏனைய மூத்த அதிகாரிகளின் பங்கு பற்றிய

ஆதாரங்களும் வெளிச்சத்திற்கு வரமாட்டாது என்பதை உறுதி செய்து கொண்டார்.

268. பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் குற்றஞ்சாட்டப்பட்ட மூத்த அதிகாரிகளுக்கு பதவிஉயர்வு வழங்குவதற்கு அனுமதி வழங்கினாரர் அத்துடன் உலகம் முழுவதும் அவர்களுக்கு இராஜதந்திரப் பதவிகள் வழங்கி அடைக்கலம் கொடுத்ததன் மூலம் அவர்களை வெளிநாட்டு அவ்வலு சர்வதேச அமைப்புக்களின் விசாரணைகள் அல்லது வழக்குத் தொடர்தலில் இருந்து பாதுகாப்பு வழங்கினார். பலவற்றில் இரண்டு உதாரணங்களில் இலங்கையில் 40000 பொதுமக்கள் கொல்லப்பட்டதில் சம்பந்தம் உள்ளதாக ஐநா அதிகாரிகளால் கூறப்பட்ட 58 ஆவது டிவிசன் கட்டளையதிகாரி சவேந்திர சில்வா ஆகஸ்ட் 2010 இல் ஐக்கிய நாடுகளின் பிரதி நிரந்தரப் பிரதிநிதியாக பெயரிடப்பட்டார். ஏப்பிரல் 2012 இல் 55 ஆவது படையணித் தளபதியான பிரசன்ன டி சில்வா யு.கேயிற்கான பாதுகாப்பு அதிகாரியாகப் பெயரிடப்பட்டார் . அவரைப் பற்றிய போர்க்குற்ற கோவை ஸ்க்கொட்லன்ட யாட்டிற்கு அனுப்பப்பட்டும் கூட அவர் பிரிட்டன் பொலிசாரால் விசாரிக்கப்படவில்லை. இந்த அதிகாரிகள் இப்போதும் கடமையில் உள்ளார்கள் கோத்தபாய தானாககே அவர்களுடைய நிமயனங்களையும் அதற்கான ஆமோதிப்புக்களையும் அனுமதித்துள்ளார்.

269 குற்றஞ்செய்தவர்கள் தண்டனையில் இருந்து பாதுகாப்பை அனுபவித்துக் கொண்டிருக்கையில் , காணாமற்போதல்கள் பற்றி அறிவிக்க முயற்சி செய்த கடுப்ப உறுப்பினர்கள் அல்லது ஆணைக்குழுக்களில் சாட்சியம் கொடுத்த பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சர்வதேச அமைப்புக்களுக்கு தகவல் கொடுத்தவர்களும் கடுமையான பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு முகங்கொடுத்தார்கள்.

270 சர்வதேச தொலைக்காட்சியில் கோத்தபாயவே போர்க்குற்றங்களை கண்டசாட்சி ஒருவருக்கு அச்சுறுத்தல் விடுத்தார். நீதிமன்றத்தில் சாட்சியம் கொடுத்தால் சரத் பொன்சேகாவிற்கு என்ன நடக்கும் என்று கேட்கப்பட்ட போது , “அது துரோகம் அவர் அதைச் செய்தால் அவரைத் தூக்கில் போடுவோம” எனறு கோத்தபாய பதிலளித்தார்.

271 இன்று வரை குற்றவாளிகளுக்கு தண்டனையில் இருந்த பாதுகாப்பு வழங்கும் நிலை தொடர்கின்றது. குடத்தல் , சித்திரவதை மற்றும் நீதிக்குப் புறம்பான முறையில் கொல்லுதல் போன்றவை பற்றி அடையாளத்திற்கு சில வழக்குகளை திறந்ததன் மூலம் அரசாங்கமானது மனித உரிமைகளை துஸ்பிரயோகம் செய்தவர்கள் அவற்றுக்கு பொறுப்பு கூறுதலுக்கான உறுதிப்பாட்டை விளம்பரப்படுத்தியிருக்கின்றது. இன்னும் இந்த விசாரணைகளை தலைமைதாங்குவதற்கு ஒதுக்கப்பட்ட அதிகாரியான நிசாந்த டி சில்வா இந்த முறைப்பாட்டில் பல வருடங்களுக்கு முன்னர் அதிகாரிகளுக்கு தெரிந்த ஒரு குற்றச்சாட்டில் ஒரு சித்திரவதையாளராக உள்ளார்.

272.உரிய செயல்முறை அல்லது பாரபட்சமற்ற நீதி பற்றி எந்தவித உறுதிப்பாடுகளையும் பெறமுடியாமல் அத்துடன் தமக்கெதிரான மோசமான பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு தாமும் தமது உறவினர்களும் அஞ்சி இலங்கையின் நீதிமன்றங்களில் உண்மையான விவாரணங்கள் எதையும் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் வழக்குத் தொடுநர்கள் இருக்கிறார்கள்.

## நடவடிக்கை I

## சித்திரவதை

## (எல்லா வழக்குத்தொடுநர்கள்)

273. வழக்குத்தொடுநர்கள் இங்கு குறிப்பிட்டதைப் போல முன்னைய அனைத்துப் பந்திகளிலும் உசாத்துணை மூலம் இணைந்து கொள்கிறார்கள்.

274. மேலே பந்திகள் 54 தொடக்கம் 255 வரை விபரிக்கப்பட்ட செயல்கள் வழக்குத்தொடுநர்களுக்கு உடல் மற்றும் உள ரீதியாக கடுமையான வலியையும் துன்பத்தையும் ஏற்படுத்தியது அத்துடன் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கும் சட்டத்தின் 28 U.S.C. § 1350, note § 3(b)(1), இல் வரையறுக்கப்பட்டது போல் சித்திரவதையையும் உள்ளடக்குகின்றது. இவை எங்கு இவை நடத்தப்பட்டன அல்லது பாதிக்கப்பட்டவர்கள் அல்லது குற்றத்தைப் புரிந்தவர்கள் எந்தநாட்குக் குடியுரிமையைச் சேர்ந்தவர்கள் என்பதை கருதாமல் வெளிநாட்டுச் சட்டத்தினை மீறியதாக மேற்கொள்ளப்பட்ட சித்திரவதை நடவடிக்கைகளுக்கு எதிரான நடவடிக்கையை வழங்குகின்றது.

275. வழக்குத்தொடுநரின் சித்திரவதை ஒன்றிலிருந்து எழவில்லை அத்துடன் அத்தியாவசியமானதாகவோ அல்லது சட்டரீதியான அனுமதிகளுக்கு இணங்க இடம்பற்றதாகவோ இல்லை.

276. இந்தச் செயல்கள் இடம்பெற்ற போது வழக்குத்தொடுநர்கள் இலங்கை இராணுவ உறுப்பினர்களின் அல்லது பொலிஸ்படைகளின் கட்டுப்பாட்டில் அல்லது காவலில் இருந்தார்கள்.

277. இங்கே விபரிக்கப்பட்ட செயல்கள் வேண்டுமென்றும் உள்நோக்கத்துடன் (i)ஒப்புதல் வாக்குதல் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அல்லது வழக்குத்தொடுநர்களிடமிருந்து தகவலைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் (ii) ராஜபக்ச அரசாங்கத்திற்குற்கான அவர்களுடைய அவளிப்படையான எதிர்ப்பிற்காக வழக்குத்தொடுநர்களுக்கு தண்டனை வழங்க அல்லது அச்சுறுத்த அல்லது (iii) இனம், பால், அரசியல் அத்துடன்/அல்லது கலாச்சார அடையாளம் மீதான பாரபட்சம்.

278. பிரதிவாதி, அவரின் துணை அதிகாரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்திலுள்ள துணை சதிகாரர்களின் நடவடிக்கைகள் அவர்களது சட்ட ரீதியான அதிகாரவரம்புக்கு அப்பாற்பட்டவையாகவும் இலங்கையினுடைய சட்டத்தை மீறுபவையாகவும் இருந்தன.

279. இலங்கை அரசியல் யாப்பின் 11 ஆவது சரத்தானது சித்திரவதையில் இருந்து விடுதலையை ஒரு அடிப்படை உரிமையாக உறுதிப்படுத்துகின்றது. 1994 ஆம் ஆண்டு இலங்கையின் சித்திரவதைச் சட்ட இலக்கம் 22 இன் கீழ் சித்திரவதையும் ஒரு குற்றச்செயலாகும். இந்தச் சட்டமானது சித்திரவதை மனிதாபிமானமற்ற மற்றும் கீழ்த்தரமான முறையில் நடத்துதலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கையின் கீழ் சித்திரவதையைத் தடுப்பதற்கான இலங்கையின் சர்வதேச கடப்பாட்டை நடைமுறைப்படுத்துகின்றது.

280. வழக்குத்தொடுநர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சித்திரவதை நடவடிக்கைகள் ஒரு திட்டமிட்ட வடிவத்தின் மற்றும் 2005 இற்கும் 2015 இற்கும் இடையில் இலங்கையின் பொதுமக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் துஸ்பியோகத்தின் ஒரு பகுதியாகவும் உள்ளன. இவற்றுக்கு பிரதிவாதி பொறுப்பாவர்.

## கட்டளைப் பொறுப்பு

281. அநேகமான எல்லா நேரங்களிலும் பாதுகாப்பமைச்சின் செயலாளராக கோத்தபாய இருந்தார். அவ்வாறே , கிட்டத்தட்ட நவம்பர் 2005 இல் இருந்து ஜனவரி 2015 வரை இராணுவம் மற்றும் புலனாய்வுப்படைகளின் மீது கட்டுப்பாட்டையும் கட்டளையும் மேற்கொண்டிருதார். கிட்டத்தட்ட நவம்பர் 2005 தொடக்கம் ஆகஸ்ட் 2013 வரை அவர் பொலிஸ் படைகளுக்கும் கட்டளையையும் கட்டுப்பாட்டையும் மேற்கொண்டார். இது போன்ற படைகள் மீதான பிரதிவாதியின் கட்டளை என்பது கட்டளை வழங்கும் அதிகாரம் மற்றும்

பொறுப்பு கொள்கையை உருவாக்குதல் மற்றும் இந்தப் படைகளின் விவகாரங்களை முகாமைத்துவம் செய்தல் போன்றவற்றை உள்ளடக்கியது. இந்தப் படைகளை இராணுவ நீதிமன்றம் மற்றும் இராணுவ நீதியின் வேறு வடிவங்கள் உட்பட நியமித்தல், அமோதித்தல், அகற்றுதல் , ஆளனிகளின் ஒழுக்கம் என்பவற்றுக்கான அதிகாரத்தையும் கொண்டிருந்தார்.

282. கோத்தபாய இந்தப் படைகளின் உதவி அதிகாரிகள் மீது முனைப்பான கட்டுப்பாட்டை மேற்கொண்டார். அவர் உண்மையில் கட்டளைகளை வழங்கினார் , அறிக்கைகளைப் பெற்றுக் கொண்டார், கீழ்ப்படிதலை கண்காணித்தல் அத்துடன் குறிப்பிட்ட சில வடிவிலான தவறான நடத்தைகளுக்கு தண்டனை கொடுக்கும் அதேவேளையில் ஏனையவற்றை சகித்துக் கொள்ளுதல் போன்றவற்றை மேற்கொண்டார்.

283. கோத்தபாய அவரது கட்டளையின் கீழ் இருந்த அதிகாரிகள் சித்திரவதை, பாலியல் வன்புணர்வு ,வலிந்து காணாமற்போதல்கள் மற்றும் சர்வதேச மற்றும் இலங்கைச் சட்டத்தின் ஏனைய மீறல்களை செய்தார்கள் அல்லது செய்துகொண்டிருந்தார்கள் என்பது பற்றி உண்மையாக அறிந்திருந்தார்.

284. பாதுகாப்பமைச்சின் கட்டளை கட்டுப்பாடு மற்றும் தொடர்பாடல்முறைகளின் விளைவாக கோத்தபாய நியாயமானமுறையில் அவரது கட்டளையின் கீழ் இருந்த படைகள் சித்திரவதை , பாலியல் வன்புணர்வு, வலிந்து காணாமற்போதல் மற்றும் ஏனைய மீறல்களில் ஈடுபட்டிருந்தனர் அல்லது ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள் அல்லது எதிர்வுகூறக்கூடிய வகையில் ஈடுபடப்போகிறார்கள் என்பதை அறிந்திருக்க வேண்டும்.

285. பாதுகாப்புச் செயலாளராக கோத்தபாய ராஜபக்ச சர்வதேச மற்றும் இலங்கைச் சட்டத்தின் கீழ் அவரின் கட்டளையின் கீழ் இருந்த படையினர் அனைவரும் சித்திரவதை வலிந்து காணாமற்போதல்கள், பாலியல் வன்புணர்வு பாலியல் அடிமைத்தனம் , போர்க்குற்றங்கள்,

மனிதநேயத்திற்கு எதிரான குற்றங்கள் உட்பட இலங்கை மற்றும் சர்வதேச சட்டத்திற்கிணங்க பயிற்றுவிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றுக்கு கீழ்ப்படிந்து நடந்து கொள்கிறார்கள் என்பதை உறுதி செய்யும் கடமையைக் கொண்டிருந்தார்.

286. பாதுகாப்பமைச்சின் செயலாளராக கோத்தபாய அவரது கட்டளையின் கீழ் இராணுவம் , புலனாய்வு மற்றும் பொலிஸ்படைகளின் உறுப்பினர்களல் ஈடுபட்ட சர்வதேச மற்றும் இலங்கைச் சட்ட மீறல்களை விசாரிக்கும், அவற்றைத் தடுக்கும் மற்றும் தண்டிக்கும் கடமையைக் கொண்டிருந்தார்.

287. கோத்தபாய இங்கு விபரிக்கப்பட்ட துஸ்பிரயோகங்களை தடுப்பதற்கு அல்லது இது போன்ற துஸ்பிரயோகங்களில் ஈடுபட்டமைக்காக தனக்கு உதவியாக இருந்தவர்களை விசாரித்து தண்டிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கத்தவறிவிட்டார் அல்லது எடுக்க மறுத்துவிட்டார். எனவே கோத்தபாய கட்டளைப் பொறுப்பு கொள்கையின் கீழ் பொறுப்புக்கூற வேண்டியவராக இருக்கின்றார்.

## சதி

288. அரசியல் எதிர்ப்பை நசுக்கவும் தமிழ் மக்களை தண்டிப்பதற்கு வன்முறையையும் அச்சுறுத்தலையும் பிரயோகிப்பதற்கு ஒரு பொதுவான திட்டத்த்திற்கிணங்க கோத்தபாய சதித்திட்டம் செய்தார் அத்துடன் பாதுகாப்பமைச்சின் ஏனைய அதிகாரிகளுடன் சேர்ந்து வெளிப்படையான முறையில் செயற்பட்டார்.

289. கோத்தபாய இந்த சதிநடவடிக்கையின் தொடர்ச்சியாக பல்வேறுவிதமான வெளிப்படையான பின்வரும் செயல்களில் சம்பந்தப்பட்டுள்ளார் , ஆனால் அவை அவற்றுடன் மட்டுப்படுத்தப்பட்டதாக இல்லை:

a. ஆச்சுறுத்துவதன் மற்றும் சாட்சியாளருடன் குறுக்கிடுவதன் மூலம் உரிய நீதியின் நிர்வாகத்தை தடுத்தல், தாமதப்படுத்தல் அல்லது செல்வாக்குச் செலுத்த முயற்சி செய்தல் , அத்துடன்

b. கைது, வழக்கு அல்லது தண்டனையை தடுத்தல் அல்லது பாதிப்படையச் செய்யக்கூடியதாக குற்றம்புரிந்தவர்களுக்கு உதவுதல்.

290. தோடர்சியான தமது சதி நடவடிக்கையில் மேற்கொண்ட தனது துணை அதிகாரிகளின் நடவடிக்கைகளுக்கு கோத்தபாயவே கூட்டாகவும் மற்றும் தனியாகவும் பொறுப்புக்கூறவேண்டியவராவார்.

**உதவுதல் மற்றும் உடந்தையாக இருத்தல்**

291. இங்கு கூறப்பட்ட சட்ட விரோதச் செயல்களைப் புரிவதற்கு கோத்தபாய தனது உதவி அதிகாரிகளுக்கு உதவியுள்ளார் , உடந்தையாக இருந்துள்ளார், அல்லது ஆதரவுவழங்கியுள்ளார் அல்லது ஊக்கமளித்துள்ளார் அத்துடன் அவர்கள் அதனைப் புரிவதற்கு முக்கிய காரணியாக இருந்துள்ளார். இந்த உதவி அல்லது ஊக்கம் என்பது மற்றையவற்றுக்கு மத்தியில் , அரசியல் எதிரியாக கருதப்பட்டவர்கள் மற்றும் தமிழ் மக்களை அடக்குவதை ஊக்கிவிப்பதற்கு இலங்கை சட்டத்தினையும் இராணுவ நீதியையும் தேர்ந்தெடுத்து அமுல்படுத்துதல். தேர்ந்தெடுத்து அமுல்படுத்தல் என்பது உள்ளடக்குவது:

a. சித்திரவதையை நிறுத்தவும் , பாதிக்கப்பட்டவர்களை விடுதலை செய்யவும் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்தும் அவர்களது குடும்பங்களிடமிருந்தும் இலஞ:சப் பணத்தை மிரட்டிப் பெற அனுமதித்தல் - இதன்மூலம் சித்திரவதை முகாம்களில் இருந்த குற்றம் இழைத்தவர்களுக்கு ஒரு நிதி வெகுமானங்கள் பெற்றுக்கொள்ளும் முறை ஒன்று உருவாக வழிவகுத்தது.,

b. இராணுவ முகாம்களில் பாலியல் அடிமைத்தனம் உள்ளிட்ட பாலியல் வன்முறை மற்றும் வேறு வடிவிலான பாலியல் வன்முறைகளுக்கு அனுமதித்தல் - பாதிக்கப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்கும் ஒரு வடிவம் என்பதைவிட் இது குற்றம் புரிபவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் ஒரு வெகுமதி முறையை உருவாக்கியது.

## முகவராண்மை

292. கூடுதலான எல்லா நேரங்களிலும் கோத்தபாயவிற்கும் அவரது உதவி அதிகாரிகள், முகவர்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தில் இருந்த சக சதிகாரர்களுக்கும் இடையில் உண்மையான அல்லது செல்வாக்கானது எனக் கருதப்பட்ட உறவுமுறை ஒன்று இருந்துள்ளது.

293. இங்கு விபரிக்கப்பட்ட சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட இராணுவம், புலனாய்வுதுறை மற்றும் பொலிஸ் படைகளின் உறுப்பினர்கள் இந்த முகவராண்மை வரையெல்லைக்கு உட்பட்டே செயற்பட்டார்கள். தமிழ் மக்களை தண்டிக்கவும் அரசியல் எதிர்ப்பினை அடக்கவும் வழக்குத்தொடுநர்களை துஸ்பிரயோகம் செய்தவர்கள் பிரதிவாதியின் பொதுதிட்டத்தின் நலனுக்காக பிரதிவாதியின் உண்மையான அல்லது வெளிப்படையான அதிகாரத்தின் கீழ் செயற்பட்டார்கள்.

294. மேலும், இங்கே குறிப்பிடப்பட்ட செயல்கள் உட்பட இராணுவம் , புலனாய்வு மற்றும் பொலிஸ்படைகளின் உறுப்பினர்களால் திட்டமிட்ட வடிவில் மற்றும் முறையில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் துஸ்பிரயோகங்களுக்கு கோத்தபாயவினால் அனுமதி வழங்கப்பட்டது. அவருடைய கட்டுப்பாட்டின் கீழ் இருந்த முகவர்களினால் இது போன்ற சட்டவிரோதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மீண்டும் அறிவிக்கப்பட்டதுடன் அவர்

அவர்களுக்கு அவற்றைச் செய்வதற்கு அனுமதித்ததுடன் , ஊக்கப்படுத்தி அவர்களை பாதுகாத்தும் உள்ளார்.

295. 26 யூன் 2009 இற்கு முன்னர் சித்திரவதைக்குட்பட்ட அனைத்து வழக்குத்தொடுநர்கள் தொடர்பிலும் பொருந்தக்கூடிய சட்டங்களின் வரையறைகள் பின்வரும் விதிவிலக்கான சூழ்நிலைகளால் நீடிக்கப்படுகின்றன, அவற்றில் (1) அவர்களது சித்திரவதை மற்றும் துஸ்பிரயோகம் தொடர்ந்து இடம்பெறும் குற்றமாக இருத்தல், (2) ஜனவரி 2015 வரை பிரதிவாதி இராணுவ மற்றும் பொலிஸ்படையினரின் கட்டுப்பாட்டை தக்கவைத்தல் (3) பதவியை விட்டுச் சென்ற பின்னர் பிரதிவாதி எப்போதும் இருந்துவிட்டு அமெரிக்காவிற்கு பயணம் மேற்கொள்ளுதல். இந்த மூன்று சூழ்நிலைகளும் முன்னைய ஒரு திகதியில் வழக்குத்தொடுநர்கள் இந்த நடவடிக்கையைக் கொண்டு வருவது பாதுகாப்பற்றதாகவும் நடைமுறைச் சாத்தியமற்றதாகவும் ஆக்கியது. *Hilao v. Estate of Marcos*, 103 F.3d 767, 773 (9th Cir. 1996) இனைப் பார்க்கவும் (முன்னாள் ஜனாதிபதி பதவியை விட்டுச் செல்லும் வரை மனித உரிமைகள் வழக்குகளிற்காக வரையறைகள் நீடிக்கப்படுதல்)

296. அவர்களது சித்திரவதையின் ஒரு நேரடி மற்றும் அண்மித்த விளைவாக , வழக்குத்தொடுநர்கள் பாரிய சேதத்தினை சந்தித்திருக்கிறார்கள் , சரியான தொகை வழக்கில் தீர்மானிக்கப்படும்.

297. இதை விட , பிரதிவாதியின் செயல்களும் தவிர்ப்புகளும் வேண்டும் என்றும் , திட்டமிட்டவையாகவும், உள்நோக்கம் கொண்டவையாகவும் , கொடூரமானதாகவும் மற்றும் ஒடுக்குமறையானதாகவும் இருந்தன, அத்துடன் பிரதிவாதி வழக்கில் தீர்மானிக்கப்பட்ட தண்டனை நட்டஈட்டு தொகை மூலம் தண்டிக்கப்பட வேண்டும்.

## நடவடிக்கை II

## தாக்குதல்

## (எல்லா வழக்குத்தொடுநர்கள்)

298. பிரதிவாதியின், அவரின் உதவி அதிகாரிகள், முகவர்கள் மற்றும் சக சதியாளர்கள் என மேலே 54 தொடக்கம் 255 வரையான பத்திகளில் விபரிக்கப்பட்ட சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகள் வழக்குத்தொடுநர்களுக்கு தீங்கு ஏற்படும் வகையில் அல்லது பகைமையான தொடர்பை கொண்டிருந்தனர், அல்லது வழக்குத்தொடுநர்களுக்கு தீங்கு ஏற்படும் அல்லது பகைமையான வழியில் அச்சுறுத்தல்களாக இருந்தார்கள். பிரதிவாதியின் உதவி அதிகாரிகள் , முகவர்கள் மற்றும் இணை சதிகாரர்கள் வழக்குத்தொடுநர்களை தீங்கு ஏற்படும் முறையில் அல்லது பகைமையான முறையில் தொட இருந்தார்கள் அல்லது அச்சுறுத்தலை மேற்கொள்ள இருந்தார்கள் என நியாயமான வகையில் நம்பினார்கள்.

299. இந்த சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகள் , முயற்சிகள் மற்றும் அச்சுறுத்தல்கள் தீங்கிழைப்பவையாக அவர்களின் சம்மதம் இல்லாமலும் இருந்துள்ளன. அத்துடன் அவர்கள் நேரடியாக அல்லது கிட்டத்தட்ட வழக்குத்தொடுநர்களுக்கு அச்சம், உளவியல் ரீதியான துன்பம் மற்றும் உணர்வு ரீதியான உழைச்சலை ஏற்படுத்தியது.

300. மேலே பத்திகள் 54 தொடக்கம் 255 இல் கூறப்பட்டதைப் போல பிரதிவாதி தனது கட்டளைப் பொறுப்பினை கூட்டுச் சதி செய்ய, வழக்குத்தொடுநர்களுக்கு எதிராக தாக்குதல்களை மேற்கொண்ட நபர்களுடன் முகவர் - அதிபர் உறவைக் கொண்டிருந்ததுடன் அவர்களுக்கு ஆதரவும் உதவியும் வழங்கியுள்ளார். அத்துடன் பொருத்தமான சட்டத்தின் காலவரையறைகள் நீடிக்கப்படுகின்றன.

301. வழக்குத்தொடுநர்கள் இழப்பீட்டுத் தொகையாக 75000 டொலர்களுக்கு மேல் பெற்றுக் கொள்ளும் உரிமையைக் கொண்டுள்ளார்கள் , சரியான தொகை வழக்கின் போது தீர்மானிக்கப்படும்.

302. இதனைவிட, பிரதிவாதியின் நடவடிக்கைகள் மற்றும் தவிர்ப்புகள் என்பன திட்டமிட்டவையாகவும், உள்நோக்கம் கொண்டவையாகவும் , கொடூரமானதாகவும் மற்றும் ஒடுக்குமறையானதாகவும் இருந்தன, அத்துடன் பிரதிவாதி வழக்கில் தீர்மானிக்கப்பட்ட தண்டனை நட்டஈட்டு தொகை மூலம் தண்டிக்கப்பட் வேண்டும்.

## நடவடிக்கை III

## சம்மதமின்றி தீண்டுதல்

## (எல்லா வழக்குத்தொடுநர்கள்)

303. பத்திகள் 54 தொடக்கம் 255 வரையானவற்றில் விபரிக்கப்பட்ட பிரதிவாதியின் உதவி அதிகாரிகள் , முகவர்கள் மற்றும் இணை சதிகாரர்கள் வழக்குத்தொடுநர்களை தீங்கு ஏற்படுத்தும் நோக்குடன் அல்லது பகைமையான வழியில் நடத்தியுள்ளார்கள்.

304. இந்தச் சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகள் கொடூரமானவையாகவும், சம்மதமின்றி மேற்கொள்ளப்பட்டவையாகவும் இருந்தன அத்துடன் அவர்கள் வழக்குத்தொடுநர்களுக்கு நேரடியாக மற்றும் கிட்டத்தட்ட கடுமையான உடல் , மனநிலை ரீதியான வலியினையும் உணர்வு ரீதியான உழைச்சலையும் ஏற்படுத்தியது.

305. 54 தொடக்கம் 255 வரையான பத்திகளில் கூறப்பட்டது போல் பிரதிவாதி கட்டளைப் பொறுப்பினை கூட்டுச் சதி செய்ய, வழக்குத்தொடுநர்களுக்கு எதிராக தாக்குதல்களை மேற்கொண்ட நபர்களுடன் முகவர் - அதிபர் உறவைக் கொண்டிருந்ததுடன் அவர்களுக்கு ஆதரவும் உதவியும் வழங்கியுள்ளார். அத்துடன் பொருத்தமான எல்லா சட்ட வரையறைகளும் தாமதப்படுகின்றன.

306. வழக்குத்தொடுநர்கள் இழப்பீட்டுத் தொகையாக 75000 டொலர்களுக்கு மேல் பெற்றுக் கொள்ளும் உரிமையைக்

கொண்டுள்ளார்கள் , சரியான தொகை வழக்கின் போது தீர்மானிக்கப்படும்.

307. இதனைவிட, பிரதிவாதியின் நடவடிக்கைகள் மற்றும் தவிர்ப்புகள் என்பன திட்டமிட்டவையாகவும், உள்நோக்கம் கொண்டவையாகவும் , கொடூரமானதாகவும் மற்றும் ஒடுக்குமறையானதாகவும் இருந்தன, அத்துடன் பிரதிவாதி வழக்கில் தீர்மானிக்கப்பட்ட தண்டனை நட்டஈட்டு தொகை மூலம் தண்டிக்கப்பட வேண்டும்.

## நடவடிக்கை IV

## உணர்வு ரீதியான பாதிப்பினை வேண்டுமென்றே ஏற்படுத்தல்

## (எல்லா வழக்குத்தொடுநர்கள்)

308. வழக்குத்தொடுநர்களை தன்னிச்சையான தடுத்து வைத்தல், மற்றும் உடல் , உள மற்றும் பாலியல் ரீதியிலான துஸ்பிரயோகங்கள் உட்பட்ட பிரதிவாதியின் உதவி அதிகாரிகளின் , முகவர்கள் மற்றும் இணை சதிகாரர்களின் செயல்கள் மிகவும் மூர்க்கமானதாகவும் அத்துடன் மனச்சாட்சிக்கே அதிர்ச்சி கொடுப்பனவாகவும் இருந்தன. வுழக்குத்தொடுநர்களை துஸ்பிரயோகம் செய்தவர்கள் அவர்கள் கடுமையான உணர்வு ரீதியான துன்பத்தை ஏற்படுத்த உத்தேசித்திருந்தார்கள்.

309. இங்கு விபரிக்கப்பட்ட செயல்கள் வழக்குத்தொடுநர்களுக்கு நேரடியாக மற்றும் கிட்டத்தட்ட மனவேதனை மற்றும் துன்பத்தை அனுபவிக்கச் செய்தது.

310. 54 தொடக்கம் 255 வரையான பத்திகளில் கூறப்பட்டது போல் பிரதிவாதி கட்டளைப் பொறுப்பினை கூட்டுச் சதி செய்ய, வழக்குத்தொடுநர்களுக்கு எதிராக தாக்குதல்களை மேற்கொண்ட நபர்களுடன் முகவர் - அதிபர் உறவைக் கொண்டிருந்ததுடன்

அவர்களுக்கு ஆதரவும் உதவியும் வழங்கியுள்ளார். அத்துடன் பொருத்தமான சட்டத்தின் காலவரையறைகள் நீடிக்கப்படுகின்றன.

311. வழக்குத்தொடுநர்கள் இழப்பீட்டுத் தொகையாக 75000 டொலர்களுக்கு மேல் பெற்றுக் கொள்ளும் உரிமையைக் கொண்டுள்ளார்கள் , சரியான தொகை வழக்கின் போது தீர்மானிக்கப்படும்.

312. இதனைவிட, பிரதிவாதியின் நடவடிக்கைகள் மற்றும் தவிர்ப்புகள் என்பன திட்டமிட்டவையாகவும், உள்நோக்கம் கொண்டவையாகவும் , கொடூரமானதாகவும் மற்றும் ஒடுக்குமறையானதாகவும் இருந்தன, அத்துடன் பிரதிவாதி வழக்கில் தீர்மானிக்கப்பட்ட தண்டனை நட்டஈட்டு தொகை மூலம் தண்டிக்கப்பட் வேண்டும்.

## நிவாரணத்திற்கான பிராத்த்தனை

சட்டத்தினால் அனுமதிக்ப்பட்ட அளவிற்கு வழக்குத்தொடுநர்கள் பிரதிவாதிக்கு எதிரான தீர்ப்பினை நாடி நிற்கின்றனர் அத்துடன் நிரூபணத்திற்கிணங்க பின்வரும் நிவாரணங்களையும் நாடிநிற்கின்றனர்.

(a) சேதத்திற்கான இழப்பீடு

(b) தண்டனை இழப்பீடு மற்றும்

(c) வழக்கறிஞருக்கான நியாயமான கட்டணம் , செலவுகள்

(d) நீதிமன்னறம் நீதி மற்றும் சரியானது என எண்ணும் ஏனைய நிவாரணம்

திகதி : July 9, 2019